தர்மசக்கரம்















ரௌத்திரி ௵ பங்குனி ௴ சக்கரம் 30 ஆரம் 3

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

அந்தர்யோக விவரங்கள்

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 22—3—81 ஞாயிற்றுக்கிழமை
இடம்: வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

கோவை ஜில்லா—குருந்தமலையில் 22—3—81 ஞாயிற்றுக்கிழமை
இடம்: குழந்தை வேலாயுத சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு நேரில் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

கோவை ஜில்லா—குமரன்குன்றில் 23—3—81 திங்கட்கிழமை
இடம்: அருள்மிகு கல்யாண சுப்பிரமணிய சுவாமி ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—மேலூரில் 28—3—81 சனிக்கிழமை
இடம்: சபரிமலை ஐயப்ப சுவாமி பிரார்த்தனை மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—காமயகவுண்டன்பட்டியில் 29—3—81 ஞாயிற்றுக்கிழமை
இடம்: பாட்டையா கோவில் காமதேனு மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 29—3—81 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஸ்ரீ சாரதா சேவாச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

தஞ்சை ஜில்லா—அம்மாபேட்டையில் 29—3—81 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி வேதானந்தர்
உணவு வசதி: காலை 9 மணிக்குள் தெரிவித்தால் உணவு வசதி செய்து தரலாம்.

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 5—4—81 ஞாயிற்றுக்கிழமை
இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

பெரியார் மாவட்டம்—பவானியில் 5—4—81 ஞாயிற்றுக்கிழமை
இடம்: பவானி—ஈரோடு மெயின் ரோடிலுள்ள ராஜாராம் அய்யர் குட்டிச் செட்டியார் தோப்பு (காலிங்கராயன் வாய்க்காலுக்குத் தென்புறம்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

[தொடர்ச்சி பொருளடக்கத்தின் கீழ் பார்க்க]

முத்தமிழ்ப் பணை 13.3.81

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30	ரௌத்திரி ஞு பங்குனி மீ	ஆரம் 3

பொருளடக்கம்

வருட சந்தா: உள்நாடு ரூ. 12-00 வெளிநாடு ரூ. 25-00
தனி இதழ் „ ரூ. 1-25 „ ரூ. 2-25

ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு டிபாசிட் செய்துவிட்டால் தொடர்ந்து மாதந்தோறும் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாசிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். டிபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

கோவை ஜில்லா—அன்னூரில் 5—4—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: மன்னீஸ்வரர் தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

திருச்சி ஜில்லா—துறையூரில் 5—4—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி



இறைவன் திருவருளால் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் சமாதிக் கோயில் புதுப்பித்தல் திட்டம் மங்களகரமாக நிறைவேறியுள்ளது. பொருள்கள் விலை அதிவேகம் ஏறிக்கொண்டு வருவதாயிற்று. அதற்கேற்றபடி நன்கொடைகளும் தாராளமாக வந்துகொண்டிருந்தன. மூன்று கட்டடங்களுக்கு ஆன செலவை விரைவில் தர்ம சக்கரத்தின் மூலம் தெரிவிக்கின்றோம். மேற்கொண்டு இத்திருப்பணிக்குப் பொருள் உதவி தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

1981 பிப்ரவரி மாத நன்கொடை விவரம் வருமாறு:

விலாசம்		ரூபாய்
1981 ஜனவரி மாதம் முடிய நன்கொடை வசூல்		*10 27 240*
ஸ்ரீ M. மாலுசாமி	மலேசியா	*500*
,, T. S. செல்வராஜு	அப்புசெட்டி தெரு, சேலம்	*250*
மகாத்மா ஸ்ரீ தாயுமானசுவாமி சபை	உதகமண்டலம்	*250*
ஸ்ரீ T. அசோக் பாபு	ரயில்வே பீடர் ரோடு, விருதுநகர்	*200*
,, K. K. ரமேஷ்	கப்லாம்பாடி, தென்னாற்காடு மாவட்டம்	*150*
சன்மார்க்க சபா	சாவகச்சேரி, சிலோன்	*110*
மகாத்மா ஸ்ரீ தாயுமானசுவாமி சபை அங்கத்தினர்கள்	உதகமண்டலம்	*106*
ஸ்ரீ Sub. K. ராஜன்	கம்ப்டி, மகாராஷ்டிரா	*101*
பால்ராஜ் மேட்ச் பேக்டரி	சிவகாசி	*101*
ஸ்ரீமதி சாரதா சுப்ரமணியன்	பள்ளத்து மாரியம்மன் தெரு, முசிறி	*101*
ஸ்ரீமதி மஞ்சுளா இளங்கோவன்	சின்னசெட்டித் தெரு, திருச்சி	*100*
ஸ்ரீ M. ராஜு & சன்ஸ்	காட்டூர், கோவை	*100*
,, P. K. ராமராஜ்	காட்டன் மெர்சன்ட், ராஜபாளையம்	*100*
,, S. N. நாகமணி நாயக்கர் & கோ,	,, கீழப்பூவானி	*100*
,, S. R. ராமகிருஷ்ண ஐயர் பர்ம்	,, கழுகுமலை	*100*
,, பாலாஜி காட்டன் கம்பெனி	,, ராஜபாளையம்	*100*
,, P. P. A. ராம சுப்பையா	,, கீழப்பூவானி	*100*
,, T. A. ஐயப்ப நாயக்கர்	,, தொட்டப்பாறை	*100*
M/s. K. N. சுந்தரராஜ் நாயக்கர் & பிரதர்ஸ்	,, எட்டயபுரம்	*100*
ஸ்ரீ P. குருசாமி ரெட்டியார்	காட்டுநாயக்கன்பட்டி	*100*
M/s. T. பெருமாள்சாமி நாயக்கர் & பிரதர்ஸ்	ராஜபாளையம்	*100*
ஸ்ரீ இரா. ந. சுப்ரமணியம்	அரூர், தருமபுரி	*100*
ரூபாய் நூறுக்குக் கீழ் வந்த நன்கொடைகள்		*224*
	ஆகக் கூடுதல் ரூ.	*10 30 533*

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

*அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.*

சக்கரம் 30	ரௌத்திரி ௵ பங்குனி ௴	ஆரம் 3

பிரார்த்தனை

हे पार्वतीहृदयवल्लभ चन्द्रमौले भूताधिप प्रमथनाथ गिरीशजाप ।
हे वामदेव भव रुद्र पिनाकपाणे संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥

— शंकराचार्य

ஹே பார்வதீ ஹ்ருதயவல்லப சந்த்ரமௌலே
பூதாதிப ப்ரமதநாத கிரீசஜாப ।
ஹே வாமதேவ பவ ருத்ர பினாகபாணே
ஸம்ஸார து:ககஹனாஜ்ஜகதீச ரக்ஷ ॥

— *சங்கராச்சாரியர்*

பார்வதியின் உள்ளத்தைக் கவர்பவனே, சந்திரனை அணிந்திருப்பவனே, உயிர்களுக்கு இறைவா, பைரவர்களுக்குத் தலைவா. மலையரசே, வாமதேவனே, ருத்ரனே, பவனே, பினாகம் என்னும் வில்லை உடையவனே, பிறவிப் பெருங்கடலில் துக்கத்தால் தத்தளிக்கின்ற என்னைக் காத்தருள்வாயாக.

நீர்பூத்தவேணி நிலவுஎறிப்ப மன்றுஆடும்
கார்பூத்த கண்டனையான் காணுநாள் எந்நாளோ.

— *தாயுமானவர்*

அருள் விருந்து

வீண் பெருமை படைத்தவன் முக ஸ்துதிக்கு இலக்காகிறான்.

நாம் அடையும் மேன்மை நமது மனநிலையைப் பொறுத்ததாம்.

இயந்திரம் புகுந்து மனிதனுடைய ஆற்றலையும் பண்பையும் பாழ்படுத்தலாகாது.

அவரவர் கையாளுகிற சன்மார்க்கம் அவரவர்க்கு நல்லதென்பதை மறவாதே.

இவ்வையகம் சம்பந்தமான யாவும் நிலையற்றவை. இதை அறிந்துகொள்பவன் விவேகி.

அருளைச் சார்ந்திருக்கத் தெரிந்துகொள்ளுவது இப்பிரபஞ்ச வாழ்வின் முடிவான குறிக்கோளாம்.

நம்பத்தகாதவனை நம்புவது அஹிம்சை. அதன் வாயிலாக நம்பத்தகுதியற்றவன் தகுதியுற்றவனாகிறான்.

இன்பமும் துன்பமும் இணைபிரியாதவைகள். இவ்வுலக இன்பத்தை நாடுபவன் துன்பத்தைத் தவிர்க்கமுடியாது.

ஆசையினால் தூண்டப்படுபவன் போராடுகிறான்; தூய அன்பினால் தூண்டப்படுபவன் அமைதியுற்றிருக்கிறான்.

மிகக் கடினமான பொருளையும் உஷ்ணம் உருக்குகிறது. அங்ஙனம் கல்நெஞ்சக்காரனைப் பேரன்பு உருக்குகிறது.

தொண்டனாயிருக்க ஆசைப்படு. தலைவனாக இருக்க ஆசைப்பட்டால் அந்த ஆசை உன்னைக் கீழ்மையில் ஆழ்த்திவிடும்.

பிறப்பை முன்னிட்டுத் தற்பெருமை பூணுபவன் அந்தணன் ஆகான்; பண்பட்டவன் எதைக் குறித்தும் தற்பெருமை கொள்ளான்.

பிறரைத் தோற்கடிப்பவன் ஒரு நாள் தானே தோற்கடிக்கப்படுவான். தன் சிறுமையைத் தோற்கடிப்பவன் ஒருநாளும் தோல்வியடையான்.

சாதாரண வேளையில் நல்லவனாயிருப்பது எளிது. நெருக்கடியிலும், கஷ்டதசையிலும், சோதனையிலும் நல்லவனாயிருப்பவனே பண்பட்டவன்.

வீடு இடிந்துபோனால் மனிதன் மற்றொரு வீடு கட்டிக்கொள்ளுகிறான் சரீரம் செத்துப்போனால் ஆத்மா மற்றொரு சரீரம் எடுத்துக்கொள்ளுகிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் கிரீஷ் சந்திரகோஷுடன் உரையாடிக்கொண்டிருக்கிறார். அன்னவரைப் பரமஹம்சதேவர் பார்த்தபொழுது அவருடைய ஆனந்த பரவச நிலை மேலும் அதிகரிப்பதாயிற்று. அந்நிலையில் அவர்பாடியதாவது: 'அபயத்துக்கு இருப்பிடமாகிய அன்னை பராசக்தியின் திருவடிகளில் என்னை நான் அர்ப்பணித்துள்ளேன். ஆகையினால் எனக்கு இனி மரண பயம் ஏது? அன்னை பராசக்தியின் திருநாமமாகிய மந்த்ரம் எல்லாம் வல்லது அது என் தலையிலிருக்கும் குடுமியில் கட்டப்பட்டுள்ளது. என்னுடைய உடலை உலகத்தவர்களுடைய வாழ்வு முறை என்னும் சந்தைக்கடையில் விலைக்கு விற்றுவிட்டேன். அங்ஙனம் எனக்குக் கிடைத்த பணத்தைக்கொண்டு அன்னை துர்க்காதேவியின் நாமத்தை நான் விலைக்கு வாங்கியுள்ளேன்.'

ஆனந்த பரவசத்தின் விளைவாக அதே கூற்றை மீண்டும் பகர்கிறார். 'என்னுடைய உடலை உலகத்தவர்களுடைய வாழ்வு முறை என்னும் சந்தைக் கடையில் விலைக்கு விற்றுவிட்டேன். அங்ஙனம் எனக்குக் கிடைத்த பணத்தைக் கொண்டு அன்னை துர்க்காதேவியின் நாமத்தை நான் விலைக்கு வாங்கியுள்ளேன்.'

கிரீஷ்சந்திரகோஷரையும் மகேந்திரநாத குப்தரையும் பார்த்துப் பரமஹம்சர் பகர்ந்ததாவது: "ஆனந்த பரவசம் என் மேனியெங்கும் வியாபித்திருக்கிறது. அது என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போகிறது."

"ஈண்டு உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போகிறது என்பதன் பொருள் உலகத்தைப் பற்றிய உணர்வு அழிந்துபட்டுப் போகிறது என்பதாம். பாடலிலே பரமஹம்சதேவர் என்னுடைய உடலை உலகத்தவர்களுடைய வாழ்வு முறை என்னும் சந்தைக் கடையில் விலைக்கு விற்றுவிட்டேன் என்னும் கருத்துப்பட பாடினார். அதனுடைய உட்பொருள் உடலை நான் என்று கருதும் தேகாத்ம புத்தியைத் தாண்டி இருப்பவனே ஆத்ம சாதனத்துக்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவன் என்பதாம். பிரம்மஞானத்தைப் பெறுவது முற்றிலும் அவசியமானது.

பரமஹம்சதேவர்: "பக்தி ஒன்றே சாதகன் ஒருவனுக்கு முற்றிலும் அவசியமாகிறது. சிறிதளவு உலக ஆசைகளோடு கலந்துள்ள பக்தி ஒருவிதப் பாங்குடையது. அதிலும் மேலானதாக மற்றொருவித பக்தி இருக்கிறது அது தூய பக்தி. அத்தகைய பக்தி கடவுளிடத்திருந்து கைம்மாறு எதையும்எதிர்பார்ப்பதில்லை. பிரம்ம சமாஜத்து அங்கத்தினர்களும் அவர்களுக்குத் தலைவராயிருக்கின்ற கேசவசந்திரசேனரும் கைம்மாறு கருதாத தூய பக்தி ஒன்று இருக்கிறதென்பதை அறிந்திலர். அதற்குக் காரணம் அவர்கள் உலகப்பற்றை அறவே ஒதுக்கியவர்கள் அல்லர். பராபக்தியில் உலக ஆசை எதற்கும் இடமில்லை. இறைவனுடைய திருவடிகளில் அழ்ந்து புதைந்து கிடக்கும் பேரன்பே தூயபக்தி எனப்படுகிறது.

"மற்றும் ஒருவித பக்தியிருக்கிறது. அதற்கு ஆர்ஜித பக்தி என்று பெயர். அது பொங்கித் ததும்பிக்கொண்டிக்கும் பராபக்தி. அத்தகைய ஆர்ஜித பக்தி உருவெடுக்கின்றபொழுது பக்தன் சிரிக்கின்றான், அழுகின்றான், ஆடுகின்றான், பாடுகின்றான். இத்தகைய ஆர்ஜித பக்திக்கு எடுத்துக்காட்டாக சைதன்யதேவர் இலங்குகின்றார். இலட்சுமணனிடம் ஸ்ரீ ராமன் பகர்ந்ததாவது: 'இளையோய், ஏதேனும் ஓர் இடத்தில் ஒருவனிடம் ஆர்ஜிதபக்தி வடிவெடுத்திருப்பதைக் காண்பாயானால் ஆங்கு அவனிடத்து நிச்சயமாக என்னுடைய சாந்நித்தியத்தைக் காண்பாய்.' ஏனென்றால் அத்தகைய ஆனந்த பரவசத்தில் ஜீவ வியக்திக்குச் சிறிதேனும் இடமில்லை."

கிரீஷ்சந்திரகோஷ்: "தேவே, தங்களுடைய கிருபையால் அனைத்தும் சாத்தியமாகும். தங்களோடு இணக்கம் பூணுதற்கு முன்பு நான் எப்படி இருந்தேன்? இப்பொழுது நான் எப்படி இருக்கிறேன் பாருங்கள்!"

பரமஹம்சதேவர்: "உன்னிடத்து மேலான இயல்புகள் சற்றுப் பின்னணியில் மறைந்து

கிடந்தன. தக்கதருணம் வந்து அமைந்திருப் பதனால் அவையாவும் இப்பொழுது முன்னணிக்கு வந்து மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஏற்றகாலம் ஒன்று இருக்கிறது. தக்க தருணம் வருவதற்கு முன்பு ஏதும் நிகழ்வதில்லை. நோயாளி ஒருவனுடைய நிலைமையைச் சான்றாக எடுத்துக்கொள். அவனைப் பிடித்துள்ள நோய் கிட்டத்தட்ட குணமடைந்து விட்டது. அங்கிலேயில் மருத்துவன் ஒருவன் ஒரு மூலிகையைக் கொடுத்து அதன் கஷாயத்தைப் பருகும்படி சொல்கிறான். அங்ஙனம் கஷாயத்தைப் பருகியான பிறகு நோய் அவனை விட்டு அடியோடு அகன்று போகிறது. இப்பொழுது நோயாளி குணமடைந்திருப்பது கஷாயத்தின் விளைவா? அல்லது குணமடையும் பாங்கு தன்னிடத்துத் தானே வந்து அமைந்துள்ளதா? இதைப்பற்றி அறுதியிட்டு யார்தான் என்ன சொல்லமுடியும்?

"குசனையும் லவனையும் பார்த்து இலட்சுமணன் சொன்னதாவது: 'நீங்கள் பாலர்கள். ராமனுடைய தெய்வீக ஆற்றல்களைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. வெறும் கல்லாகச் சமைக்கப்பட்டிருந்த அகல்யையை ராமனுடைய திருவடி தீண்டியது. அக்கணமே கல்லாகக் கிடந்த அவள் பெண்ணாக மாறிவிட்டாள்.' இதற்கு விடையாகக் குசனும் லவனும் சொன்னதாவது: 'போற்றுதற்குரிய பெரியோய்! அது விஷயம் எங்களுக்குத் தெரியும். அக்கதையை நாங்கள் கேட்டிருக்கிறோம். கல் ஏன் அகல்யையாக மாறியது என்பதற்குக் காரணம் ஒன்று உண்டு. முனிவர் ஒருவருடைய ஆப்தவாக்கியங்களே அதற்குக்காரணமாயின. அவளுடைய கணவனாகிய கௌதம மகரிஷி அவளிடம் இயம்பியதாவது: திரேதாயுகத்தில் இந்த ஆஸ்ரமப்பக்கம் ஸ்ரீ ராமன் வருவான். அவனுடைய திருவடிபட்டவுடனே நீ மீண்டும் பெண் ஆவாய்! இப்பொழுது உண்மை யாது என்று யார்தான் பகரமுடியும்? சான்றோர் ஒருவர் பகர்ந்த சொல் சத்திய சங்கல்பமாயிற்று அல்லது ராமனுடைய மகிமையால் அச்செயல் நிகழ்ந்ததா?'

"இறைவனுடைய திருவுளப்பாங்கின் விளைவாக யாவும் நிகழ்கின்றன. கிரீஷா, இவ்விடத்துக்கு வந்ததின் விளைவாக உள்ளிடத்து ஆத்மபோதம் உருவெடுத்து இருக்கிறதென்றால் அதற்கு நான் வெறும் கருவியாகத்தானிருக்கிறேன் என்பதை அறிந்து கொள்ளுவாயாக. சந்தமாமா எல்லார்க்கும் மாமா ஆகின்றான். நிகழ்வனயாவும் இறைவனுடைய திருவுளப் பாங்கின்படியேயாம்."

கிரீஷ் (புன்னகை பூத்தவராக): "இறைவனுடைய திருவுளப்பாங்கின்படி என்று பகர்ந்தீர்கள் அல்லவா? நான் அதைத்தான் சொல்கிறேன். தாங்கள் வேறு இறைவன் வேறு அல்ல." (எல்லாரும் சிரிக்கிறார்கள்) பரமஹம்ச தேவர் (கிரீஷைப் பார்த்து): "தூய உள்ளம் படைத்திருக்கிற ஒருவன் அதிவிரைவில் ஈசுவரானுபூதியைப் பெற வல்லவனாகின்றான். பரஞானத்தைப் பெற முடியாத மக்கள் பலர் இருக்கின்றனர். அன்னவர்கள் படைத்திருக்கும் மனப்பாங்குகளே அதற்குக் காரணமாகின்றன. முதலாவதாக வக்ரபுத்தி படைத்தவனாக ஒருவனிருக்கிறான். மனக்கோணல் அவனைவிட்டு அகலாது. ஒரு குழந்தையின் எளிய பாங்குக்கும் அவனுடைய மனப்பாங்குக்கும் வெகுதூரம். இரண்டாவதாக புற ஆசாரத்தைப்பற்றி ஒருவன் மிகக் கட்டுப்பாட்டோடு இருக்கிறான். தான் அனுஷ்டிக்கும் ஆசாரமே மேலானதென்றும் அந்த ஆசாரத்துக்கும் புறம்பாயுள்ள அனைத்திடத்தும் அவன் உவட்டுதல் படைத்தவனாகவிருக்கிறான். மட்டமானவைகள் என்று அவைகளிடத்து அருவருப்புப் பூணுகின்றான். அத்தகைய ஆதரவற்ற வெளியுபசாரங்களில் கட்டுண்டு கிடப்பவனுக்கு ஞானம் வாய்க்காது. மூன்றாவதாக மானுடனொருவன் பெரிய சந்தேகப் பேர்வழியாயிருக்கிறான். எதை எடுத்தாலும் அதில் அவனுக்கு நம்பிக்கை வருவதில்லை. அனைத்திடத்தும் அவநம்பிக்கை பூண்டிருப்பவனுக்கு ஞானமில்லை."

நித்திய கோபால் இடையிடையே ஆனந்த பரவசம் அடைந்திருப்பதைக் குறித்துப் பரமஹம்சதேவர் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

திண்ணையிலே பரமஹம்ச தேவருக்கருகில் மூன்று நான்கு பக்தர்கள் நின்று கொண்டிருந்தார்கள். பரமஹம்சதேவரோ பக்தி சாதனத்தில் மூழ்கி முன்னேற்றமடைந்திருப்பவர்களுடைய பாங்கை விளக்கிக் கொண்டிருந்தார்.

அவர் பேசியதை அருகில் நின்று கொண்டிருந்த பக்தர்கள் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தனர். அவர் விளக்கிச் சொன்ன விஷயமாவது: "பராபக்தியில் மூழ்கியிருக்கிறவனுக்குக் கடவுள் உணர்வைத் தவிர வேறு ஏதுமில்லை. உலகைப் பற்றிய சிந்தனை இம்மியளவும் அவன் உள்ளத்தில் இடம் பெறுவதில்லை. பாலையும். தண்ணீரையும் கலந்து வைத்தால் தண்ணீரினின்று பாலைப் பிரித்து எடுக்கும் திறமை அன்னப்பக்ஷிக்குத்தான் இருக்கிறது. அப்பறவையின் நாக்கினின்று புளிப்புத் திராவகம் ஒன்று கிளம்பி வருகிறது. அத்திராவகம் பட்டவுடனே பால் திரிந்து போகிறது. திரிந்து போன கட்டியைப் பிறகு பிரித்து எடுப்பது அன்னப்பக்ஷிக்குச் சுலபமானது. பரம்பொருளை அடையப்பெற்றவனுடைய பாங்கும் அத்தகையது. கடவுளிடத்து வைத்திருக்கும் பேரன்பே அவன் படைத்திருக்கும் திராவகம் ஆகிறது. அதன் துணைகொண்டு நித்தியப் பொருளாகிய பரமனை அநித்தியமாகிய பிரபஞ்சத்தினின்று பிரித்தெடுக்கிறான். அதன் விளைவாக அவனுக்குப் பரபோதம் உச்சநிலைக்கு வருகிறது. பரமனைப் பற்றிய உணர்வும், பரமனுடைய காட்சியுமே அவன் பெற்றிருக்கிற பேறு ஆகிறது."

1885 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ஆம் தேதி புதன் கிழமை. கல்கத்தாவிலே கோஸ் பாரா சந்திலே இருந்த கிரீஷ்சந்திரகோஷுடைய இல்லத்தில் பரமஹம்ச தேவர் அமர்ந்திருந்தார். பிற்பகல் சுமார் மூன்று மணிக்கு மகேந்திரநாத்குப்தர் அங்குவந்து சேர்ந்து பரமஹம்சதேவரின் முன்னிலையில் வீழ்ந்து வணங்கினர். கிரீஷ்சந்திரகோஷுக்குச் சொந்தமாயிருந்த நட்சத்திரக் கொட்டகையிலே நாடகம் ஒன்றைப் பார்க்கப்பரமஹம்சதேவர்ஆயத்தமாயிருந்தார். அங்குக் கூடியிருந்த பக்தர்களோடு அவர் பிரம்மஞானத்தைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்.

பரமஹம்சதேவர்: "மனிதன் நாள்தோறும் மூன்று நிலைகளை அனுபவிக்கிறான். அவை யாவன: நனவு, கனவு, கனவற்ற உறக்கம். அவைகள் முறையே ஜாக்ரதாவஸ்தை, சொப்பனவஸ்தை, சுஷுப்தி அவஸ்தை என இயம்பப் பெறுகின்றன. அம்மூன்றையும் தொகுத்து அவஸ்தாத்ரயம் என இயம்புவது மரபு. ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள் இந்த மூன்று அவஸ்தைகளை ஆழ்ந்த ஆராய்ச்சி பண்ணுகின்றனர். இந்த மூன்று அவஸ்தைகளுக்கு அப்பாலிருப்பது பிரம்மம் மேலும் பிரமமம் ஸ்தூலசரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம் ஆகிய சரீரத் திரயத்துக்கு அப்பாலிருக்கிறது மனிதன் நாள்தோறும் மாறி மாறி சதவகுணம், ரஜோகுணம், தமோகுணம்ஆகிய மூன்றுகுணங்களில்தோய்ந்திருக்கிறான். இந்தக் குணத்ரயத்துக்கு அப்பாலிருப்பது பிரம்மம். அவஸ்தாத்திரயம், சரீரத்திரயம், குணத்திரயம் ஆகியவைகள் மாயையின் பாங்குகளாம். நிலைக்கண்ணுடியில் பிம்பம் தென்படுவது போன்று ஆத்ம சைதன்யத்திடதது அந்த மாயா காரியங்கள் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றன. எது பிரதிபிம்பமோ அது மெய்ப்பொருளாகாது. பிரம்மம் ஒன்றே வஸ்து அல்லது மெய்ப்பொருள். ஏனைய யாவும் வெறும் தோற்றங்களாம்.

"பிரம்மஞானி இங்ஙனம் பகருகிறான்: ஆத்மா சரீரத்தோடு தன்னை இணைத்துக் கொள்வதாலேயே காண்போன், காணப்படு பொருள் ஆகிய இருமைகள் அனுபவத்துக்கு வருகின்றன. அங்ஙனம் சரீரி சரீரத்தோடு இணைத்துக்கொள்வதால் பிரதி பிம்பம் மெய்ப்பொருளாகத் தோன்றுகிறது. பின்பு காண்போனுகிய ஆத்மா காணப்படுபொருளாகிய தேகத்தினின்று தன்னைப் பிரித்து எடுத்துக் கொள்ளுகின்றபொழுது அஹம் பிரம்மாஸ்மி— நான் பிரம்மம் என்னும் உண்மையை அவன் அறியவருகின்றான்."

பக்தர் ஒருவர்: "அப்படியானல் தத்துவ விசாரமார்க்கத்தை நாங்கள் பின்பற்றலாமா?"

பரமஹம்சதேவர்: "சாதன வகைகளுள் தத்துவ விசாரமும் ஒரு சாதனமாகிறது. இது ஞானமார்க்கம் என இயம்பப்படுகிறது. மற்று பக்தி மார்க்கம் என்பது வேறு. பக்தன் ஒருவன் பிரம்மஞானம் தனக்கு வாய்க்க வேண்டுமென்று தன் வழிபடு தெய்வத்திடத்துக் கதறிப்பதறி அழுவானுகில் அவன் பிரம்மஞானத்தைப் பெறுகிறான். ஆகவே ஞான மார்க்கம் பக்தி மார்க்கம் என்னும் இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றன."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

7. பச்சைநிறமாய்ச் சிவந்த பாகம் கலந்த உலகை
இச்சையுடன் ஈன்ருளை பரம் காண்பது எந்நாளோ.

ஈன்ருளை-பெற்றெடுத்த உமாதேவியை.

அன்னை பராசக்தி பச்சை நிறம் உடைத்திருப்பதால் அவள் மரகதாம்பிகை என இயம்பப் பெறுகிருள். நிறத்தில் சிவனர் நெருப்புக்கு ஒத்தவராய் இருப்பதால் அவர் சிவந்தவர் என இயம்பப் பெறுகிருர். அம்மையும் அப்பனும் சொரூபத்தில் செம்பாதி கலந்திருப்பதால் அர்த்தநாரீசுவரன் என அவர் அழைக்கப் பெறுகிருர். சக்தியும் சிவமும் வகித்துள்ள கூட்டுறவால் உலகமும், அதிலுள்ள உயிர் வகைகளும் உருவெடுத்திருக்கின்றன. அங்ஙனம் அவையாவும் உருவெடுப்பதற்கு அம்மையும், அப்பனும் ஒருவரை ஒருவர் முழுமனதோடு நேசித்தனர். அதன் விளைவாகவே அன்னை பராசக்தி அண்டகோடிகளனைத்தையும், ஜீவகோடிகள் அனைத்தையும் பெற்றெடுத்துள்ளாள். அக்காரணத்தை முன்னிட்டே அவள் ஜகத்ஜனனி எனவும் ஜகன்மாதா எனவும் இயம்பப் பெறுகிருள். அத்தகைய பாரமார்த்திகப் பாங்குடைய அம்மையப்பனைத் தரிசித்து மகிழ்வுறுவது பக்தர்கள் பெறுகிற பெரிய பேறு ஆகும். பெறுதற்கரிய பேறு ஆகிய அது என்றைக்கு வந்து வாய்க்கும் என்னும் அருள்தாகம் பிடித்திருப்பது ஆத்ம சாதகனுடைய போக்கு ஆகும் என்பது இக்கண்ணியில் அடங்கியுளள கருத்தாம்.

8. ஆதி அந்தம காட்டாது அகண்டிதமாய் நின்று
உணர்த்தும்
போதவடிவு ஆம் அடியைப் போற்றுநாள் எந்நாளோ.

இப்பிரபஞ்சம் கால தேச நிமித்தத்தில் கட்டுண்டு இருப்பது போன்று காட்சி தருகிறது. சிருஷ்டிக் காலத்தில் அது தோற்றத்திற்கு வருகிறது. பிரளய காலத்தில் அது மறைந்துபட்டுப் போகிறது. இங்ஙனம் காலத்திற்கு உட்பட்டதுபோன்று அது தென்படுகிறது. ஆயினும் சிருஷ்டிக்கும் பிரளயத்திற்கும் துவக்கமோ, முடிவோ இல்லை. ஏனென்ருல் மாறி மாறி அவையிரண்டும் ஓயாது நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. ஆதலால் சிருஷ்டி, பிரளயம் என்னும் கால வரையறையில் பரமனுடைய சொரூபம் அடைபட்டுக் கிடப்பதன்று. அதை முன்னிட்டே இறைவனுக்குக் காலகாலன் என்னும் நாமமும் வந்துள்ளது. காலனையே எடுத்து விழுங்கவல்ல மகாகாலனுக மஹாதேவன் இருக்கிருர். அப்படி எக்காலத்தும் யாவுமாய் இலங்கிக்கொண்டிருக்கும் பரமன் போத வடிவினனுய் இலங்குகின்ருர். தங்கத்தால் செய்யப்பட்ட நகைகளனைத்தும் தங்கமயமாய்த் திகழ்ந்துகொண்டிருக்கின்றன. அதே விதத்தில் ஆதிபகவனே உலகனைத்துக்கும் மூலப்பொருள். அவர் யாண்டும் அறிவுப்பொருள் என்பது போதவடிவினன் என்பதற்கு விளக்கமாம். பிரபஞ்சத்தின்கண்ணுள்ள சேதனம் அசேதனமாகிய அனைத்தும் அறிவு சொருபமாகவே இலங்கிக்கொண்டிருக்கின்றன. உயிர்களிடத்து அறிவைக் காண்பது நமக்கு எளிது. அசேதனம் அல்லது ஜடப்பொருளிடத்து அறிவைக் காண்பது எங்ஙனம் என்னும் ஐயம் நமக்கிடையே உண்டாகலாம். பெரும் வெப்பத்தால் உலோகங்கள் தீப்பற்றி எரியும் பொழுது அந்தந்தப் பொருளுக்குரிய நிறத்தை அத்தீப்பொறியில் காணலாம். அது இயற்கையின்கண் உள்ள ஒழுங்குப்பாட்டுக்கு அறிகுறியாம். அத்தகைய ஒழுங்குப்பாடு அறிவின் விளைவாக வந்து அமைகிறது. இனி, ஸ்படிகம் போன்று பண்பாடு அடைந்து வருகிற பொருள்களுக்கிடையில் ஸ்படிக அமைப்பு ஒரே பாங்கில் உண்டாகிறது. சான்று எடுத்துக்கொண்டால் சர்க்கரை கற்கண்டாக வடிவெடுக்கிறபொழுது யாண்டும் அதனுடைய வடிவம் ஒரே பாங்கில் அமைகிறது. அதே விதத்தில் படிகாரம், உப்பு ஆகியவைகளுக்கு ஸ்படிக அமைப்பில் தனித்தனி வடிவம் உண்டு. அந்த வடிவ அமைப்பினின்று எப்பொருளும் பிசகுவதில்லை. சேதனமாயுள்ள மரம், செடி, கொடிகளின் இலையமைப்பில் ஒவ்வொரு வகைக்கும் தனித்தனி வடிவம் இருக்கிறது. அதே பாங்கில் ஜடப்பொருளுக்கும் பண்பட்டுள்ள பெரிய நிலை எய்துங்கால் அந்தந்தப் பொருளுக்கேற்ற வடிவமிருக்கிறது.

அவ்வடிவத்தினின்று அது பிசகாது இருப்பதே ஜடப்பொருள் என இயம்பப்படுமிடத்தும் அறிவு ஒரு பாங்கில் இலங்கிக் கொண்டிருக்கிறது என்பது வெளியாகிறது. எனவே அறிவு சொரூபமாகிய இறைவன் இயற்கைக்கு முதற்காரணமாயிருப்பதால் அவனிடத்திருந்து காரியப்பொருள்களாக வந்துள்ள சேதனம், அசேதனம் ஆகிய இரண்டினிடத்தும் அறிவின் சாந்நித்தியத்தையே காண்கிறோம். எனவே ஆத்ம சாதகன் ஒருவனிடத்துப் பக்தியும் ஞானமும் ஓங்குங்கால் காரியப் பொருளாயுள்ள சேதனம், அசேதனம் ஆகிய அனைத்தும் சிவமயம் என்னும் காட்சி அவனுக்கு வாய்க்கிறது. அங்ஙனம் தோற்றத்துக்கு வந்துள்ள அனைத்தும் சித் சொரூபம் என்னும் ஞானக் காட்சிகண்டு திளைத்திருக்கும் காலம் அதிவிரைவில் வந்து வாய்க்க வேண்டுமென்பது இக்கண்ணியின் கருத்து.

9. கங்கை நிலவு ஜடைக் காட்டானைத் தந்தைஎனும் புங்கவெண்கோட்டு ஆனைபதம் புந்திவைப்பது [எந்நாளோ.

தந்தையாகிய சிவனார் கங்கா நதியைத் தம்முடைய ஜடாபாரத்தின்கண் தாங்கியிருக்கிறார். அந்த ஜடாபாரமோ அடர்ந்த காடு அல்லது அடவிபோன்று யாண்டும் பரவியிருக்கிறது. அத்தகைய சிவனார் கணபதிக்குத் தந்தையாகிறார். கணபதியின் சிறப்பு யாது எனின் அவன் சிறந்த வெள்ளை நிறமான ஒற்றைக் கொம்பினை உடையவனாய் இருக்கிறான். இயல்பாக அவன் அமைப்பில் அமைந்தவை இரண்டு தந்தங்கள். அவன் மகாபாரதம் என்னும் இதிகாசத்தை எழுதிக்கொண்டிருந்தபொழுது எழுத்தாணி உடைந்துபோயிற்று. அதற்கு ஈடாக அக்கணமே அவன் தன் தந்தங்களுள் ஒன்றை ஒடித்தெடுத்து எழுதுகோலாகப்பயன்படுத்தி எழுதும் காரியம் தடைபட்டுப் போகாதபடி, விக்னம் ஏற்படாதபடி எடுத்த காரியத்தை நிறைவேற்றினான். அதை முன்னிட்டே அவனுக்கு ஏகதந்தன் என்னும் பெயர் வந்தது. முயற்சியால் எடுத்துக்கொண்ட காரியத்துக்கு இடைஞ்சல் வராது காத்தவன் என்பது அதன் உட்பொருள். அத்தகைய தெய்வீகப் பெற்றியுடன் இலங்குகின்ற மூத்த மகனைப் புந்தியில் வைக்கின்ற அளவு, அதாவது கருத்தில்கொள்ளுகிறவளவு ஆத்மசாதகனுக்கு அறிவு ஓங்குகிறது. அங்ஙனம் அறிவை வளர்ப்பதிலேயே காலம் கழிப்பது சாலச் சிறந்தது. எக்காலமும் அந்தப் பாங்கிலேயே காலம் கழிய வேண்டுமென்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

10. அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்டவந்த செஞ்சரணச்சேவடியைச் சிந்தைவைப்பது [எந்நாளோ.

அஞ்சுவது அல்லது பயப்படுவது ஜீவர்களின் இயல்பு. எதிரிகளுக்கு அஞ்சுதல், இடைஞ்சல்களுக்கு அஞ்சுதல், பெற்றுள்ள பேறுகளை இழத்தல் பொருட்டு அஞ்சுதல், நோய்க்கு அஞ்சுதல், இப்படிப் பலப்பல காரணங்களை முன்னிட்டு உயிர்கள் அஞ்சிக்கொண்டேவிருக்கின்றன. அச்சத்தைத் தவிர்க்கவும் அவைகள் முயன்றுகொண்டேவிருக்கின்றன. அந்த முயற்சியில் பெரும்பாலும் உயிர் வகைகள் வெற்றியும் பெற்று வருகின்றன. கடைசியாக ஆறுமுகக் கடவுளாக இருக்கின்ற சுப்ரமணியனுடைய பாங்குகளை அடையப் பெறும் பொழுது பக்தர்கள் ஆறுதலடைகின்றனர். எனவே அச்சத்தில் துவக்கிய பிரபஞ்ச வாழ்வு அச்சத்தை வெல்லும் பண்பை இறுதியில் பெறுகின்றது. அந்த இலட்சியத்துக்கு முன் மாதிரியாயிருப்பவன் முருகன் அல்லது ஆறுமுகக் கடவுள். அவனிடத்து அமைந்திருக்கும் மகிமைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஜீவாத்மாக்கள் பெற்று வருகிறார்கள். முருகன் சிவக்குமாரன் என்னும் பெயர் படைத்துள்ளான். உண்மையில் பிரபஞ்சத்திலுள்ள அனந்தங்கோடி ஜீவாத்மாக்கள் சிவக்குமாரர்களாகவும், குமாரிகளாகவும் இலங்குகின்றார்கள். அன்னவர்கள் வாழ்க்கையில் பண்பாடடைந்து மேல்நிலைக்கு வரவரக்குமரக் கடவுளின் பாங்குகளனைத்துக்கும் உரிமையாளர்கள் ஆகின்றனர். அச்சத்தை வென்று ஆண்மையுடன் அவர்கள் வாழ்கின்றனர். முறையாகக் குமரனை வழுத்துதலின் விளைவாக இப்பெருநிலை விரைவில் வந்தமைகின்றது. ஆதலால் அத்தகைய ஞானபண்டிதனைக் காலமெல்லாம் வழுத்த வல்லவர்கள் பாக்யவான்கள், பாக்யவதிகள் என்பது இந்தக் கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

17. கண்ணை வாங்கியவனுடைய கண்ணைப் பிடுங்கி விடு; பல்லை உடைத்தவனுடைய பல்லைப் பிடுங்கிவிடு என்று புகட்டப்பட்டிருப்பதை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்வதைக் கேளுங்கள். தீமை செய்வதற்குத் தீமை செய்யவேண்டாம். தீமையைத் தீமையால் தவிர்த்துவிட முடியாது. வலக்கன்னத்தில் ஒருவன் அறைந்தால் உன் இடக்கன்னத்தை அவனுக்குத் திருப்பிக் காட்டு. உன் சொத்தில் ஒரு பகுதி தனக்குரியதென்று ஒருவன் நியாயமன்றத்தில் வழக்குத் தொடுத்தால், அவனுக்கு இன்னொரு பகுதியையும் சேர்த்துக் கொடுத்துவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் அழைத்துச் செல்ல விரும்பினால் நீ இரண்டு மைல் தூரம் செல்வதற்கு ஆயத்தமாக இரு. உன்னிடத்திலிருப்பதைக் கேடகின்றவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன் கேட்டு வருபவனிடத்தில் முகம் கோணாதே.

அண்டை வீட்டுக்காரனை நேசிக்கவும், உன் பகைவனை வெறுக்கவும் வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதைக் கேட்டு இருப்பீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன். உங்கள் பகைவர்களை நேசியுங்கள். உங்களைச் சபிக்கின்றவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களுக்குக் கேடு செய்கின்றவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கின்றவர்களுக்கும் உங்களைத் துன்பப்படுத்துகின்றவர்களுக்கும் நலமே விளைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்யுங்கள். அப்பொழுதுதான் பரலோகத்திலிருக்கின்ற உங்கள் பிதாவுக்கு நீங்கள் புத்திரர்களாவீர்கள். அவர் நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் சூரியன் மூலம் ஒளியையும் வெப்பத்தையும் தருகின்றார். நீதிமான்களுக்கும் அநீதிமான்களுக்கும் மழை பொழியும்படி செய்கின்றார். உங்கள் மீது அன்பு செலுத்துபவர்கள் மீது, நீங்கள் திருப்பி அன்பு செலுத்துவதினால், நீங்கள் என்ன வெகுமதி பெறுகின்றீர்கள்? சாதாரண மக்களும் அதையே செய்கின்றார்கள். உங்கள் சகோதரர்களை மட்டும் போற்றுவீர்களானால் சாதாரண மக்களைவிட நீங்கள் என்ன விசேஷச் செயல் செய்தவர்களாகின்றீர்கள்?

தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் திருப்பி நலனையே செய்வது, மிக உயர்ந்த கோட்பாடாகும். பகைவர்களையும் நேசிக்க வேண்டுமென்று சான்றோர்கள் பகர்ந்திருக்கின்றார்கள்.

" இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்பது வள்ளுவர் வாக்கு. " போக்கிரி ஒருவன் உன் உடலைத் துன்புறுத்தினால் நீ அவன் மீது கோபம் கொள்ளலாகாது. நீ அவன் மீது கோபம் கொள்வாயானால் என் உபதேசப்படி நடவாதவனாகின்றாய். நீ அத்தகைய துன்பம் செய்தவனிடத்தும் மாறுபடாத மனதைப் பெற்றிருக்க வேண்டும். அவனைப் பற்றிக் கொடிய வார்த்தை ஒன்றும் உன் வாயிலிருந்து வரக்கூடாது. நல்லெண்ணமும் இரக்கமும் உன் இருதயத்தில் நிரம்பியிருக்க வேண்டும். உன் உள்ளத்தில் வெறுப்புணர்ச்சிக்கே இடமிருக்கக்கூடாது. உனக்குத் தீங்கு செய்தவனிடத்தும் நல்லெண்ணங்களைச் செலுத்து. நல்லெண்ணத்தையும், அன்பையும் உலகம் முழுவதும் பரப்பி, உலக மக்கள் அனைவரிடத்திலும் அன்பைச் செலுத்து. உள் உள்ளத்தில் யாரிடத்தும் வெறுப்பு இருக்கக் கூடாது." இங்ஙனம் புத்தபகவான் உபதேசம் பண்ணியுள்ளார்.

மதங்கள் யாவும் எவ்வுயிருக்கும் தீங்கு செய்யக்கூடாது என்று புகட்டுகின்றன. தீங்கு செய்தவர்களுக்கும் நலமே செய்ய வேண்டுமென்பதுதான் மதங்களின் போதனையாகும். இப்போதனையைச் சரியாக அறிந்து பின்பற்ற மக்களுக்கு இயலுவதில்லை. இக்கோட்பாட்டை நம் வாழ்க்கையில் பின்பற்றினால் அது நம்மைப் பரிபூரண நிலைக்கு எடுத்துச் செல்லும். இயேசுநாதர் "ஒருவன் உன் இடக்கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் வலக்கன்னத்தைத் திருப்பிக் காட்டு" என்று பகர்ந்துள்ளார். இதை எல்லாராலும் செய்ய முடியாது. பரிபூரண நிலைக்குத் தங்களைப் பக்குவப்படுத்தியவர்களும் இறைவனோடு தங்களை ஐக்கியப்படுத்திக்கொண்டவர்களுமே இக்கோட்பாட்டைக் கடைப்பிடிக்க முடியும். எல்லா உயிர்களிடத்திலும் இறைவனுடைய சாந்நித்தியத்தைக் காண்கிறவர்கள்தாம் உயிர்கள் அனைத்திடத்தும் அன்பு செலுத்த முடியும்.

அத்தகையவர்கள்தாம் தங்கள் இடக்கன்னத்தில் அறைந்தவர்களுக்கு வலக்கன்னத்தைக் காட்ட முடியும். தீமைக்கும் நலமே செய்யும் செயல் பரிபூரண மக்களிடத்து இயல்பாகவே அமைந்திருக்கிறது.

சான்றோர் ஒருவர் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை இதற்குச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். நதிக்கரை ஓரத்தில் சான்றோர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மரம் இருந்தது. அம்மரத்தின் மீது தொங்கிக்கொண்டிருந்த காய்ந்துபோன குச்சி ஒன்றில் தேள் ஊர்ந்துகொண்டிருந்தது. காற்றுப் பலமாக அடித்ததும் குச்சி அசைந்து மரத்தினின்று நழுவி நதியிலுள்ள தண்ணீரில் விழுந்து மிதந்தது. குச்சியிலிருந்த தேள் நதிக்குள் மூழ்கிப் போகாதிருக்கும் பொருட்டு அவர் அத்தேளை எடுத்துக் கரையில் சேர்க்க முயன்றார். தேள் அவர் கையைக் கொட்டியது. கையை அவர் உதறியபொழுது மறுபடியும் தேள் நதிக்குள் விழுந்துவிட்டது. சாது முயற்சியை நிறுத்தி விடாமல் மூன்று முறை முயன்று தேளைக் கரை சேர்த்தார். அவர் தேளைக் காப்பாற்ற முயன்ற ஒவ்வொரு முறையும் அத்தேள் அவரைக் கொட்டியது. இந்நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் அச்சாதுவைப் பார்த்து "சுவாமி, தேள் உங்களை மூன்றுமுறை கொட்டியது. உங்களுக்குத் தீங்கு செய்த தேளுக்கு நீங்கள் ஏன் நலம் செய்யவேண்டும்?" என்று கேட்டான். அதற்குச் சாது பகர்ந்ததாவது: "குழந்தாய், தேளினுடைய இயல்பு கொட்டுவது என்பது உனக்குத் தெரியும். என்னைக் கொட்டுவதன் மூலம் அது தன் இயல்பின்படி நடந்துகொண்டது. என்னுடைய இயல்பு எல்லா உயிர்களுக்கும் நலம் செய்வதாகும். அத்தேளைக் காப்பாற்றியதன்மூலம் மன்னுயிர்களுக்கு நலம் செய்கின்ற என் இயல்பின்படி நடந்துகொண்டேன்."

தீமை செய்தவர்களுக்கு எதிர்த்தீங்கு செய்யாது நலத்தையே செய்த நிகழ்ச்சிகளைச் சான்றோர்களின் வாழ்க்கையில் காணலாம். ஸ்ரீ கிருஷ்ணன் பாலலீலைகள் செய்த இடம் பிருந்தாவனமாகும். ஆங்கு ஸ்ரீமத் பிரம்மானந்த சுவாமிகள் ஒரு சமயம் கடுந் தபசுசெய்து கொண்டிருந்தார். அவர் ஓரிடத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தபோது அவருக்குப் பக்கத்தில் ஒருவர் கம்பளிப் போர்வை ஒன்றைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனார். சில நிமிடங்களுக்குப் பிறகு அவ்வழியாக வந்த மற்றொரு மனிதன் அப்போர்வையை எடுத்துக் கொண்டு போய்விட்டான். இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் சுவாமி பிரம்மானந்தருடைய உள்ளத்தில் எவ்வித மாறுதலையும் உண்டு பண்ணவில்லை. இறைவன் திருவிளையாடல்களாக அந்நிகழ்ச்சிகளைக் கருதி அவர் தமக்குள் புன்முறுவல் பூத்துக்கொண்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் பவஆஹாரிபாபா என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். ஒருநாள் திருடன் ஒருவன் அவருடைய ஆசிரமத்துக்குள் புகுந்து சாமான்களைத் திருடிக்கொண்டு போனதை அவர் திடீரென்று பார்த்துவிட்டார். பவஆஹாரிபாபா தன்னைப் பார்த்துவிட்டதை அறிந்த திருடன் திருடிய சாமான்களைப் போட்டுவிட்டு ஓடினான். பவஆஹாரிபாபா அவன் போட்ட சாமான்களை எடுத்துக்கொண்டு அவன் பின்னால் ஓடி அவனைப் பிடித்து அவனிடமே அச்சாமான்களைத் திருப்பிக்கொடுத்தார். அப்பொருள்களை அவன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டார். அகங்காரம் மமகாரமற்றிருந்த அப்பெரியார் அனைத்துப் பொருள்களையும் தெய்வத்துக்கு உரியனவென்று எண்ணினார். எல்லா உயிர்களிடத்தும் தெய்வமிருப்பதை அவர் கண்டார். அத்திருடனிடமும் தெய்வமிருப்பதைக் கண்டார். எனவே அவர் அப்பொருள்களைத் திருடனுக்கே திருப்பிக்கொடுத்தார். திருடனோ பவஆஹாரிபாபாவின் செயலைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். தன் மனப்பான்மையை அவன் அடியோடு திருத்திக் கொண்டான். அன்றுமுதல் அவன் திருட்டுத் தொழிலை அடியோடு விட்டொழித்தான். அவன் அன்றே துறவு வாழ்க்கையை மேற்கொண்டு தவ வாழ்வில் ஈடுபட்டுச் சிறந்த துறவி ஆகிவிட்டான். பிற்காலத்தில் அவன் பவஆஹாரி பாபாவின் சிஷ்யனும் ஆகிவிட்டான். அவன் தான் பவஆஹாரிபாபாவை விவேகானந்தருக்கு அறிமுகப்படுத்திவைத்தான்.

இச்சிறிய கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவர்கள் அரியருள் அரியராக இருக்கின்றனர். ஆனல் சில மக்கள் அவ்வுயர்ந்த உண்மையை அடைவதற்கு முயல்கின்றனர். மனபரிபாகத்தில் மக்களுக்கிடையே வேற்றுமை உண்டு. மனத்தின் இயல்புக்கு ஏற்ப மக்களுக்கு ஆன்மீக வளர்ச்சி ஏற்படுகிறது. எல்லா மக்களுக்கும் சமமான வாய்ப்புக்கள் அளித்தாலும் எல்லாரும் ஒரே மாதிரியாக ஆன்மீக வளர்ச்சி அடைய முடியாது. அவரவர்கள் மனத்தின் இயல்புக்கும் வைக்கத்துக்கும் ஏற்ப ஆன்மீக வளர்ச்சி ஏற்படுகிறது. எனவே ஆன்மீக வளர்ச்சியில் மக்களுக்கிடையில் வேற்றுமை இருக்கும். வேற்றுமைக்கிடையில் ஒற்றுமை சிருஷ்டியின் கண் இருக்கிறது. வேற்றுமையை அகற்றி விட்டால் உலகக்காட்சி மறைந்துவிடும்.எல்லா மனிதர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும். ஆனல் அவர்களிடமுள்ள இயல்புக்கு ஏற்ப அவர்களுக்கு நன்மை தீமைகள் நிகழும். நன்மை தீமைகள் மக்களிடமுள்ள இயல்புக்கு ஏற்ப நிகழும்.

மெய்ப்பொருள் ஒன்றுதான் உள்ளது. அது எல்லாருடைய உள்ளங்களிலும் இருக்கிறது. ஆனல் எல்லாருடைய உள்ளங்களிலும் ஒரே மாதிரியாக அது தோற்றத்துக்கு வரவில்லை. இது வேதாந்தக் கோட்பாடு. சுவாமி விவேகானந்தர் பகர்வதாவது: "அறிவிலிக்கு ஒருவழி அறிஞனுக்கு ஒருவழி ஆகிய இரண்டு வழிகள் இருக்கின்றன. அறிவிலி உண்மைக்கு ஒரு வழிதான் உண்டு என்றும் மற்றவைகள் எல்லாம் தவருனவை என்றும் நினைக்கின்ருன். மக்களுடைய மன அமைப்புக்கு ஏற்பக் கடமையும் ஒழுக்கமும் பலவிதமாக அமையவேண்டும் என்று அறிஞன் ஏற்றுக் கொள்கின்ருன். கடமையிலும் ஒழுக்கத்திலும் படித்தரங்கள் இருக்கும் என்பதை நாம் அறிந்துகொள்வது அவசியம். ஒரு படித்தரத்தில் ஒரு சூழ்நிலையில் மக்களுக்கு அமையும் கடமை மற்ருெரு படித்தரத்தில் வேறு ஒரு சூழ்நிலையில் வாழும் மக்களுக்குப் பொருந்தாது."

தீமையை எதிர்க்காதே என்பது ஓர் உயர்ந்த இலட்சியம். அந்த இலட்சியத்தை அடைவது ஒவ்வொருவருடைய குறிக்கோள் ஆகும். ஆனல் எடுத்த எடுப்பிலேயே ஒவ்வொருவரும் அந்த இலட்சியத்தை அடைந்துவிட முடியாது. ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்ப அதை அடைய முயலவேண்டும். படிப்படியாகவோ, விரைவிலோ சற்றுக் காலதாமதமாகவோ அப்பெரிய இலட்சியத்தை ஒவ்வொருவரும் அடைந்தாக வேண்டும்.

வேதாந்தம் தீமையை எதிர்க்காது இருப்பதை உயர்ந்த இலட்சியம் என்று ஏற்றுக்கொள்கிறது. ஆனல் எல்லா மக்களும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவ்வுயர் நிலைக்கு ஏற்ப ஒழுக வேண்டுமென்று எதிர் பார்ப்பது கூடாது என்று கூறுகிறது. சிலர் தீமையை எதிர்ப்பது அவசியமாகிறது. தீமையை எதிர்ப்பதன் மூலம் உள்வலிவு பெற்றுத் தூய்மையைப்பெறுகின்ருர்கள். தீமையைப் பொறுத்துக்கொள்வதற்குஉண்டான உள்வலிவு தீமையை எதிர்ப்பதன் மூலமே வருகிறது. ஒருமனிதனுக்குத் தீமையை எதிர்க்கக் கூடிய ஆற்றலும் பலமும் இல்லாததால், அவன் தீமையை எதிர்க்காதவனய் இருக்கிருன் என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய செயலில் என்ன சிறப்பு இருக்கிறது? மற்ருெருவன் தனக்குத் தீங்கு செய்தவனுக்குச் சரியான பாடம் புகட்டும் நிலையில் எதிர்த்துத் தாக்கும் பலம் இருந்தும் அவனுக்குத் தீங்கு செய்யாமல் அவனை ஆசீர்வாதம் பண்ணுகிருன் என்ருல் அவன் தான் தீமையை எதிர்க்காதவனுகின்ருன். சுவாமி விவேகானந்தர் பகர்வதாவது: "பலஹீனத்தினுல் ஒருவன் தீமையை எதிர்க்காதிருப்பானுனுல் அவன் பாபம் செய்தவனுகிருன். தீமையை எதிர்க்காத செயலின் மூலம் அவன் ஒரு பலனையும் அடையப்போவதில்லை. பலவான் ஒருவன் தீமையை எதிர்ப்பதன் மூலம் குற்றம் செய்தவனுகின்ருன். வலியவன் மெலியவனைத் தாக்குவானுனல் அது பாபம் ஆகும்."

தீமையை எதிர்க்கக்கூடாது என்ற உண்மையை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். முதலில் நாம் தீமையை எதிர்க்கும் ஆற்றலுடையவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும். அவ்வாற்றலைப் பெற்றபின் தீமையை எதிர்க்கும்செயலை அடியோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தீமையை எதிர்க்காதே என்பது ஒரு சிறந்த கோட்பாடாகிறது. நாம் பலஹீனர்களாக

இருந்துகொண்டு தீமையை எதிர்க்காதகொள்கையைப் பின்பற்றுவதாகப் பாசாங்கு பண்ணுவோமானால் அது நமக்கு ஒரு நன்மையையும் விளைவிக்காது. தீமையை எதிர்க்காதிருப்பதென்பது பலத்தின் அறிகுறியாகும். "தீமையை எதிர்க்காதிருப்பதென்பது பலம் பெற்றிருப்பதன் உச்சநிலையாகும். அந்நிலையை அடைவதற்குத் தீமையை எதிர்ப்பது ஒரு படித்தரமாகிறது" என்று சுவாமி விவேகானந்தர் பகர்கிறார்.

ஒரு சமயம் ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய சிஷ்யர் ஒருவர் கல்கத்தாவிலிருந்து ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பார்ப்பதற்காகப் படகில் கங்கையைக் கடந்துகொண்டிருந்தார். அவர் இளைஞர். அவர் சென்ற படகில் பிரயாணம் செய்த மற்றப் பிரயாணிகள் ஸ்ரீ இராமகிருஷ்ணரைப்பற்றித் தரக்குறைவாகப் பேசினார்கள். ஸ்ரீ இராமகிருஷ்ணர் உண்மைத் துறவி அல்லர் என்றும் வாழ்க்கையில் சுகபோகங்களை அனுபவிக்கின்ற போலித் துறவி என்றும் பேசினார்கள். அவர்களுடைய கூற்றை அவ்விளம் சந்நியாசி மறுத்தார். ஆனால் அவரை அசட்டை செய்துவிட்டு மேலும் ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பற்றிஅவர்கள் குறை கூறினார்கள். அவ்விளம் சந்நியாசி கோபம் அடைந்தார். அவர் எழுந்திருந்து "நீங்கள் பேச்சை நிறுத்தாவிட்டால் படகைக் கங்கையில் மூழ்கடிக்கப் போகிறேன்" என்று பயமுறுத்தினர். அவர் மேனியில் திகழ்ந்த பலத்தின் அறிகுறியைப் பார்த்து அவர் படகைக் கவிழ்த்துவிட முடியும் என்று அவர்கள் அஞ்சினார்கள். எனவே அவர்கள் பயந்து அவ்விளம் சந்நியாசியைத் தங்களை மன்னிக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். அதன் பிறகு படகு பிரயாணம் முடியும் வரையில் ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டார்கள். இந்நிகழ்ச்சியை அவ்விளம் சந்நியாசி ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் சொன்னார். அதைக் கேட்டு ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவரிடம் பகர்ந்ததாவது: "பிறர் கூற்றில் நீ ஏன் கவனம் செலுத்த வேண்டும்? அறியாமையால் பேசும் மனிதர்களுடைய பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளக்கூடாது. நீ அதைக்கேட்டுக் கோபத்துக்குள்ளானதால் பெருங்குற்றம் செய்தவனாகின்றாய். எந்தச் சூழ்நிலையிலும் இனிமேல் நீ யாருக்கும் தீங்கு செய்யவேண்டுமென்று நினைக்காதே."

வேறு ஒரு சமயம் ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய மற்றொரு சிஷ்யர் படகின் மூலம் கங்கையைக் கடந்துகொண்டிருந்தார். அவருடன் படகில் பிரயாணம் செய்த மற்றப் பிரயாணிகள் ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பற்றிக் குறைவாகப் பேசினார்கள். அதைக் கேட்ட அச்சிஷ்யர் மிகவும் மனவருத்தம் அடைந்தார். ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய பெருமையை அறியாத மக்கள் தங்கள் அறியாமையால் ஏதோ பிதற்றுகின்றார்கள் என்று எண்ணி அவர் அவர்கள் மீது ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் மெல்லியல்பு படைத்தவராகையால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் அமைதியாக இருந்துவிட்டார். அவரும் இந்நிகழ்ச்சியை ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் பகர்ந்தார். ஸ்ரீ இராமகிருஷ்ணர், "நீ என்னுடைய சிஷ்யன் என்று எப்படிச் சொல்லிக்கொள்ளுகின்றாய்? உன் முன்னிலையில் மற்றவர்கள் என்னைப்பற்றிக் குறை கூற நீ அனுமதிக்கலாமா?" என்று கூறி அவரை வெகுவாகக் கடிந்து கொண்டார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவ்விருவரிடமும் நடந்துகொண்டமை முற்றிலும் வேறுபட்ட முறைகளாக இருக்கின்றன. அவ்விருவருடைய பாங்குக்கேற்ப அவர்களைத் திருத்தி அமைப்பதற்கு வெவ்வேறு பாங்குகளில் அவர்களிடம் ஸ்ரீ இராமகிருஷ்ணர் நடந்துகொண்டார். வரம்புக்கு மீறிப் பலத்தைப் பயன்படுத்தத் தயாராக இருந்த சுவாமி நிரஞ்சனானந்தருக்குத் தீமையை எதிர்க்கக் கூடாது என்று கூறி அவரைத் திருத்தியமைத்தார். பயங்கொள்ளித்தனம் வாய்ந்த சுவாமி யோகானந்தருக்கு முதலில் தீமையை எதிர்த்துப் பழகவேண்டுமென்று போதித்தார்.

மக்களுடைய இயல்புக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஏற்பக் கடமையும் ஒழுக்கமும் மாறும் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான், இயேசுநாதர் மலை உபதேசத்தில் தம் சிஷ்யர்களுக்குத் தீமையை எதிர்க்கக் கூடாது என்று புகட்டி இருக்கப் போர்க்களத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனை

ஏன் போர்புரியுமாறு தூண்டினர் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். மலை உபதேசத்தில் இயேசுநாதர் தம் துறவறச் சிஷ்யர்களுக்குத் தீமையை எதிர்க்காதீர்கள் என்று புகட்டினர். அமைதியும் சாந்தமும் நிறைந்த சூழ்நிலையில் அவர் அவர்களுக்கு அவ்வுபதேசம் செய்தார். கீதையானது கிருஷ்ணனால் புகட்டப்பட்டது எனினும் க்ஷத்திரியப் போர் வீரனுக்குப் போர்க்களத்தில் புகட்டப்பட்டதாகும். அர்ஜுனன் செயல்களைத் துறப்பதற்கு ஏற்ற உயர்ந்த ஆன்மீக நிலையை அப்பொழுது அடையாதவனாக இருந்தான். போர் புரிவது தான் அர்ஜுனனுடைய கடமையாக இருந்தது. அவனுடைய எண்ணங்களும் செயல்களும் போரைப் பற்றியனவாகவே அதுவரையிலும் அமைந்திருந்தன.எனவே அவனுடைய இயல்பு அவனைப் போரின்கண் உந்திக்கொண்டு இருந்தது. ஆகையால் கிருஷ்ணன் அர்ஜுனனிடம் பகர்ந்ததாவது: “அர்ஜுனா, உன்னுடைய இயல்பு உன்னைப் போரின்கண் தூண்டிக்கொண்டிருக்கிறது. கொல்லுவதில் ஏற்பட்டுள்ள வெறுப்பு ஆன்மீகத் தெளிவால் உனக்கு வந்ததன்று. அது உன்னிடத்துள்ள கோழைத்தனத்தினால் வந்ததாகும். எனவே நீ கடமையிலிருந்து தவறியவனாகின்றாய். அப்படித்தவறுவதனால் உயர்ந்த இலட்சியத்தை நீ அடைய முடியாது. உன் கடமையைச் செய்வதாலும் கடவுளிடத்துப் பக்தியை வளர்த்து அவரிடம் நீ சரண்புகுவதாலும் இப்பிரபஞ்ச நிலையைக் கடந்து உயர்ந்த இலட்சியத்தை நீ அடைய முடியும்.”

இப்பிரபஞ்சத்துக்கு அப்பால் செயலுக்கோ கடமைக்கோ இடமில்லை என்பதும் இவ்வியற்கையில் உள்ள நாம ரூபங்கள் ஆங்கு இல்லை என்பதும் உண்மை. ஆங்குப் பூரணப்பொருளாகிய பிரம்மம் ஒன்றுதான் இருக்கிறது. ஆனால் அப்பிரம்மத்தோடு ஒன்றுபடும் பேர் உணர்வு அல்லது பேரறிவு நம்மிடத்தில் உண்டாகும் வரையில் இப்பிரபஞ்சத்தோடு போராடும் செயலில் ஈடுபட்டாக வேண்டும். ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணன் அப்பெருநிலையை எட்டுவதற்குச் செயல்புரிய வேண்டுமென்று அர்ஜுனன் மூலம் அனைவருக்கும் புகட்டுகிறார். நமக்கு உண்மையான ஆன்மீக வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் நம்முடைய பக்குவத்தை அறிந்து அதற்கு ஏற்ற சாதனம் செய்து முன்னேற முயலவேண்டும். தீமையை எதிர்க்காதே என்ற கோட்பாட்டை நம்முடைய வாழ்க்கையில் நாம் எப்படிக் கடைப்பிடிப்பது என்பது தான் கேள்வி. ஸ்ரீ இராமகிருஷ்ணரின் இல்லறச் சிஷ்யர் ஒருவர் “கெட்டவன் ஒருவன் தனக்குத் துன்பம் இழைக்கும்பொழுது தான் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?” என்று கேட்டார் அவருக்குப் பதில் அளிக்கும் வகையில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் கூறிய கதை வருமாறு:

ஒருசமயம் கிராமம் ஒன்றுக்குச் சான்றோர் ஒருவர் வந்தார். கிராம மக்கள் அவருக்கு எச்சரிக்கை ஒன்று செய்தனர். “சான்றோரே, நீங்கள் இந்த வழியாகப் போகாதீர்கள். இந்த வழியாகப் போனால் கொடிய விஷப்பாம்பு ஒன்றை நீங்கள் சந்திக்க நேரிடும். அப்பாம்பு பலபேரைக் கொன்றிருக்கிறது” என்று அவ்வூர் மக்கள் அவருக்கு எச்சரிக்கை செய்தனர். “அது என்னைத் துன்புறுத்தாது” என்று சொல்லிக்கொண்டே அப்பெரியவர் அப்பாதையிலேயே சென்றார். அக்கிராம மக்கள் சொன்னது போன்று பாம்பு ஒன்று சீறிக்கொண்டு அப்பெரியவரை நோக்கி வந்தது. ஆனால் அப்பாம்பு அப்பெரியவரைப் பார்த்ததும் பணிவுடன் அவர் காலடியில் வீழ்ந்து வணங்கியது. “பாம்பே, நீ மக்களைத் தீண்டிக் கொல்லும் இச்செயலை விட்டுவிடு” என்று அதற்கு உபதேசம் செய்தார். அவருடைய உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்வதாக அது ஒத்துக்கொண்டு தன் வளைக்குள் சென்றுவிட்டது. சான்றோரும் தம்வழியே போய்விட்டார். பாம்பு முன்போல் சீறிக்கொண்டு கடிக்க வருவதில்லை என்பதை அக்கிராமத்துச் சிறுவர்கள் அறிந்தார்கள். பாம்பினிடத்தில் மாறுதல் ஏற்பட்டதால் அப்பையன்கள், அது வளையைவிட்டு வெளியே வரும்பொழுதெல்லாம் கல்லாலும், கழியாலும் அதைத் தாக்க ஆரம்பித்தார்கள். அப்பாம்பு அதற்கு எதிராக அச்சிறுவர்களுக்குத் தீங்கு ஒன்றும் செய்யாது வளைக்குள் சென்றுவிடும். கொஞ்சநாட்களுக்குள் அதற்கு ஏற்பட்ட காயத்தால் பலஹீனமடைந்து நகருவதற்கே சக்தியற்றதாகப் போய்விட்டது. வளையிலிருந்து வெளிவருவதையே நிறுத்திவிட்டது.

இரவு நேரத்தில் மட்டும் இரை தேடுவதற்காக வளையிலிருந்து வெளியே வந்தது.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அக்கிராமத்துக்கு அச்சான்றோர் திரும்பி வந்தார். பாம்பு மடிந்து விட்டதாக அக்கிராம மக்கள் அவரிடத்தில் சொன்னார்கள். அவர் அதை நம்பவில்லை. தாம் உபதேசித்த மந்திரத்தின் பலனை அடையும்வரை அது மரணம் அடையாது என்று அவர் நம்பினார். பாம்பு வசித்து வந்த வளைக்குப் பக்கத்தில் சென்று அவர் அதை அழைத்தார். தம் குருவினுடைய குரலைக் கேட்டதும் புண்பட்ட மேனியுடன் நெளிந்து கொண்டு அது வெளியேவந்தது. அதற்குச் சரியான இரை கிடைக்காததால் மெலிந்திருந்தது. அத்தகைய பரிதாபகரமான நிலையிலிருப்பதற்குக் காரணம் என்ன என்று அப்பெரியார் அப்பாம்பைக் கேட்டார். பாம்பு பகர்ந்ததாவது: "வணக்கத்துக்குரிய பெரியவரே, நீங்கள் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது என்று என்னிடத்தில் கூறியிருந்தீர்கள். அதன்படி நான் நடந்து கொண்டதால் இலைகளையும் கனிகளையும் உண்டு வருகின்றேன். ஆகையினால் நான் இளைப்பாக இருக்கின்றேன்." பையன்கள் அதற்குச் செய்த தீமையை மறந்துவிடும் படியான பண்பாட்டை அது அடைந்திருந்தது. அப்பொழுது அந்தப் பெரியவர் "நீ இளைத்துப் போனதற்கு உணவைத் தவிர வேறு காரணமும் இருக்கும்; நன்றாக ஞாபகப் படுத்திப்பார்" என்று மறுபடியும் அதைக் கேட்டார். பாம்பு சிந்தித்துப் பார்த்துப் பகர்ந்ததாவது: "ஐயனே, இப்பொழுது ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது. கிராமத்துச் சிறுவர்கள் சிலர் என்னை அடிக்கிறார்கள். ஆனால் நான் அவர்களைக் கடிப்பதில்லை. அவர்கள் செய்கின்ற கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருந்து வருகிறேன்." தன்னுடைய செயலை அப்பெரியவர் புகழ்வார் என்று அது நினைத்தது. அது நினைத்ததற்கு மாறாக அப்பெரியவர் பகர்ந்ததாவது: "பாம்பே, நீ எத்தகைய முட்டாளாக இருக்கின்றாய்? நான் கடிக்கக்கூடாது என்றுதான் உன்னிடத்தில் சொன்னேன். உனக்கு அவர்கள் துன்பம் தர வரும்பொழுது நீ சீறி அவர்களைப் பயமுறுத்தி இருக்க வேண்டும். அதை ஏன் நீ செய்யவில்லை?"

இல்லறத்தார்களுக்கு இக்கதையில் நீதி அமைந்திருக்கிறது. அவர்கள் சமுதாயத்தில் வாழ்ந்திருந்து தங்களுடைய குடும்பத்துக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றியாக வேண்டும். எனவே அவர்கள் தங்களுக்குத் தீங்கு செய்கிறவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குச் சீறிப் பயமுறுத்தும் செயலைச் செய்தாகவேண்டும். அப்பாவி மனிதன் பிறரால் சுலபத்தில் ஏமாற்றப்படுபவன் ஆகின்றான். ஏமாற்றப்படுபவன் சான்றோன் ஆகமாட்டான். இல்லறத்தான் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமே தவிர யாரிடமும் பகைமை கொள்ளும் இயல்பையோ பழிக்குப்பழி வாங்கும் இயல்பையோ வளர்த்துக் கொள்ளக்கூடாது. அச்சுறுத்தி மற்றவர்களைத் திருத்தி அமைக்கலாம்; ஆனால் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. இனி, துறவியோ தீங்கை எதிர்க்காது இருக்கும் உயர்ந்த இலட்சியத்தைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டு இருக்கிறான்.

முறையாக ஆத்மசாதனை செய்து வரும் பக்தன் உயிர்களிடத்து அன்புள்ளம் கொண்டவனாக மாறுகின்றான். எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் எவ்வுயிருக்கும் துன்பம் விளைவிக்காத மனநிலையை அவன் அடைந்து விடுகின்றான். உயிர்கள் அனைத்திடத்தும் செலுத்தும் அன்பு கடவுள் பக்தியாக வடிவெடுக்கிறது. அப்பொழுது அவன் உள்ளம் கடவுள் சிந்தனையில் மூழ்குகிறது; ஹிருதய சுத்தி அடைந்து கடவுளிடம் தூயபக்தி உண்டாகிறது. உயிர்கள் அனைத்திடத்தும் அவன் அன்பு செலுத்துவதால் அவனுக்கு விரோதிகள் இல்லை. கவனக்குறைவால் உதட்டைக் கடித்துவிடும் பல்லை நாம் பாதுகாப்பது போன்று தனக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் பக்தன் ஆசி நல்குகின்றான். தன்னை வெறுப்பவனுக்கும் அவன் நலம் செய்கின்றான். தீங்கை எதிர்க்காதே என்ற ஏசுநாதர் உபதேசத்தைக் கடைப்பிடிப்பது இத்தகைய உயர்நிலையை அடைந்தவர்களுக்கே சாத்தியமாகிறது. அவர்கள் ஏசுநாதரின் கோட்பாட்டின்படி பரமண்டலத்தில் உள்ள பிதாவுக்குரிய உண்மையான புத்திரர்களாகிறார்கள்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-151

874. த்ரிஸ்தா த்ரிஸ்தா—மூன்றினுள் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய காலத்ரயத்தில் இருப்பவள் என்பது இதன் பொருள். இறந்தகாலத்தில் கருத்தைச் செலுத்தினுல் அது முடிவில்லாது பின்னுேக்கிப் போய்க் கொண்டேவிருக்கிறது. அதாவது கடந்துபோன காலம் அகண்டாகாரத்தில் முடிவில்லாது பின்வாங்கிக் கொண்டேவிருக்கிறது. அதற்குத் துவக்கமில்லே. அடுத்தபடியாக, நிகழ்காலம் என்பது ஒவ்வொரு க்ஷணத்திலும் அது நிகழ்காலமாகவே இருந்து வருகிறது. நிகழ்காலத்தை இறந்தகாலமாகவோ, எதிர்காலமாகவோ ஆக்க யாருக்குமே இயலாது. ஆத்மசாக்ஷாத்காரத்திற்கு நிகராக அது யாண்டும் இருந்து வருகிறது. மூன்ருவதாக இனி வருவதற்கு இருக்கும் காலத்தைக் கற்பனைபண்ணினுல் அதற்கு ஒரு முடிவில்லாது முன்னுேக்கிப் போய்க்கொண்டேவிருக்கிறது. ஆக எப்படி இறந்த காலத்திற்குத் துவக்கமில்லேயோ அப்படி எதிர்காலத்திற்கு முடிவு இல்லே. ஆக முக்காலம் என மொழியப்படுவது ஆதியந்தமில்லாது யாண்டும் இருந்து வருகிற அகண்டாகாரக் கால சொருபமாக அம்பிகை இருந்து வருகின்ருள் என்பதாகும்.

இனி அகண்டாகாரக் காலமென்பதும் காலாதீதம் என்பதும் ஒன்றுபடுகின்றன. காலமெல்லாம் ஓய்வு. ஒழிச்சல் இல்லாது அன்னே பராசக்தி யாண்டும் இருந்து வருகிருள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஓசை மயமாக அன்னே பராசக்தியைப் பொருள்படுத்தினுல் அவள் ஓங்கார வடிவினள் ஆகின்ருள். ஓங்காரம் அகர, உகர, மகரமாகிய மூன்று அட்சரங்களின் ஒன்றுபட்ட நிலேயாம். அகரமாக ஓசை துவங்குகிறது. உகரமாக அது நிலேபெற்றிருக்கிறது. மகரமாக அது முடிவுறுகிறது. இங்ஙனம் மூன்று ஓசைகளின் ஒருமைப்பாடே ஓங்காரம். அத்தகைய ஓங்காரத்தின் உட்பொருளாக அன்னே பராசக்தி இலங்குகின்ருள். காலத்திற்கு நிகராக ஓசையும் ஓயாது துவங்கிக்கொண்டே இருக்கிறது; நிலேபேறு உடையதாகவுமிருக்கிறது, முடிவுறுவதாகவுமிருக்கிறது. ஆக க்ஷணந்தோறும் ஓங்கார ஓசையில் துவக்கமும், இருப்பும், ஒடுக்கமும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. இத்தகைய மகிமை அன்னே பராசக்திக்கு உரியதாம். அடுத்தபடியாகப் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்று இடத்தில் மூன்று கூறுகள் இருக்கின்றன. நமக்கு இருப்பிடம் பூலோகம். காட்சிக்கு எட்டுவது புவர்லோகம். காட்சியைக் கடந்திருப்பது சுவர்லோகம். ஆக, நமக்கு இருப்பிடமாய் இருக்கின்ற தேசம் அல்லது இடத்தை ஆராய்ந்து பார்த்தால் அதில் ஒவ்வொரு பகுதியும் துவக்கமாகத் தென்படுகிறது. அப்படித் தென்படுகிற இடம் யாண்டும் அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. இங்ஙனம் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவள் அன்னே பராசக்தி.

இப்பிரபஞ்சத்தை ஆராய்ந்து பார்த்தால் அது கால தேச நிமித்த மயமாக யாண்டும் இருந்துவருகிறது. ஆகவே அன்னே பராசக்தி யாண்டும் கால, தேச, நிமித்தம் என்னும் மூன்று தத்துவமயமாக இருந்து வருகின்ருள். அடுத்தபடியாக இப்பிரபஞ்சம் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களேக்கொண்டு அமைந்துள்ளது. இந்த மூன்று குணங்கள் மயமாகவும் அன்னே பராசக்தி இலங்கிவருகிருள். மூன்று குணங்களுள் தமோகுணத்தைக் கொண்டு ஜடப்பொருள்கள் யாவும் அமைந்துள்ளன. இவை யாவும் காரிருள்மயமானவைகள். பூமியினுள் எங்கு நுழைந்து பார்த்தாலும் அது காரிருள் மயமானது. மலேயினுள் எங்கு நுழைந்து பார்த்தாலும் அது கார் இருள். அயர்ந்த உறக்கத்தில் காரிருளே செறிந்திருக்கிறது. ஆக இவையாவும் தமோகுணத்தின் கூறுகளாக அமைந்துள்ளன. தமோகுணத்தின் நிறம் கறுப்பு.

தமோகுணம் ரஜோ குணமாகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டம். எது இயங்குகிறதோ அது இயற்கை. ரஜோகுணம் யாண்டும் செயல் மயமானது. சலனத்தின் விளேவாகவே ஒலி, ஒளி ஆகிய யாவும் வடிவெடுத்திருக்கின்றன. கன்னங்கரேலென்று இருக்கின்ற இரும்பைக் காய்ச்சினுல் அது சிவப்பு

நிறமாக மாறுகிறது. சிவப்பு ரஜோகுணத்தின் நிறமாம். இயற்கையின்கண் உள்ள சலனங்களனைத்தும் ரஜோகுணத்தின் விளையாட்டாம்.

ரஜோகுணம் சத்துவ குணமாகப் பரிணமிக்கும் பாங்குடையதாம். சிவப்பு நிறமாகத் தென்படும் உதயசூரியன் மேலே வரவரப் பிரகாசத்துடன் கூடிய வெண்மை நிறமாக மாறுகிறது. அதே விதத்தில் பழுத்துச் சிவந்துள்ள இரும்புக்கு மேலும் உஷ்ணத்தை ஊட்டினால் அது பிரகாசிக்கும் வெண்மை நிறமாக மாறுகிறது. ஆக, சத்துவத்தின் நிறம் வெண்மை. அதில் ஞானம் ஒளிர்கிறது. எது துக்கம், எது சுகம் எனப் பாகுபடுத்தவல்லது சத்துவகுணம்.

இந்த மூன்று குணங்களை, மூலப்பொருள்களாகக் கொண்டது பிரபஞ்சம். அத்தகைய பாங்கில் அன்னை பராசக்தி இலங்கி வருகின்றாள்.

இனி, மானுட அமைப்பை எடுத்துக்கொண்டால் அதில் இளமைப்பருவம், காளைப்பருவம், முதுமைப்பருவம் என மூன்று பருவங்களை உடையதாக மானுட வாழ்க்கை அமைந்திருக்கிறது. அத்தகைய மூன்று பருவங்களும் அன்னை பராசக்தியின் சொரூபங்களாம்.

ஒரு நாளை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டால் அதில் பகல் வேளை, இரவு வேளை இவ்விரண்டுக்குமிடையிலுள்ள சந்தியா வேளை ஆகிய மூன்று வேளைகள் மயமாக நாள்தோறும் அன்னை பராசக்தி வடிவெடுத்து வருகிறாள்.

ஈண்டு இயம்பியுள்ள இத்தனை பகுதிகளையும் முறையாக ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்பது அன்னையின் வழிபாடாகும்.

875. त्रिपुर मालिनी த்ரிபுர மாலினீ — த்ரிபுர மாலினீ என்னும் பெயர் தாங்கியுள்ள அன்னை பராசக்தியின் சொரூபமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சத்தின் அமைப்பு எத்தகையது என்பதை உள்ளபடி விளக்கிக் காட்டுவதற்கு என்று அமைக்கப்பட்டிருப்பது ஸ்ரீ சக்கரம். அந்த ஸ்ரீசக்கரத்தில் முக்கோணங்களும், சதுர்கோணங்களும், வட்டங்களும் வேண்டியவாறு அமைந்திருக்கின்றன. அவைகளுள் முக்கோணங்களே எண்ணிக்கையில் அடங்காதவைகள். ஒவ்வொரு முக்கோணமும் ஒவ்வொரு மும்மைக்கு இருப்பிடமாகிறது. மும்மைகள் சில 874ஆம் நாமத்தில் விளக்கப்பட்டுள்ளன. அவையாவுக்கும் அதிஷ்டான தெய்வமாக அமைந்திருக்கும் அன்னை பராசக்தி திரிபுர மாலினீ என்னும் நாமத்தைப் பெற்றுள்ளாள். அன்னை பராசக்திக்குப் புறம்பாகப் பிரபஞ்சத்தில் ஏதுமில்லை என்பது இதன் அடிப்படைக் கோட்பாடாம்.

876. निरामया நிராமயா—நோயற்றவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இயற்கையின்கண் அமைந்துள்ள உயிர் வகைகளனைத்தும் உடலை எடுத்திருக்கின்றன. ஸ்தாவர ஜங்கமமாயுள்ள எல்லா உயிர்களுக்கும் ஏற்ற உடல்கள் இருக்கின்றன. அந்த உடலமைப்பில் ஓர் அதிசயம் இலங்குகிறது. சரீரங்கள் எண்ணிக்கையிலடங்காது அகண்டாகாரத்தில் விரிந்தோடிக் கொண்டிருக்கின்றன. எண்ணிறந்த அலைகளுள் ஒரே அமைப்பில் அமைந்துள்ள இரண்டு வடிவங்கள் இயற்கையில் இல்லை. புளியம் இலை ஒன்றைச் சான்றாக எடுத்துக்கொண்டால் முற்றிலும் ஒரே விதத்தில் அமைந்துள்ள இரண்டு புளியம் இலைகளை இயற்கையில் காணமுடியாது. முற்றிலும் ஒரே பாங்கில் அமைந்துள்ள இரண்டு மணல் துகள்களை இயற்கையில் காணமுடியாது. முற்றிலும் ஒரே பாங்கில் அமைந்துள்ள இரண்டு மானுட சரீரங்களை மண்ணுலகில் காணமுடியாது. இத்தனைவித வடிவெடுத்திருக்கும் கோலத்தில் சிறப்பு ஒன்றும் சீர்கேடு ஒன்றும் சேர்ந்தே அமைந்திருப்பது இயற்கையின்கண் உள்ள அதிசயங்களுள் பேரதிசயமாம். இது புளியம் இலை, இது மணல் துகள், இது மானுட சரீரம் எனப் பொருள்களைப் பாகுபடுத்துவது அவைகளுள் அமைந்துள்ள சிறப்பாம். இனி, அந்தந்த இனத்தைச் சேர்ந்த வடிவங்களை ஒன்றோடொன்று சீர்தூக்கிப் பார்த்தால் நிறைநிலையில் அவைகளுக்கிடையில் குறைபாடு உண்டு. அக்குறைபாடே ஆமயம் அல்லது நோய்வாய்ப்பட்ட நிலை எனப் பொருள்படுகிறது. பூமி வட்டவடிவு உடையதாக விளக்கப்படுகிறது. உண்மையில் அது வட்டவடிவமானதன்று. அதில் மேடுபள்ளங்கள் இருக்கின்றன. மலையும்

மடுவும் உண்டு. அப்படி அமைந்திருப்பது ஒரு பாங்கில் பார்த்தால் அது குறைபாடு அல்லது நோய்வாய்ப்பட்ட நிலை. மற்ருெரு பாங்கில் பார்க்குமிடத்து அக்குறைபாடு முற்றிலும் அவசியமாகிறது. மலையும் மடுவுமில்லாவிட்டால் நதிகள் வடிவெடுக்கமாட்டா; உலக வாழ்வு நிறைவேருது.

இங்ஙனம் பிரபஞ்சத்திலமைந்துள்ள வடிவங்களனைத்திடத்தும் குறைபாடு உண்டு அல்லது நோயுற்ற நிலை உண்டு. இவையாவற்றின் தொகையாக இருக்கின்ற அன்னை பராசக்தியின் விசுவ சொரூபமே நிராமயமானது, குறையற்ற நிறைநிலை படைத்திருப்பது ஆகும்.

இக்கோட்பாட்டை விளக்குதற்கு மனிதன் சரீரம் எடுத்திருப்பதைச் சான்ருக வைத்துக் கொள்ளுவோம். பிறப்பெடுப்பது குறை நிலையை நிறைநிலையாக மாற்றுதல் பொருட்டேயாம். பிறவிப்பிணி என்பது நோய்வாய்ப்பட்டுள்ள நிலை. அந்த நோயை நீக்குதற்கு ஒவ்வோர் உயிரும் அதனதன் போக்கில் முயன்று வருகிறது. அனந்தங்கோடி ஜீவாத்மாக்கள் அந்தந்த ஜீவனுக்குரிய குறைநிலையை அல்லது நோய்வாய்ப்பட்டிருக்கும் நிலையை நிவர்த்திபண்ணிக்கொள்ள முயன்றுவருகிறது. இத்தகைய முயற்சியே பிரபஞ்ச வாழ்வு என்னும் பெயர் பெறுகிறது. இத்தனைகோடி நோய்வாய்ப்பட்டுள்ள ஜீவர்களின் தொகை அம்பிகை என்ருல் அவள் பெரியதில் எல்லாம் பெரிய நோய்வாய்ப்பட்டவளாக இருத்தல் வேண்டும். ஆனல் அதிசயங்களுள் பேர் அதிசயமாயிருப்பது அவள் நோய் ஏதுமின்றி நிராமயமாக நிராலம்பமாகச் சகுண நிர்குணமாக இலங்கி வருவதேயாம். அவள் விளையாட்டாக நடத்துகின்ற பிரபஞ்ச நடைமுறை என்னும் பஞ்ச கிருத்தியங்கள் அவளுடைய குறையில்லா நிறைநிலையையே விளக்குகின்றன. பிறப்பெடுக்கும் ஜீவன் ஒருவன் பிறவிப்பிணி என்னும் நோயாளியாகப் பிறக்கிருன். அப்பிறப்பை உண்டுபண்ணுகிறஅன்னை பராசக்தி யாண்டும் நோயற்ற நிறை நிலையிலேயே இலங்கிவருகிருள். பிறந்த ஜீவன்வளர்ந்துவரத் திணறுகிருன். அத்தகையவனுக்கு வளர்ப்பைத் தருவது அன்னையின் விளையாட்டாம். எடுத்த உடலைத் துடைக்க மாட்டேன் என்று ஜீவாத்மா மரணத்தைக் குறித்துத் திணறுகிருன். ஆனல் மரணம் போன்று தென்படுகிற அந்தச் செயலின் வாயிலாக அந்த ஜீவனைப் புதுப்பித்தல் என்னும் அரிய செயலை அன்னை விளையாட்டாக நிறைவேற்றுகிருள். இங்ஙனம் வாழ்வு என்னும் பிணிக்கு உட்பட்டவைகளாக உயிர்களனைத்தும் அமைந்திருக்கையில் அவைகளனைத்திற்கும் மூலப்பொருளாயுள்ள அன்னை பராசக்தியாண்டும் நிராமயமாய், நிறைபொருளாய் அமைந்திருப்பது அவளுடைய மகிமையாம்.

கடவுளிடத்தில் பூரண சரணுகதி அடைவது என்பதன் பொருள் யாண்டும் அவருடைய சாந்நித்தியத்தில் இருப்பதாக உணர்வதாகும். "இறைவா, உன் இச்சையால் யாவும் நிகழ்கின்றன" என்று பூரண சரணுகதி அடைபவர்கள் பகர்கின்ருர்கள். ஈசனிடம் நம்மை ஒப்படைத்துவிட்டுத் திட்டம் போடுவதை விட்டுவிட வேண்டும். அன்னை பராசக்தியின் திட்டம் நிறைவேறட்டும். அன்னை பராசக்தியின் அருள்சேராத மனிதனுடைய திட்டங்கள் அனர்த்தமாய்ப் போய்விடுகின்றன. நிகழ்வனயாவற்றைவும் அன்னை பராசக்தி அறிவாள். எதிர்காலத்தைப்பற்றி அவள் தெளிவாக அறிந்திருக்கின்ருள். நீ நிகழ்காலத்தை நன்கு பயன்படுத்து. எதிர்காலத்தைப்பற்றி மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்காதே. அன்னை பராசக்தியின் விருப்பம் நிறைவேறுவது திண்ணம் என்பதை அறிந்துகொள். அன்னை பராசக்தியினிடத்துமெய்யன்பைச் செலுத்து. உன்னை பராசக்தியிடம் கொடுத்து விடு. அவள் விருப்பப்படி உன்னைப் பயன்படுத்திக் கொள்ளட்டும். பராசக்தியிடம் உன்னை ஒப்படைப்பது என்பதன் பொருள் சோம்பலுற்று இருப்பதென்பது அன்று. சோம்பலுக்கு இடம் தராதே. சரீரத்தாலும், மனதாலும் பராசக்தியின் காரியங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கட்டும்.

— *சுவாமி துரியானந்தர்*

அனுமன் கண்ட சீதை

(திரு K. ராமமூர்த்தி M. Com.)

19. காமம் வென்ற கதை

இலங்கேஸ்வரனுடைய பலவீனங்களையெல்லாம் எடுத்துக்காட்டி, அவனுடைய செயல்களெல்லாம் அவனை அழிவுப்பாதையிலேயே செலுத்திக்கொண்டிருக்கின்றன என்றும், அதிலிருந்து தப்பவேண்டுமானல் 'மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரமான' ராம நாமத்துக்கு உரியவனிடம் தன்னைச் சேர்த்து அவனிடம் மன்னிப்புப் பெறுவது ஒன்றே வழியென்றும் சீதை கூறிய அறிவுரையைக் கேட்ட ராவணன் மனநிலையை மூன்று படித்தரங்களில் கம்பன் எடுத்துக் காட்டுகின்ருன். ஒவ்வொரு படித்தரத்திலும் ராவணனுக்குச் சீதையின் மேலேற்பட்ட கோபம், காமம் ஆகிய உணர்வுகளுக்கிடையே எழுந்த போராட்டம் விவரிக்கப்படுகின்றது. முதல் நிலையில் கோபம் காமத்தை வென்றதையும், இரண்டாவதில் கோபமும் காமமும் சமமாக நின்றதையும், மூன்ருவதில் கோபம் காமத்திற்குத் தோற்றுவிடுவதையும் அழகாக எடுத்துரைக்கின்ருன் கவிஞன்.

சீதையின் அறிவுரையைக் கேட்டதும் அவள் மேல் ஏற்பட்ட கோபம் அவள்மீது கொண்டிருந்த காமத்தை வென்றது. ராவணனின் இருபது கண்களினின்றும் யுகமுடிவில் உலகத்தைஅழிக்க எழும் வடவாமுகாக்னிபோன்று சினத்தீ மூண்டு எழுந்தது. தன்னுல் கவர்ந்து வரப்பட்ட, துணையேதுமில்லாத அபலைப் பெண்ணெருத்தி அச்சமின்றித் தன்னையே அச்சுறுத்தியதைக் கேட்ட ராவணன் மனம் கொதித்தது. விண்ணையும் இடிக்கும் வண்ணம் கைகளை உயரத் தூக்கிக்கொண்டு கால்களைத் தரையில் மிதித்து உரத்த குரலில் கத்தினன்; சீதையை அரட்டினன்; 'இவளைப் பிளந்து தின்று விடுகின்றேன்' என்று எழுந்தான். அந்த நேரம் வரையில் அவனுடைய சினம் காமத்தை வென்றிருந்தது. ஆனல் இந்த வெற்றி ஒரு கணம்தான் நீடித்தது. முதலில் இந்தச் சினத்திற்குத் தோற்றுவிட்ட காமம் இப்போது சிறிது சிறிதாகத் தன் பிடிப்பை அதிகப்படுத்தி அச்சினத்திற்குச் சமமாக வந்துவிட்டது. எனவே, சீதையைக் கொல்ல அவனை எழும்படி கோபம் தூண்டவும், சீதையின் மேலிருந்த காமம் அதனை எதிர்க்கவும் ஆக இரண்டு உணர்வுகளும் சமமாகப் போரிட்டதால் இவற்றிற்கு இடையே சிக்கிய ராவணன் எழுவதும் அமர்வதுமாகச் சிலநேரம் இருந்தான். இறுதியில் அவனுடைய சினத்தீயானது காம வெள்ளத்தால் அணைக்கப்பட்டு விடவே மானம் இழந்தவனுக ராவணன் மறுபடியும் சீதையிடம் பேசத் துவங்கி விடுகின்ருன்.

ராவணன் மனத்தில் சினம், மானம் மற்றும் காமம் இவற்றிற்கிடையே ஏற்படும் போராட்டத்தையும், அப்போராட்டத்தின் இறுதியில் காமமே வெற்றி பெறுவதையும் வேறு சில சந்தர்ப்பங்களிலும் கம்பன் குறிப்பிட்டுச் சொல்கின்ருன். முதன்முதலில் சீதையைப்பற்றிச் சூர்ப்பணகையின் வாயிலாகக் கேட்டதிலிருந்தே ராவணனிடம் இந்தப் போராட்டம் ஆரம்பித்துவிடுகின்றது. சீதையின் அழகையெல்லாம் சூர்ப்பணகை வர்ணிக்க வர்ணிக்க ராவணன் மனம் முழுவதும் சீதையின் தோற்றமே வியாபித்துவிடுகின்றது. ஆரண்யத்தில் சீதையைப் பார்த்து அசோகவனத்தில் அவளைச் சிறை வைக்கும் முன்பே அரக்கர்கோன் அவளைத் தன் அகத்தில் சிறைவைத்துவிடுகின்ருன். மனம் முழுவதும் சீதைமீது ஏற்பட்ட காமமே நிரம்பிவிடுவதால் வேறு உணர்வுகளுக்கு அங்கு இடமில்லாமல் போய்விட்டது. அப்போது பெற்ற வெற்றியைக் காமம் மிக அழுத்தமாகத் தங்கவைத்துக் கொண்டுவிட்டதால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வேறு உணர்வுகள் தோன்றினுலும் அவற்றையெல்லாம் தோற்று ஓடும்படி செய்துவிட்டு ராவணனை அழித்துவிட்டே அவனிடமிருந்து விடைபெற்றுக்கொள்கின்றது. ராமனுடைய அம்புகள் ராவணன் உடல் முழுவதிலும் காமம் இருக்குமிடமெல்லாம் சென்று தாக்கி அதனை முற்றிலும் அழித்துவிட்டதாகக் கம்பன் பாடுவது [யுத்த காண்டம், ராவணன் வதைப் படலம். 237] இங்கு நினைவுகூரத் தக்கது.

ராவணனிடம் ஏற்பட்ட 'மானம்—காமம்'

போராட்டத்திற்குரியன. இன்னும் ஒரு சான்றைப் பார்த்து விட்டு அசோக வனத்திற்கு வருவோம். ராமனை யுத்த களத்தில் ராவணன் முதன் முதலில் சந்திக்கின்றான். முதல் நாள் போரின் முடிவு மூன்று உலகங்களையும் வென்ற ராவணன் முற்றிலும் எதிர்பாராத வண்ணம் அமைந்து விடுகின்றது. திசை யானைகளை வென்ற மார்பினையும், கயிலையை எடுத்த தோள்களையும், நாரத முனிவர்க்கு ஏற்ப நயம் பட உரைக்கும் நாவன்மையையும், தலைகளில் சூடிய பத்துக் கிரீடங்களையும், சிவபெருமானிடமிருந்து பெற்ற சந்திரஹாசம் என்ற வாளையும், ஏன் வீரத்தையுமே யுத்த களத்தில் விட்டு விட்டுத் தொடர்ந்து வரும் பழியினோடும், தூக்கிய கரங்களோடும், விண்ணவரும் மண்ணவரும் அவனைக் கண்டு எள்ளி நகையாட, குனிந்த தலையோடு நடந்துசென்று தன் அரண்மனையுள் புகுந்தான் அரக்கர்கோன். எந்த மனிதரால் தனக்குச் சாவிலிருந்து விலக்கு வேண்டும் என்று வரம் கேட்பதுகூடத் தன் வீரத்திற்கு இழுக்கு என்ற கருதினனே அதே மனிதரால் யுத்த அரங்கத்தில் தோற்கடிக்கப் பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப் பட்டதை நினைக்கும் போதெல்லாம் அவமானம் அவன் உள்ளத்தை எரிக்கின்றதை உணர்ந்தான். எந்த ராமனைப் பூளைப்பூப்போல் வீழ்வான் என்று சீதையிடம் ஆரணியத்தில் [ஆரண்ய. சடாயு. 61] அகங்காரத்தோடு பேசினனே அதே ராமன் அதே பூளைப்பூவை நினைவு படுத்திப் பேசினல் [யுத்த. முதல் போர்புரி. 225] அவமானம் பெருகாமல் வேறு என்ன நடக்கும்? 'அமர்பொருமேல் வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா வீரம்' தோற்றது கண்டு மான உணர்வு மேலோங்குகின்றது. ஆனல் விரைவில் காமம் வெகுண்டெழுந்து மான உணர்வை ராவணன் மனத்திலிருந்து தூக்கி எறிந்து விடுகின்றது.

[யுத்த. கும்பகர்ணன் வதைப்படலம் 10]

ராவணனுடைய தவம், வீரம், சினம், மானம், அறிவு, முருகியல் சுவை முதலிய பண்புகளையெல்லாம் அவன் மனத்திலெழுந்த காமம் சிறிது சிறிதாக அழித்துவிட்டு அவனை முழுவதும் தன் வசமாக்கிக் கொண்ட கதைதான் ராமாயணம். இந்த நீண்ட போராட்டத்தின் போது இடையிடையே அவனுடைய ஏனைய குணங்களுக்கும் காமத்துக்கும் ஏற்பட்ட மோதல்களில் காமமே வென்று அவனை அழிவுப் பாதையில்அழைத்துச் சென்றதுதான் அவலம். சாதாரண மனிதன் ஒருவன் தீய குணத்திற்கு ஆளாகி அழிந்து போவதில் அவலம் ஒன்றும் இல்லை. எல்லா வகையிலும் சிறந்த பண்புகள் நிறைந்த ஒருவன் உயிர் போக்கும் கொடிய நஞ்சு போன்ற ஒரு தீய குணத்திற்கு ஆளாகித் தன்னுடைய நற்பண்புகளையெல்லாம் அத்தீய இயல்பு அழிக்க இடம் கொடுக்கும் போதுதான் அவலம் பிறக்கின்றது. அத்தகைய ஒருவனையே 'அவலத் தலைவன்'— [Tragic Hero] — என்கின்றோம். இதற்கு நல்ல சான்ருக அமைகின்ருன் ராவணன்.

20 பதிலும் எச்சரிக்கையும்

இனி, அசோக வனத்தில் ராவணனுடைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனிக்கலாம். ராவணன்-சீதை சந்திப்பு அனுமன் முன்னிலையில் நடந்துகொண்டிருக்கின்றது என்பதை இவர்களுடைய பேச்சுக்களுக்கிடையே நாம் எங்கே மறந்துவிடுவோமோ என்று கம்பன், ராவணன் சீதைக்குப் பதில் சொன்னதைத் தெரிவிக்குமுன்னர் அனுமனுடைய எண்ண ஓட்டத்தை இரண்டு பாடல்களில் நமக்குக் காட்ட முற்படுகின்ருன். சீதையைக் கொல்ல ராவணன் முனைகிருன் என்பதை அறிந்த அனுமன் தான் செய்யவேண்டியது என்ன என்பதைத் தீர்மானித்து விடுகின்ருன். அந்தக் காமுகனின் கரங்கள் காகுத்தன் தேவியைத் தீண்டும் முன்பு அவன்மேல் பாய்ந்து அவனுடைய பத்துத் தலைகளையும் எற்றிக் கீழே தள்ளிவிட்டு, இலங்கையை அழுத்திக் கடலுள் அமிழ்ந்துவிடும்படி செய்து, புனிதவதியான சீதையைச் சுமந்து சென்று ராமனிடம் சேர்ப்பித்துவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டு தன் கைகளைப்பிசைந்துகொண்டு தயாராகின்ருன் அனுமன். ஆனல் அவன் எதிர்பார்த்தது போன்று ராவணன் சீதையின் அருகில் செல்லவேயில்லை. தன் சினம் முற்றிலும் அவிந்துபோய்ச் சீதையிடம் கெஞ்சுகின்ற பாவனையில் மீண்டும் பேச ஆரம்பித்த ராவணனைக் கவனிக்க முனைகிருன் அனுமன்.

சீதை எழுப்பிய வினக்களுக்கெல்லாம் ராவ

னன் சமாதானம் சொல்கின்றான். இறுதியில் அவளை மிரட்டிப் பயமுறுத்துகின்றான்:-

"நீ என்னைப் பார்த்துப் பேசிய இழிவான வார்த்தைகளுக்காக உன்னைக் கொன்றிருக்க வேண்டும்; உன்மேல் நான் கொண்டுள்ள அன்பினால் அவ்வாறு செய்யவில்லை. நீ எழுப்பிய வினாக்களுக்கெல்லாம் சமாதானம் சொல்வது எனக்கு ஒரு பெரிய காரியமன்று. இந்த உலகத்தில் என்னால் 'இது முடியும்', 'இது முடியாது' என்ற பேச்சிற்கே இடமில்லை. சடாயுவிடம் தோற்றது, கார்த்தவீரியனிடம் கட்டுண்டது இவையெல்லாம் போர்க்களத்தில் விளையாட்டாக நிகழ்ந்த நிகழ்ச்சிகள். போர்க்களத்தில் ஏற்படும் வெற்றி தோல்விகளால் வீரன் பாதிக்கப்படுவதில்லை. எனவே இவர்களெல்லாரும் என்னை வென்றார்கள் என்று நீ சொல்லுவது அபத்தம். நீ சொன்னபடியே வைத்துக்கொண்டாலும், இறப்பில்லாத தேவர்களும் இந்திரனும் எனக்குப் பணிவிடைசெய்ய, மூவுலகத்தையும் நான் ஆட்சி செய்வதை நீயே உன் கண்களால் பார்த்துக்கொண்டிருக்கின்றாயே! இதற்கு என்னுடைய ஆற்றலைத் தவிர வேறு காரணத்தை உன்னால் சொல்லமுடியுமோ?

"இலக்குவன் இல்லாதபோது உன்னைச் சிறையெடுத்து வந்ததற்குக் காரணம் இருக்கின்றது. ராமனையும் இலக்குவனையும்கொன்றுவிட்டு உன்னைக் கவர்ந்து வருவது எனக்குப் பெரிய காரியமில்லை; ஆனால் அவர்கள் இறந்துவிட்டால் நீயும் இறந்துவிடுவாயல்லவா? நீ இறந்துவிட்டால் என் உயிரும் நிற்காது. எனவே உன்னைக் காக்கவும் என்னைக் காக்கவும்தான் வஞ்சனை செய்தேனே தவிர நீ கூறியது போன்று அவர்களுக்குப் பயந்து போய் அல்ல என்பதை நினைவிற்கொள். யுத்தம் என்று வந்துவிட்டால் எனக்கு நிகராக ஈரேழு உலகங்களிலும் யார் இருக்கின்றார்கள்? ஏதோ மான் என்று அதன் பின் தொடர்ந்து சென்ற மனிதர்கள், அது என் ஏற்பாடுதான் என்றும், உன்னைக் கவர்ந்து வந்ததும் நான்தான் என்றும் அறிந்தபோது திரும்பிப் பாராமல் போயிருப்பார்கள். நீ நினைப்பதுபோன்று உன்னை மீட்க அவர்கள் வருவது எங்கே? அவ்வாறு எதிர்பார்க்கும் உன் அறியாமையை என்னென்பேன்! தேவர்களும் கூட நான் சம்பந்தப்பட்டிருப்பது தெரிந்தவுடன் விலகிப் போய்விடுவார்களே தவிர என்னை எதிர்க்கத் துணியமாட்டார்களே! அப்படி இருக்க இந்த மனிதர்களாவது என்னை எதிர்த்து நிற்பதாவது!

"பயனற்ற விரதங்களை மேற்கொண்டுள்ள வலிமையற்ற மனிதர்களிடம் போர்செய்வது மும்மூர்த்திகளையும் வென்ற என் வீரத்திற்கு இழிவாகும். அவர்கள் இருவரையும் என் ஒரு கையால் பிடித்துவந்து எனக்குப் பணிவிடை செய்யுமாறு இப்பொழுதே செய்கிறேன் பார்! ஆனாலும் அழகின் சிகரமே! ஒரு விஷயத்தை யோசித்துப் பார்க்கும்போது அவர்களைத் தண்டிக்க எனக்கு மனம் வரவில்லை. என்னதான் அற்பத் தன்மையுடைய அற்பச் செயல் புரியும் மனிதரானாலும் உன்னை நான் அடையும் வண்ணம் வனத்திற்கு அழைத்து வந்தவர்களல்லவா அவர்கள்? இந்த உதவிக்காக அவர்கள் என்னுடைய நன்றிக்கு உரியவர்களே தவிர என் கோபத்திற்கு ஏற்றவர்களல்லர். இப்போது நீ விரும்பினால் கட்டளையிடு. அவர்களைக் கொன்று விடுகிறேன். நீ எனக்கு இணங்குவாய் என்று நம்பியே இதுவரையில் நான் அவர்களைக் கொல்லாமல் விட்டிருந்தேன். நீ இணங்க மறுப்பது அவர்களைக் கொல்ல வேண்டுமென்று என்னை நீ தூண்டுவது போல் ஆகின்றதல்லவா? மேலும் என்னுடைய கோபத்தினால் ராம இலக்குவரை அழிப்பதோடு வளமான அயோத்திக்குச் சென்று பரதன் முதலியோரையும் உன்னுடைய பிறந்தகமான மிதிலை சென்று உன் தந்தை முதலானவர்களையும் குலத்தோடு வேரறுக்கவும் நான் தயங்கமாட்டேன் என்பதை நினைவில் நிறுத்திக்கொள்! என் விருப்பத்திற்கு இணங்காவிட்டால் உன்னையும் கொல்வேன். இதோ! என்னுடைய வாளைப் பார்த்துக்கொள்! உனக்குக் கொடுக்கப்பட்ட தவணையில் பத்து மாதங்கள் கழிந்துவிட்டன. மீதி இருப்பன இன்னும் இரண்டு மாதங்களே! அதற்குள் உன் சம்மதத்தை எனக்குத் தெரிவிக்காவிட்டால் இந்த வாளுக்கு இரையாவாய்! நன்கு யோசனை செய்து ஒரு முடிவுக்கு வா!"

கல்வியும் சேவையும்

நிலத்தை உழுதல் அல்லது கிளறுதல் மூலம் அது பண்படுத்தப்படுகிறது. அங்ஙனம் உள்ளம் கல்லுதல் அல்லது கிளறுதல் மூலம் பண்படுத்தப்படுகிறது. உயிர்களைத் தெய்வங்களாகக் கருதி அவைகளுக்குச் சேவை செய்தால் உள்ளம் நன்கு பண்படுகிறது. சேவை மூலம்தான் கல்வி இளைஞர்களுக்கு வழங்கப்படவேண்டும். பண்டைக் குருகுல முறையில் சேவைக்கு முதலிடம் தரப்பட்டது. தன்னலமற்ற சேவை செய்யும் பொழுது ஒருவனிடமுள்ள அஹங்காரம் அழிகிறது. மனிதனுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது அஹங்காரமாகும். அஹங்காரத்தை அழித்துவிட்டால் முன்னேற்றம் விரைவில் வந்து அமைகிறது. உயிர்களுக்குச் சேவை செய்வதில் இன்பம் காண்கிறபொழுது மனதின் சிறுமைகள் அழிகின்றன. சிறுமைகளை அழிப்பது கல்வியின் அடிப்படைத் திட்டமாகும்.

நம் நாடு நலிவுற்றதற்குரிய காரணங்கள் பலவற்றுள் பொதுமக்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பது ஒரு காரணமாகும். பொதுமக்களைப் புறக்கணிக்கின்ற நாடு வளர்ச்சி அடையாது என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். எனவே முதலில் பொதுமக்களிடையே நம் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். பொதுமக்கள் வளர்ச்சி அடைவதற்கேற்ப நாடு வளர்ச்சியடையும். கற்றவர்கள் பொதுமக்களைப் புறக்கணிக்கின்ற நிலையில் இருக்கிறார்கள். பொதுமக்களைப் பற்றி அவர்கள் சிந்தனை பண்ணாமல் தங்களைப் பற்றியே சிந்தனை பண்ணுபவர்களாக இருக்கிறார்கள். பொதுமக்களைப் பெரும்பாலும் மறந்த நிலையில் இருக்கிறார்கள். இது நல்ல கல்வியைப் பெறுவதன் அறிகுறியன்று.

பொதுமக்களின் உழைப்பினால் நாட்டுக்குப் பொருள் சேர்கிறது. மக்களிடமிருந்து வாங்கிய வரிப்பணத்தைக் கொண்டு அரசாங்கம் நடந்து வருகிறது. இன்றைக்கு அரசாங்கம் இலவசக் கல்வி ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்களிடமிருந்து வாங்கிய வரிப்பணத்தைக் கொண்டு அரசாங்கம் கல்விக்குச் செலவழிக்கிறது. அரசாங்கம் செலவழிக்கும் பணம் பொதுமக்களுடைய பணமாகும். எனவே கற்கின்ற மாணவர்கள் கல்விக்காகப் பொதுமக்களிடமிருந்து பொருளுதவி பெற்றுக்கொண்டிருக்கிறார்களென்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். மாணவர்கள் பொதுமக்களுக்குப் பணிவிடை புரிவதற்குத் தயங்குதல் கூடாது. கல்விக் கூடங்கள் கட்டுவதில் ஏராளமான பணம் செலவழிக்கப்படுகிறது. அப்படிச் செலவழிக்கும் பணமெல்லாம் பொதுமக்களுடைய உழைப்பிலிருந்து வந்தது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். பொதுமக்களைப் புறக்கணிக்காமல் அவர்களைத் தெய்வங்களாக வைத்துப் போற்றுகின்ற நிலையில் நாம் உருவாகி வரவேண்டும்.

சுவாமி விவேகானந்தர் காசி வீதிகளில் நோய்வாய்ப்பட்டுக் கவனிப்பாரின்றிக் கிடந்த அனாதைகள் சிலரைப் பார்த்தார். அக்காட்சி அவருடைய உள்ளத்தை உருக்கியது. அக்காட்சி அவருடைய உள்ளத்தில் நிலைபெற்றுவிட்டது. கல்கத்தா போன பிறகும் அக்காட்சி அவர் மனதை விட்டு அகலவில்லை. அவர்களுக்குத் தக்க சிகிச்சையும் பாதுகாப்பும் தரவேண்டுமென்று தீர்மானம் செய்தார். தம் சிஷ்யர் கல்யாணானந்த சுவாமிகளை அழைத்தார். விவேகானந்த சுவாமிகள் அவரிடம் பகர்ந்ததாவது: "கல்யாணானந்தரே! நான் காசியில் கண்ட காட்சி என் மனத்தை விட்டு அகலாதிருக்கிறது. காசியில் இறந்தால் முக்தி கிடைக்குமென்று எண்ணி அந்திய காலத்தை அங்குக் கழிக்க வந்த மக்கள் ஆதரிப்பாரின்றி நடுத்தெருவில் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறார்கள். அவர்களுக்குத் தக்க சிகிச்சையும் பாதுகாப்பும் அளித்தாலன்றி நான் மனநிம்மதி அடையமுடியாது. நீங்கள் உடனடியாகக் காசிக்குச் சென்று என் எண்ணத்தைச் செயலுக்குக் கொண்டு வரவேண்டும். நீங்கள் அதில் முழு வெற்றியைப் பெற என் ஆசியை அளிக்கின்றேன். நாலணா கைவசம் தருகின்றேன். அதுதான் மூலதனமாகும். மனப்பூர்வமாகச் சேவையில் இறங்குவீர்களானால் பொருளும் மற்ற உதவிகளும் உங்களைத் தேடிக்கொண்டு வரும். உடனே காசிக்குச் சென்று இப்

பொழுதே சேவையில் ஈடுபடுங்கள். சுவாமி விவேகானந்தருடைய எண்ணத்தை நிறைவேற்ற ஸ்ரீமத் கல்யாணனந்த சுவாமிகள் செயலில் ஈடுபட்டார். இன்றைக்குக் காசியில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்ரமம் கல்யாணனந்த சுவாமிகள் ஆரம்பித்த பணியின் விளைவாகும். அன்று காசியில் நோய் வாய்ப்பட்டுக் கவனிப்பாரின்றிக் கிடந்த மக்கள் போன்று இன்றைக்குச் சமுதாயத்தில் பண்பிலும், கல்வியிலும், அறிவியல் துறையிலும், அன்பிலும் பின்னடைந்துள்ள மக்கள் ஏராளமாக இருக்கிருர்கள். அவர்களுக்கு உதவி புரிவதற்குக் கல்வி பயின்றவர்கள் முன்வரவேண்டும்.

உலகில் இன்றைக்குப் புதுமாதிரியான மூட நம்பிக்கை இருந்து வருகிறது. எல்லாக் காலத்திலும் மூட நம்பிக்கைக்கு இடமுண்டு. விஞ்ஞான வளர்ச்சியில் நாடு போய்க்கொண்டிருப்பதற்கிடையில் அஞ்ஞானமும் வளர்ந்து கொண்டு வருகிறது. நன்ருகச் சிந்தித்துப் பார்க்காது, ஒரு கொள்கையை அனுபவத்துக்குக் கொண்டுவந்து பார்க்காது நம்பிக்கை கொள்வதை மூட நம்பிக்கை என்று பகரலாம். ஒரு விஷயத்தை அறிவைப் பயன்படுத்தி நன்ருக ஆராய்ந்து நடைமுறைக்குக் கொண்டு வந்தபின் அதைப்பற்றி முடிவெடுக்கவேண்டும். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவது மூட நம்பிக்கை ஆகும்.

கிராமப்புறத்தில் வசித்து வந்த இளைஞன் ஒருவன் நகரத்துக்கு வந்தான். அங்கு டைம் பீஸ் ஒன்றைக் கடிகாரக் கடையில் பார்த்தான். அது அவன் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. அதை விலைகொடுத்து வாங்கி வீட்டுக்கு எடுத்துச் சென்ருன். அவனுடைய பாட்டி அக்கடிகாரத்தை மிக்க ஆவலோடு பார்த்தாள். அதிலிருந்து வந்த 'டிக் டிக்' என்னும் ஓசை அவளை வியப்பில் ஆழ்த்தியது. பாட்டி அதற்கு 'டிக் மனிதன்' என்று பெயர் வைத்தாள். கடிகாரம் வந்த சில நாட்களுக்குள் அவ்வீட்டில் பொருளாதார நஷ்டம் ஏற்பட்டது. "இந்த டிக் மனிதன் வீட்டுக்கு வந்தால் நம் வீட்டுக்குப் பொருளாதார நஷ்டம் வந்துவிட்டது. உடனே இவனை வீட்டைவிட்டு ஓட்டிவிடவேண்டும். இவன் இனிமேல் வீட்டிலிருக்கக்கூடாது" என்று பேரனிடம் பாட்டி சொன்னுள். பேரன் பாட்டியின் பேச்சைக் கேட்காது கடிகாரத்தின் மீதுள்ள பிரியத்தினுல் அதை வீட்டிலேயே வைத்திருந்தான். மேலும் சில நாட்களுக்குள் அவ் வீட்டில் மரண சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. டிக் மனிதன் வந்ததுதான் இதற்கும் காரணம் என்று பாட்டி முடிவெடுத்தாள். எனவே பேரனுக்குத்தெரியாது கடிகாரத்தை எடுத்து எதிரியினுடைய வீட்டுப்பக்கம் வீசி எறிந்து நொறுக்கித் தள்ளிவிட்டாள். கடிகாரம் வந்ததால் வீட்டில் அனர்த்தங்கள் வந்தன என்று பாட்டி நம்பியது மூட நம்பிக்கையாகும். வீட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்கும் கடிகாரத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தொடர்பில்லாத நிகழ்ச்சிகளைத் தொடர்புடையவைகளாகப் பாட்டி எண்ணியது மூட நம்பிக்கைக்கு விளக்கமாகும்.

உலகில் இன்றைக்கு அப்பாட்டியினுடைய மூட நம்பிக்கைபோன்று ஒரு மூட நம்பிக்கை உருவெடுத்திருக்கிறது. சமய வளர்ச்சியினுல் மக்களுடைய அறிவு கெட்டுப் போகிறதுஎன்று எண்ணுகின்ற மூட நம்பிக்கை மக்களிடையே உருவாகி இருக்கிறது. சமய நூல்கள், சாஸ்திரங்கள், வேதாந்தம் முதலியவற்றைப் படித்தால் மனிதன் கெட்டுப்போய்விடுவானென்று மக்கள் நினைக்கிருர்கள். இப்படி எண்ணுவது ஒரு மூட நம்பிக்கை. கடவுள் வழிபாடு செய்தால் மனிதன் கெட்டுப் போவானென்று எண்ணுவது ஒரு மூட நம்பிக்கை. "அறிவுள்ள பொருளைச் சிந்திப்பதாலும் வழிபடுவதாலும் ஒருவன் அறிவற்றவனுகி விடுவானுகில் அறிவற்ற பொருளைச் சிந்தித்தால் அவன் அறிவுடையவனுக எப்படி ஆவான்?" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்கின்ருர். சிந்தனை தான் ஒருவனை அறிவுடையவனுகவோ அறிவற்றவனுகவோ ஆக்குகிறது. வாலறிவனுக இருக்கும் கடவுளைச் சிந்திப்பதால் ஒருவன் அறிவற்றவனுகப் போய்விடுவானுகில் அவனை அறிவுடையவனுக ஆக்குவதற்கு வேறு வழியே இல்லை.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅர் எனின்" என்பது வள்ளுவர் வாக்கு.

வழிபாடு செய்வதை மூட நம்பிக்கையாகக் கருதும் எண்ணத்தை விஞ்ஞானக் கல்வி வளர்த்து வருகிறது. விஞ்ஞான உலகில் வளர்ந்து வரும் நாம் அறிவை மட்டும் வளர்ப்பதில் கவனத்தைச் செலுத்தி, இதய வளர்ச்சியில் கவனம் செலுத்தாது விட்டுவிட்டோம். அறிவும் உணர்வும் நம்மிடம் சேர்ந்தே வளர வேண்டும். இதயம் மலர்ந்தால்தான் அன்பு நம்மிடத்தில் ஓங்கும். விஞ்ஞான வளர்ச்சி இதயத்தை மழுங்கச் செய்துவிட்டது. இன்றைக்கு இதயம் மழுங்கிப் போனதால் அன்புக்கு இடமில்லாது போய்விட்டது. விஞ்ஞான வளர்ச்சியானது மேலும் மக்களிடையே சுய நலத்தை வளர்த்துவிட்டது. வாழ்க்கையில் வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்கு விஞ்ஞானம் துணைபுரிகிறது. வாழ்க்கையில் வசதிகள் பெருகி வர வர மனிதனுக்குச் சுகத்தில் நாட்டம் செல்கிறது. வாழ்க்கையில் சுகம் பெறுவதற்கு மனிதன் தேவையைப் பெருக்குகின்றான். தேவை பெருகப் பெருக, எவ்வளவு வந்தாலும் போதவில்லை என்ற மனநிலைதான் உருவாகிறது. எவ்வளவு பொருள் தேடினாலும் தன் வாழ்க்கைக்குப் போதவில்லை என்று எண்ணும் எண்ணம் மனிதனிடத்தில் சுய நலத்தை வளர்த்துள்ளது. நிலத்தில் பாடுபடுவோனுக்கு மண்வெட்டி, கலப்பை முதலியகருவிகள் தேவைப்படுகின்றன. ஆனால் இன்றைக்கு அவனுக்கு அவற்றையெல்லாம் விட, டிரான்ஸிஸ்டர்தான் தேவைப்படுகிறது. தெருக்களில் அலைந்து திரியும் நரிக்குறவர் போன்றவர்களுக்கும் டிரான்ஸிஸ்டர் தேவைப்படுகிறது. மக்களிடையே இப்படி ஆடம்பரப் பொருள்களை விரும்பும் மனநிலையை உருவாக்கியது விஞ்ஞான வளர்ச்சியாகும். மக்களிடையே இருதயம் நன்கு வளர்ந்திருந்தால் இத்தகைய போகவாழ்வில் மனம் செலுத்தி இருக்கமாட்டார்கள்.

உயிர்களிடத்தில் அன்பு ஏற்படும்பொழுது சுயநலம் துடைக்கப்படுவதாக ஆகிறது. அன்பை வளர்ப்பது அவசியமாகிறது. அறிவு வளர்ச்சியோடு அன்பும் சேர்ந்து வளர்ந்தால் நம்மிடத்தில் சுயநலம் வளராது பரநலத்திற்காகப் பாடுபடும் பாங்கு வளரும். புற உலகில் சுகம்பெறும் நாட்டம் சுயநலக்காரர்களாக்கிவிடும். உலகில் சுகத்தை நாடிப் போகின்றவர்களுக்கு வாழ்க்கையில் இதய மலர்ச்சி ஏற்படாது. மன்னுயிர்களின் நலனுக்காக வாழ்க்கை அமைந்திருக்கிறதென்ற உணர்ச்சி இதயக் கல்வியின் மூலமாக ஏற்படுகிறது. நவீனக் கல்வித்திட்டத்தில் இதய மலர்ச்சிக்கு இடமில்லை. கல்வியில் உள்ள இக்குறைபாட்டைச் சில மாதங்கள் பள்ளி சென்றதும் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அறிந்துகொண்டார். தற்காலக் கல்வி தமக்கு வேண்டாம் என்று ஒதுக்கி வைத்துவிட்டார். இதயத்தை மலரச் செய்யும் திட்டம் இக்கல்வித்திட்டத்தில் இல்லாததால் இக்கல்வி கற்பதில் தாம் காலத்தை வீணாக்குவதில்லை என்று உறுதி பூண்டார். இதயத்தை மலரச் செய்யாத கல்வி கல்வியாகாது. இதயத்தை மலரச் செய்யும் கல்வியில் தாம் ஈடுபடப் போவதாகக் கூறினார். அவர் கூறியது போன்று இதயத்தை மலரச் செய்யும் கல்விதான் இன்றைக்கு நமக்குத் தேவை. உயிர்களிடத்து அன்பை ஓங்கவைக்கும் பண்பு நம்மிடத்தில் வளரவேண்டும். அப்போதுதான் பண்பாட்டில் நாம் மேலானவர்கள் ஆகமுடியும். அறிவை வளர்த்து வருவதற்கிடையில் நவீனக் கருவிகளைப் பயன்படுத்தி வருவதற்கிடையில் இதயத்தில் அன்பையும் நாம் வளர்த்துவர வேண்டும். "உயிர்களிடத்தில் அன்புவேண்டும்; தெய்வம் உண்மையென்று தான் அறிதல்வேண்டும்" என்ற பாரதியார் கோட்பாட்டை நாம் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். அறிவை மட்டும் வளர்த்து இதயத்தில் அன்பை மலரச் செய்யாவிட்டால் சீரிய மக்களாக நாம் உருவாக முடியாது. உயிர்களிடத்தில் நல்லிணக்கம் வைத்துப் பழகவேண்டும். உயிர்களுக்குச் சேவை செய்து பழகவேண்டும். உற்றார் உறவினர் என்ற பந்தபாசங்களை உள்ளத்திலிருந்து தகர்த்து எறியவேண்டும். சைவன், வைணவன், கிறித்தவன், மகம்மதியன் என்று மதத்தினால் வரும் வேற்றுமை உணர்ச்சிகளை விட்டு ஒழிக்கவேண்டும். பார்ப்பான், பறையன், வைசியன் என்று குலத்தால் வரும் மனக்குழப்பங்களையும் விட்டு ஒழிக்கவேண்டும். வடநாட்டான், தென்னாட்டான், ஆங்கிலேயன், ஐரோப்பியன் என்று இடத்தால் ஏற்படும் வேற்றுமை

உணர்வுகளையும் விட்டு ஒழிக்கவேண்டும். கல்வியானது மேற்கூறிய வேற்றுமை உணர்ச்சிகளையெல்லாம் தகர்த்தெறிவதற்குப் பயன்படவேண்டும். மேற்கூறிய வேற்றுமை உணர்ச்சிகளை வளர்த்து வரும் கல்வி கல்வியாகாது. மக்களனைவரும் மகேசுவரனின் தோற்றங்களாவார்கள் என்று மக்களிடத்து அன்பை வளர்க்கவேண்டும். உயிர்கள் அனைத்தும் உண்மைப் பொருளின் தோற்றங்கள் ஆவார்களென்று உயிர்களிடத்து அன்பை வளர்க்க வேண்டும். இங்ஙனம் உயிர்களிடத்து அன்பு வைத்து உண்மைதான் தெய்வமென்று அறிவது கல்வியின் மூலம் நிகழவேண்டும். இக்கருத்தைத்தான் "உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்; தெய்வம் உண்மை என்று தான் அறிதல்வேண்டும்" என்று பாரதியார் பகர்ந்துள்ளார். உயிர்களிடத்து அன்பு வளர வளரச் சுயநலமற்ற பாங்கு நம்மிடத்துத் தானுக உருவாகிறது.

நர சேவையை மக்கள் புறக்கணித்திருக்கிறார்கள். நரசேவை நாராயண சேவையாகுமென்று சுவாமி விவேகானந்தர் நரசேவையை வலியுறுத்திச் சொல்லியுள்ளார். மக்களுக்கு அன்னதானம், கல்விதானம், அருள்தானம் என்னும் மூன்று முறைகளில் சேவை செய்யலாம். கல்வி கற்றவர்கள் தங்கள் உடல் உழைப்பினுலும், அறிவினுலும், பண்பினுலும் தங்களிடம் உள்ளஆற்றலைக் கரவாது மக்களுக்குப் பயன்படுத்தவேண்டும், பொருள் வளமும், அறிவு வளமும், அருள் வளமும் நாட்டில் பெறுவதற்குக் கல்விமான்கள் தங்களுடைய அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். சுயநலத்தோடு எத்தொழிலைச் செய்தாலும் அது இழி தொழிலாகும். நாட்டுக்காகச் செய்யும் தொழில் போற்றுதற்குரியதாகும். நாட்டுக்காகப் பணிசெய்வதற்குக் கற்றவர்கள் சிறிதும் தயங்கக் கூடாது.

"தன்னலம் பேணி இழி தொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக் கையை விரியோம்"

என்று பாரதியார் பகர்ந்துள்ள வாசகத்தைக் கல்விமான்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஒரு நாட்டில் பெண்பாலர்கள் எத்தகைய உயர் நிலையில் வைத்துப் போற்றப்படுகிறார்களோ, அதற்கேற்ப நாடு முன்னேற்றமடையும் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். தாய்மார்கள் அனைவரையும் பராசக்தி சொருபங்களாகப் பாவித்துப் போற்றுதல் வேண்டும். தாய்மார்களைச் சக்தியின் வடிவங்களாக வைத்துப் பூஜிக்கப்படும் பொழுதுதான் நாடு முன்னேற்றமடையும். ஸ்ரீ இராமகிருஷ்ணர் தம் துணைவி சாரதாமணிதேவியைப் பராசக்தி சொருபமாக வைத்துப் பூஜித்தார். நாம் பெண்பாலர்களை எப்படி நடாத்தவேண்டுமென்பதை அவர் காட்டித் தந்துள்ளார். பெண்களுக்குத் தக்க கல்வி அமையவேண்டும். கல்வியிலும், பண்பிலும் பெண்கள் முன்னேற்றமடைவார்களானல் சமுதாய முன்னேற்றத்துக்கு அது பெருந்துணையாக அமையும். குழந்தைகள் தாயிடமிருந்து அடிப்படைக் கல்வியைக் கற்றுக்கொள்கின்றன. தாய் புகட்டுகின்ற விஷயங்கள் குழந்தைகளின் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிடுகின்றன. சுவாமி விவேகானந்தர் சிறுவராக இருந்தபொழுது அவருடைய தாயார் புவனேஸ்வரிமாதா இராமாயணம், மகாபாரதம்போன்ற காவியங்களை இசையோடு பாடி அவருடைய உள்ளத்தில் அவைகளை நன்கு பதியச்செய்துவிட்டார். விவேகானந்தருடைய உள்ளத்தில் இராம பக்தி வளர்வதற்கும் அவருடைய தாயார் புவனேஸ்வரிமாதாவே காரணமாவார். தாய் தன் உடலில் உண்டாகும் பாலைக் குழந்தைக்கு ஊட்டி உடலை வளர்ப்பதைவிடக் குழந்தையின் உள்ளத்தில் தன்னிடத்துள்ள பண்பைத் தந்து வளர்ப்பதே சிறப்புடையது. 'நூலைப் போல சேலை; தாயைப் போல பிள்ளை' என்று கூறும் பழமொழி ஒன்று உண்டு. தாயினுடைய பண்பாடு குழந்தையின் உள்ளத்தில் எளிதில் பதிந்துவிடுவதால் பெண்பாலர்கள் பண்பாடும் கல்வியும் உடையவர்களாக இருக்கவேண்டும். எனவே இதயத்தை வளர்க்கின்ற கல்வி பெண்பாலர்களுக்கு அவசியமாகிறது. இடைக்காலத்தில் பெண்பாலர்களுக்குக் கல்வி அவசியம் இல்லை என்ற எண்ணம் மக்களிடையே இருந்தது. தற்காலக் கல்விமுறையின்படி அமைந்துள்ள கல்வி அவர்களுக்குத் தேவை இல்லை. நம் நாட்டுப் பண்பை வளர்க்கும் ஆன்மீகத்தோடு கூடிய கல்விஆண்பாலர்களைவிடப் பெண்பாலர்களுக்கு அவசியமாகிறது. (தொடரும்)

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

10. வெப்ப சக்தியும் பகவந்நாம மகிமையும்:

இந்நிலவுலகின்கண் உயிர்வாழ்வதற்கு உண்ணும் உணவும், சுவாசிக்கும் காற்றும் எத்துணை இன்றியமையாதனவோ அத்துணை இன்றியமையாததே வெப்பமும். இன்னும் சொல்லப்போனால் வெப்பம் இன்றேல் உணவேது? காற்றில் அசைவேது? சூரியனின் ஒளியிலேயன்றோ தாவரங்கள் உணவைத் தயாரிக்கின்றன. நாம் உண்ணும் உணவும் வெப்பமாக அல்லவா மாற்றப்படுகிறது. அதுவே யன்றோ நாம் வேலை செய்வதற்கான ஆற்றலை அளிக்கின்றது. நாம் பயன்படுத்தும் பல்வகை ஆற்றல்களுக்கும் ஆதிகாரணமாய் அமைவது வெப்பமேயன்றோ' நம் உலகிற்குத் தேவையான வெப்பம் முழுவதையும் கதிரவன் கரவாது வழங்குவதாலன்றோ நாம் பகலவனுக்குப் பொங்கலிட்டுப் போற்றிப் பாடுகிறோம். அதனாலேயன்றோ இளங்கோவடிகளும் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்றார்.

வெப்பம் ஒருவகைக் கதிர்வீசும் ஆற்றலாகும். வெப்பம் இருப்பதை அது ஏற்படுத்தும் விளைவுகளைக்கொண்டு அறியலாம். பனிக்கட்டியை ஒரு பாத்திரத்திலிட்டுச் சூடேற்ற அது நீராகிறது. நீரைக் கொதிக்க வைக்க அது ஆவியாகிறது. இவ்வாறாக வெப்பம் எந்த ஒரு பொருளையும் நிலைமாறச் செய்யும். ஒருதிரவத்தைச் சூடாக்கினால் அதன் வெப்பநிலை உயருகிறது. மேலும் மேலும் வெப்பத்தைக் கொடுத்துக்கொண்டே சென்றால் வெப்பநிலை உயர்ந்து கொண்டேபோய் ஓரிடத்தில் நின்றுவிடும். இந்நிலையில் திரவம் கொதித்து ஆவியாகும். ஆக ஒரு திரவத்தைக் கொதிக்க வைத்தால் அது ஆவியாகிறது. இவ்வாறு ஏற்படும் நிலைமாற்றத்தைக் கொதித்தல் (Boiling) என்கிறோம்.

இவ்வாறல்லாது திரவம் வாயுவாவதற்கு வேறொரு முறையும் உண்டு. தரையில் சிந்திய நீர் சிறிது நேரத்தில் ஆவியாகி மறையக் காண்கிறோம். கோடையில் நீர் நிலைகளில் நீர்மட்டம் குறைந்து கொண்டே செல்கிறது. ஆனால் இங்கெல்லாம் வெப்பநிலை நீரின் கொதிநிலையில் இல்லை என்பது தெரியும். இவ்வாறாகக் கொதி நிலைக்குக் கீழான வெப்ப நிலையிலேயே ஏற்படும் மெதுவான, அமைதியான நிலைமாற்றமே ஆவியாதல் (Evaporation) எனப்படும். இவ்வாறு திரவம் ஆவியாவதற்குத் தேவையான வெப்பத்தை எடுத்துக் கொள்வதால் திரவம் குளிர்ச்சி அடையும். இதனால்தான் கோடைக் காலத்தில் மண்பானையில் வைக்கும் நீர் குளிர்ந்திருக்கிறது. கையில் ஒரு சொட்டு ஈதர் (Ether) திரவத்தைவிட அது ஆவியாகும் போது கை சில்லிட்டுப் போவதும் இதனால் தான். தரையில் ஒரு குறிப்பிட்ட அளவு நீரை அதிகமான பரப்பின்மீது சிந்தினால் அது விரைவில் ஆவியாதலையும் காண்கிறோம். ஆவியாதல் நிகழ்ச்சி திரவத்தின் மேற்பரப்பிலேயே நிகழும் என்பது தெளிவு. கொதித்தலின்போது நீர் குமிழியிடுதல் போன்று ஆவியாதலின்போது வெளிப்படையாக எம்மாற்றமும் ஏற்படுவதில்லை. எனவே ஆவியாதல் கொதித்தலிலிருந்து வேறுபட்டது. கொதித்தல் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில்தான் நிகழும். ஆவியாதல் எல்லா வெப்ப நிலைகளிலும் நிகழும்.

ஜீவனை ஒரு நீருள்ள தொட்டிக்கு நிகராகக் கொண்டால் நாம் செய்த பாபங்கள் அதிலுள்ள நீருக்கு நிகராகும். இப்பாபம் என்ற நீரானது ஆவியாக வேண்டுமானால் பகவந் நாமம் என்ற வெப்பம் தேவை; பகவந் நாமம் என்ற வெப்பத்தால் பாபங்கள் நீங்கி நாம் நற்கதி பெறலாம். 'வீழ்நாள் படாமல் நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்' என வள்ளுவர் கூறியாங்கு, தினந்தோறும் பகவந் நாமத்தை உச்சரித்து, அருள்தாகம் பிடித்து ஆத்ம சாதனங்களை ஒழுங்காகச் செய்து வந்தால் சூரியனைக் கண்ட பனிபோல் பாபம் மறையும். ஆகையால் பகவந்நாமம் பாபங்களைப் போக்கும் என்பது தெளிவு.

"தொட்டியில் வைக்கப்பட்ட தண்ணீர் வெப்பத்தால் ஆவியாகிவிடுகிறது. ஜீவனைச் சார்ந்துள்ள பாபங்கள் பகவான் நாமத்தை உச்சரிப்பதால் அகன்றுபோய்விடுகின்றன.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

விக்ஞானத்தின் விளைவுகள்

(சுவாமி ஸதானந்தர்)

இங்கு விக்ஞானம் என்பதன் பொருளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அறிவு, புத்தி, மூளை, ஞானம், விக்ஞானம், மெய்ஞ்ஞானம் என்பவைகள் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள் ஆயினும் குடிசை, வீடு, பங்களா, மாளிகை, அரண்மனை, கோவில் என்கிற சொற்கள் குடியிருக்கிற இடங்களைக் குறிப்பன ஆயினும் அச்சொற்கள் வீட்டின் அளவு, குடியிருப்பவர் யார், அதன் சிறப்பு இவ்வளவையும் விளக்கிவிடுகின்றன. அப்படிப் பழக்கத்தில் அச்சொற்கள் பொருள் கொண்டுவிட்டன. அதேபோன்று அறிவும் புத்தியும் சாதாரண உலக அறிவைக் குறிக்கின்றன. மூளை என்பது கருவியானாலும் உனக்கு மூளை இருக்கிறதா என்று கேட்கும்போது அறிவைக் குறிக்கிறது. ஞானம், விக்ஞானம், மெய்ஞ்ஞானம் ஆகியவை பிரபஞ்ச அதீதமான கடவுள் விஷயங்களைக் குறிக்கின்றன. ஆனால் பள்ளியில் சொல்லித் தரப்படும் சயின்ஸ் (Science) பாடத்திற்கு விக்ஞான பாடம் என்று பெயர் சூட்டி அது பழக்கத்தில் வந்து விக்ஞானம் என்பது நவீன இயற்கை ஆராய்ச்சியைக் குறிக்கிறதாகப் பழக்கத்தில் வந்துவிட்டது. அதற்குப் பௌதிக விக்ஞானம் என்றும் சொல்வார்கள். பௌதிகம் என்கிற பதத்தினால் இப்பஞ்சபூத சம்பந்தமான, இப்பிரபஞ்ச சம்பந்தமான நுட்பமான அறிவு என்கிற பொருள் உண்டாயிற்று. இதைப் பாகுபடுத்தவே மெய்ஞ்ஞானம் என்கிற பதமும் உருவானது. ஆகையால் இங்கு விக்ஞானம் என்று குறிப்பிட்டிருப்பது பௌதிக அறிவையேயாகும். விக்ஞானத்தைப் பற்றி அதைக் கண்டு பிடிக்காத பாமரமக்கள் கொண்டுள்ள அக்ஞானம், அதைக் கண்டு பிடிக்கிறவர்களிடையே உள்ள அக்ஞானம் இரண்டையும் குறிப்பிடவே, அதன் மேல் உள்ள அதிகமான மோஹத்தைப் போக்கவே இது எழுதப்படுகிறது.

அறிவில்லாத ஸ்தாவரம் இல்லை, அறிவில்லாத விலங்கு இல்லை, அறிவில்லாத மனிதன் இல்லை, அறிவில்லாத ஜீவனோ, உயிரோ இல்லை. பஞ்சேந்திரியங்களை எப்போது உபயோகப்படுத்த ஆரம்பித்தனவோ, பஞ்சபூதங்களை எப்போது உணர, நுகர, அறிய ஆரம்பித்தனவோ அப்போதே ஜீவன்களுக்கு அறிவும் தோற்றத்துக்கு வர ஆரம்பித்துவிட்டது. அறிவின் தூண்டுதலினாலேயே அது இந்திரியங்களை உபயோகித்தது, புலன்களை நுகர்ந்தது. ஆசைப்படுவது அறிவு, பொறாமைப்படுவது அறிவு, திருடுவது அறிவு, சூதும் வாதும் செய்வது அறிவு, தன்னை அறிவதும், உலகை அறிவதும், இப்பிரபஞ்சத்தை இயக்கிவரும் தர்மத்தை அறிவதும், இறைவனை அறிவதும் அறிவே. இப்பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் அறிவின் செயல்களே. அறிவு அல்லது பிரக்ஞை அல்லது உணர்ச்சி எத்தனை கோடி படித்தரங்களில் இருக்கக் கூடும் என்பதை ஐதரேய உபநிஷதம் விளக்கியிருக்கிறது. இதுபற்றிய ஒருகட்டுரை தர்ம சக்கரம் 12வது சக்கரம் 516ஆம் பக்கத்தில் வெளி வந்துள்ளது. இப்பிரபஞ்சம் அறிவிலிருந்து தோன்றி வந்துள்ளது; அறிவில் நிலை பெற்றிருக்கிறது; அறிவில் ஒடுங்கி விடுகிறது என்கிறது வேதம்.

எல்லாம் பேரறிவின் தோற்றங்களாக இருக்கும் போது, பின் ஏன் இவ்வளவு துன்ப துயரங்கள், அறியாமைகள் நிலவுகின்றன?

अज्ञानेन आवृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः

ஞானம் அக்ஞானத்தால் மூடப்பட்டிருக்கிறது. ஆதலால் உயிர்கள் மயக்கமடைகின்றன. (கீதை 5-15) ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்காகத் தண்ணீர் தேடிக்கொண்டு சென்ற நாரதர் சில நிமிஷங்களில் சென்ற காரியத்தை மறந்து மோஹத்தில் மூழ்கிவிட்டார். எப்போதும் நிதானம், சாந்தம், அமைதி, பற்றற்ற தன்மையில் நிலை பெற்றிருந்த ஸ்ரீராமன், தர்மபுத்திரர் போன்றவர்களும் சில நேரங்களில் அவசரப்பட்டு விட்டனர். அக்ஞானம், அவித்தை, மாயை, திரோதானம் எல்லாம் ஒரு பொருள் தரும் பல சொற்கள். அவைகளும் அறிவின் செயலே. சந்தேகிப்பதும், உண்மைக்கு மாறாக இப்படி இருக்கலாமோ என்று எண்ணுவதும், எண்ணத்தின், மனதின் செயல்கள் யாவும் அறிவின்

செயல்களே. ஆகையால் ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம பேரறிவே மெய்ப்பொருள் என்கிற மஹாவாக்கியமும் தோன்றியது. அறிவுக்கு அன்னியமாக இப் பிரபஞ்சத்தில் வேறு ஒன்றுமில்லை. இப்பிர பஞ்சம் முழுவதும் சித்சொரூபம்.

அப்படி இருக்க இரண்டு மூன்று நூற்றாண்டு களாகத்தான் விஞ்ஞானம் உருவெடுத்ததாக, வளர ஆரம்பித்ததாக ஒரு கற்பனை, அறி யாமை இருந்து வருகிறது. ஆனால் அறிவோ சிற்றுயிர் தோன்றிய நாள் முதல் இருந்து வருகிறது. வைக்கோலைப் பிரிவிட்டு, நாற்று கட்டிச் சுமக்கலாம். தென்னை மட்டையின் நாரிலிருந்து கயிறு பின்னலாம். பஞ்சுபோன்ற மெல்லிய வஸ்துக்களிலிருந்து நூல் நூற்க லாம். அதை வேஷ்டி, துணி ஆக்கலாம் என்று படிப்படியாகக் கண்டு பிடித்ததின் தொடர்பாகவே இப்போது யூகலிப்டஸ் மரத் திலிருந்து நூல் நூற்கலாம்; ஒருவகை மணலி லிருந்து நூல் நூற்கலாம் என்று கண்டு பிடித் தார்கள். இலுப்பை எண்ணெய், வேப்ப எண் ணெய், ஆமணக்கு எண்ணெய், எள் எண் ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண் ணெய் இவைகள் எவ்வளவு காலமாகவோ சமூகத்தில் நிலவி வருகின்றன. இதன் தொடர் பாகவே தவிடு எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பனை ஓலை, தென்னங்கீற்று, ஈச்சம்பாய், கோரைப் பாய் இவைகளைக் கண்டு பிடித்து உபயோகத் திற்குக் கொண்டு வந்த அடிப்படை அறிவிலி ருந்துதான் புதிய கண்டு பிடிப்புக்கள் சாத்திய மாயின. கரும்பிலிருந்து, பதநீரினின்று வெல் லம், சர்க்கரை உற்பத்தி செய்ததிலிருந்துதான் நவின அஸ்கா சர்க்கரை செய்யும் முறை சாத்தியமாயிற்று. பூமியைப் பழங்காலத்தில் உழுதமுறைகளை வைத்துத்தான் நவீனயந்திரக் கலப்பைகள் உருவாயின. இப்படி அறிவின் வளர்ச்சி, நவீனக் கண்டுபிடிப்புக்கள் பழைய தின் தொடர்பாக இருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும்.

கீரை, பருப்பு, நெய் ஆகிய சத்துப்பொருள் கள் நன்கு உணவில் இடம் பெற வேண்டும். நன்றாக மென்று சாப்பிடவேண்டும். சரீரத் திற்கு உழைப்பு வேண்டும். உடற்பயிற்சி வேண்டும். அப்போதுதான் நாம் ஆரோக் கியமாக வாழமுடியும். இப்படி விக்ஞானத் தில் படிக்கிறோம். ஆனால் அரிசியை மிஷினில் தீட்டி, கஞ்சியை வடித்து வெறும் சக்கையைச் சாப்பிடுகிறோம். வயிறு தள்ளித் தொந்தி வயிறு படைத்த மனிதர்களாக ஆகிறோம். காய்கறிகளையும் அவித்துத் தண்ணீரை வடித்துவிட்டுச் சக்கையைச் சாப்பிடுகிறோம். க்ஷவரம் பண்ணிக்கொள்ள மிஷின், சலவை பண்ண மிஷின், மலை ஏறிப்போக lift, இருந்த இடத்திலிருந்து பேச internal telephone, இப்படிச் சரீர உழைப்பைக் குறைக்கிற விக் ஞானக் கண்டுபிடிப்புக்கள் ஆரோக்கியமான வாழ்வுக்கு இடைஞ்சலாகச் சமூகத்திற்குள் வந் துள்ளன. இக்குறைபாட்டைக் கண்டுபிடிப்ப வனும் சிந்திப்பதில்லை; உபயோகிக்கிறவனும் சிந்திப்பதில்லை; அரசாங்கமும் சிந்திப்பதில்லை. இது விக்ஞானத்தின் அக்ஞானம்தானே.

போர்முறைகளுக்காகக் கண்டுபிடித்துக் கொண்டேபோகும் அழிவுக் கருவிகள் அதிக மாகப் போய்க்கொண்டே இருக்கின்றன. துணி, வாசனை திரவியம், இசைக் கருவிகள், வீட்டை அழகுபடுத்துதல் போன்றவைகளில் அளவுக்குமேல் கவனம் செலுத்தி வீண் ஆடம் பரம் ஆக்கிவிட்டார்கள். முன் காலத்தில் கூரை வேய்ந்த எளிய வீடுகளில், வனத்தில் ரிஷிகளும் முனிவர்களும் மற்றவர்களும் நல்ல வர்களாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று நவீன நகரங்களில் பெரிய சொகுசு மாளிகை களில் பெரும்பாலோர் ஆடம்பரமாக வாழ்கின் றார்கள். எப்போது பார்த்தாலும் ரேடியோ சப்தம் ஒலிபெருக்கி காதைத் துளைத்துக் கொண்டிருக்கிறது. தெருவில் வண்டி வாக னங்களில் அதிக சப்தமுள்ள ஹாரன்கள், சினிமா, நாடகம், பஜனைகள் யாவும் கூப்பாடு போட்டுப் பேசுதல் இவையெல்லாம் வருங் காலசமூகத்திற்கு என்ன தீமைகளைச் செய்யப் போகின்றனவோ? எப்போது பார்த்தாலும் நாவில் வெற்றிலை அல்லது சாக்லெட் அடக்கி யிருந்தால் நாவின் சுவை அறிகிற தன்மை போய்விடுகிறது; தொண்டை கெடுகிறது; ஜீரண சக்தியும் கெடும். அதேபோல்தான் மற்ற செவி, கண் ஆகிய இந்திரியங்களின் தன்மையும். பிரகாசமுள்ள பல்புகள் நடை முறைக்கு வரவரக் கண்ணின்தன்மை மாறி

அமைகிறது, பழுதாகிறது. ஓயாது போடும் சப்தம் காதைக் கெடுக்கிறது. இவைகள் நவீனகால விஞ்ஞானத்தின் அக்ஞானம் தானே! நாம் மிக முன்னேற்றமான, நாகரிகமான காலத்தில் வாழ்வதாகப் பெருமையடித்துக் கொள்கிறோம். ஆனால் உண்மை நிலைமை வேறு. நாம் மிக அக்ஞானத்தில் மிக அநாகரிகமான காலத்தில் அசுர ஜன்மங்களாக வாழ்கிறோம். எங்கே கொடிய சுயநலமும், ஆசையும், ஆடம்பரமும், வீண் கர்வமும் தலைதூக்கி ஆடுகின்றனவோ அங்கே கெட்டகாலம் உள்ளது. எங்கே எளிமை, தூய்மை, தியாகம், பக்தி இவைகள் பெருகுகின்றனவோ அங்கு நல்ல காலம். வெறும் பொருளாதார முன்னேற்றம் அசுர குணங்களை வளர்க்கும். குண நலனை, பண்பை வளர்ப்பதே உண்மையான முன்னேற்றம், தேசிய வளர்ச்சி, நாகரிகம் ஆகும்.

சில கண்டுபிடிப்புகள் இப்படியும் செய்யலாம் என்று காட்டுதற்கு அரசாங்கக் கலைக்கூடங்களில் மட்டும் காட்சிப் பொருளாக இருக்கவேண்டும். வியாபாரப் பொருளாக அது சமுதாயத்தின் நித்திய வாழ்க்கைக்கு வரக்கூடாது. முன் காலத்தில் ஆகாய விமானம்பற்றி ஆராய்ந்து பறப்பது சாத்தியம் என்பதுவரை கண்டறிந்துவிட்டு இதற்குமேல் இதில் இனிக் கருத்துச் செலுத்தவேண்டாம்; இதில் நன்மையைவிடத் தீமையே அதிகம் என்று முடிவு செய்தனர். ஆகையினால் இந்த ஆராய்ச்சி மேலும் ஏற்படாமல் நிறுத்தப்பட்டுவிட்டது. இப்படி எழுதப்பட்டுள்ள ஓலைச்சுவடி ஒன்றைப்பற்றி ஆசார்ய சுவாமிகளின் உபந்யாசம் ஒன்றில் பகர்ந்துள்ளார். இந்த மனப்பான்மை இப்போது வரவேண்டும். அப்பொழுது சமூகத்துக்கு மிகவும் நன்மை உண்டாகும். உலகம் முழுவதும் ஒரே விளையாட்டு மேடை, ஒரே யுத்தகளம்போன்று ஆகிவிட்டது. அனைவர் மனப்பான்மையும் ஒன்று போல இல்லை. ஒரு தேசம் அழிவுக் கருவி ஒன்றைக் கண்டுபிடித்தால் மற்றதேசம் அதைச் சமாளிக்கக்கூடிய சாதனங்களைக் கண்டுபிடித்துத்தானே ஆகவேண்டும்! எனவே விக்ஞான ஆராய்ச்சி போதும், அதை இத்துடன் நிறுத்திவிட்டு அகவுலகை, கடவுள் தத்துவத்தை ஆராயுங்கள். மிக உயர்ந்த நன்மையடைவீர்கள். விக்ஞான ஆராய்ச்சி தேவைதான். ஆயினும் விக்ஞானத்தின் வரையறைகளை, அதன் தீமைகளை விளக்கிக்காட்டவே எழுதப்பட்டது. ஞானம் நல்லமுறையில் செயல்பட்டால் அது மெய்ஞ்ஞானத்தில்தான் கொண்டுவந்துவிடும். நல்ல மனதுக்கு இவ்வுலகின் சத் அற்ற தன்மை, இதன் சூன்யத்தன்மை எளிதில் பிடிபடுகிறது. கடவுள் நாட்டத்தில் பிரவேசிக்கிறது. மெய்ஞ்ஞானம், சிவஞானமே, பரஞானமே உலகப்பிரசனைகளுக்கெல்லாம் வழியாகும். இதை விடுத்து விக்ஞானம், கலைஞானம், என்று அதிலேயே சுற்றிக் கொண்டிருந்தால் நம்பிக்கொண்டிருந்தால் விமோசனமே இல்லை. பரஞானம், அபர ஞானம் என்று வகைப்படுத்தியிருக்கிறார்கள். கடவுளைத்தவிர மற்ற 64 கலைகளும் மற்ற உலகின் எல்லா ஞானங்களும் அபரா அதாவது மேலானவை அல்ல, அவைகளைத் தெரிவதால் ஆவதென்ன என்று பொருள். அதாவது அறியாமையில் உழல்வதற்கு நிகர். **What is the use of gaining the whole world and losing your own Soul** என்று ஒரு பெரியார் போதிக்கிறார். எதை அறிந்தால் அனைத்தையும் அறிந்தது ஆகுமோ, எதைப் பெற்றால் அனைத்தையும் பெற்றது ஆகுமோ அதுவே பிரம்மம். அதுவே கடவுள் என்று உபநிஷதம் விளக்குகிறது. நம் புண்ணிய பூமியாகிய பாரததேசம் பாரமார்த்திகப் பேற்றையே பெரிதென மதித்துக் கடந்த பல்லாயிரம் ஆண்டுகளாக அதையே தன் உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்து வருகிறது. அப்படிப்பட்ட நம் தேசத்திலேயே பாரமார்த்திக லக்ஷியத்தில் நம்பிக்கையும் பிடிப்பும் அற்று வருவது பெரிய தௌர்பாக்கிய நிலையாகும். நாம் உலகில் சௌக்கியமாக வாழவேண்டும், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவேண்டும். பண்பில், நாகரிகத்தில், ஒழுக்கத்தில், சீலத்தில் தலைசிறந்தவர்களாக விளங்கவேண்டும். அதற்குமேல் முடிவாகக் கடவுள் நாட்டம் கொண்டவர்களாக ஆகவேண்டும். நம் மனம், சொல், செயல் மூன்றும் ஒருமித்துக் கடவுள் நாட்டம் கொள்ள வேண்டும். அதுவே தனி நபரும் சமூகமும் உய்வடைவதற்குரிய வழியாகும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (268) தேன் ஈ பூவுக்குத் தீங்கு செய்யாமல் தேன் அருந்தும். அதுபோல் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாது மனிதன் வாழமுடியுமா?

தேன் ஈ புஷ்பத்தினின்று தேன் எடுப்பதன் வாயிலாகவும், மகரந்தத்தூள் எடுப்பதன் வாயிலாகவும் அந்தச் செடிக்கு அல்லது மரத்துக்கு ஓர் உபகாரம் செய்கிறது. புஷ்பத்தினுள்ள மகரந்தத் தூள்களுள் ஆண் தூள், பெண் தூள் என்னும் இருபால் தூள்கள் உள. ஒரு புஷ்பத்திலிருந்து மற்றொரு புஷ்பத்திற்கு ஈ போகிறபொழுது அதன் தேன் உறிஞ்சும் குழாயில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற மகரந்தத் தூள் வேறு புஷ்பத்திற்குப் போவதன்மூலம் அந்தப் புஷ்பத்தில் உண்டாகும் விதை உறுதி மிக வாய்க்கப்பெற்றதாகிறது. தேன் ஈயின் வாயிலாக அந்த உதவி ஸ்தாவரத்துக்கு உண்டாகிறது. ஆதலால் தேன் ஈ வேறு எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாது நலனே செய்யும் பாங்குடையதாக அமைந்திருக்கிறது. அத்தகைய அமைப்பை இயற்கையின்கண் காண்பது அரிதிலும் அரிது. பொதுப்பட உயிர் வாழும் ஜீவ ஜந்துக்கள் பரஸ்பரம் நலன்புரிந்துகொள்ளுவது ஒருபுறம் இருக்க ஏதேனும் ஒரு விதத்தில் வேறு சில உயிர் வகைகளுக்குத் தீங்கையோ அழிவையோ செய்யாது எந்த உயிரும் வாழ்ந்திருக்க முடியாது. அந்த நியதிக்கு மனிதனும் உட்பட்டவனாகிறான். மனிதன் உண்ணும் உணவு உயிர்த்தத்துவம் நிறைந்தது. ஒவ்வோர் அரிசியிலும், இலையிலும், காயிலும் உயிர் இருக்கிறது. அத்தகைய உயிரைத் துடைத்துத் தள்ளாது மனிதன் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. எண்ணெய் அழிவதால் தீபம் எரிகிறது. அங்ஙனம் ஸ்தாவர ஜங்கம உயிர்வகைகளை அழிப்பதால் மனிதன் உயிர்வாழ்ந்திருக்கிறான். இத்தகைய கேட்டைத் தவிர்க்க அவனுக்கு இயலாது. தான் வாழ்ந்து வருவதில், கேட்டுக்கு ஈடாகத் தன்னுடைய ஜீவிதம் மற்றவர்களுக்குப் பயன்படும்படி வாழ்ந்திருப்பது ஒன்றேதான் விளைவித்த கேட்டுக்கு ஈடாகிறது.

மக்களுள் சிலர் பிறர்க்குத் தீங்கு செய்வதிலேயே ஊக்கம் படைத்திருக்கின்றனர். அது அரக்கத் தன்மை. முற்றிலும் அதைத் தவிர்க்க வேண்டும். உணவு உண்ணுதல் என்னும் செயலை மனிதன் ஒதுக்கிவைக்க முடியாது. அதனால் விளையும் தீங்கையும் தவிர்க்க அவனுக்கு இயலாது. அதற்கு ஈடாக அவன் பன்மடங்கு அதிகமாக உலகுக்குத் தன் உழைப்பின் வாயிலாகப் பயன்பட்டு வருவதே தீங்கைக் குறைப்பதற்கு உற்ற உபாயமாம்.

கேள்வி ; (269) காலஞ்சென்ற பெற்றோர்களுக்கு ஆண் சந்ததி இல்லாதுபோனால் பெண் சந்ததி ஈமக்கிரியை, சிரார்த்தம் முதலியன செய்யலாமா?

இதுகாறும் நம் நாட்டில் ஐதிகமாக வந்துள்ள ஈமக்கிரியைகள், சிரார்த்த சடங்குகள் முதலியவற்றை ஆண்பாலரே செய்து வந்தனர். காலம் சென்ற ஒருவனுக்குச் சொந்த ஆண்மகப்பேறு இல்லாவிட்டால் அவனுக்குச் சொந்தமாயுள்ள தாயாதிகளுள் ஆண்பாலர் அக்கடமையைச் செய்து வந்தனர். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் சிலர்க்குப் பொருத்தமான தாயாதிகள் அமைவதில்லை. அப்படி அமையாதவிடத்துக் காலஞ்சென்ற தாய்தந்தையரிடத்துப் பற்றுதல் வைத்துள்ள பெண்பாலர் ஈமக்கிரியைகளையும் சிரார்த்தக் கடமைகளையும் செய்வது சாலச் சிறந்தது. வழக்கத்தில் இல்லாதது எதையும் புதியதாக வழக்கத்தில் கொண்டு வரலாகாது என்னும் மனப்பான்மை பாராட்டத் தக்கதன்று. பழையன கழிதல், புதியன புகுதல் இயற்கையின் பாங்கு ஆகும். இன்றைக்குப் பெண்பாலர் பல துறைகளில் புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகாய விமானம் ஓட்டுவது, போலீஸ் உத்தியோகம் பண்ணுவது, நீதிமன்ற உத்தியோகம் பண்ணுவது, படையெடுத்துச் சண்டைக்குப் போவது பெண்பாலர்க்குச் சாத்தியமென்றால், அத்தகைய நிகழ்ச்சிகள் இன்றைக்கு வெற்றிகரமாக நிறைவேறி வருகிறதென்றால் நிச்சயமாகவே ஈமக்கிரியைகளிலும் சிரார்த்தங்களிலும் தேவை ஏற்பட்டால் அவர்கள் அத்தகைய செயல்களை நிறைவேற்றி வைக்கலாம். ஐதிகமாக வந்துள்ள கிரியைகள் சிலவற்றை

மாற்றியமைப்பதில் குறை ஏதுமில்லை. திருஷ்டாந்தமாகக் காலஞ்சென்றவர்களின் அஸ்தியை எடுத்துக்கொண்டு காசி, ராமேஸ்வரம் போய் ஆங்குச் சிரார்த்தங்களைநிறைவேற்றுவதுஐதிகமாக இருந்து வருகிறது. பெண்பாலர் அத்தகைய நெடுந்தூரப் பயணம் போவது இடைஞ்சல் என்றால் அப்படிப் போகாமலேயே அருகிலுள்ள ஒரு நதிக்கரையில் தங்கள் வசதிக்கும் மனப்பான்மைக்கும் ஏற்ப மிகச் சுருக்கமாக அச்சடங்கை செய்து முடிக்கலாம். செயலிலும் மிக்கது காலஞ் சென்றவர்களிடம் வைத்திருக்கும் தீவிர அன்பாம். அத்தகைய அன்பை உறுதிப்படுத்துதற்குத் தங்களுக்குத் தோன்றியபடி கிரியைகளை மாற்றியமைப்பதில் ஒரு பொழுதும் தோஷமில்லை. எனவே பெண்பாலர்க்கு அத்தகைய நெருக்கடி நேருங்கால் தங்கள் பாங்குக்கேற்பப் பெற்றோர்க்குச் சிரார்த்தத்தைப் புரோகிதர் துணையின்றியே தங்கள்போக்கில் செய்து முடிக்கலாம். நலனே அதன் விளைவாகும்.

கேள்வி (270): சபரியைப்போல் நாமும் பழங்களை ருசிபார்த்து இறைவனுக்குப் படைக்கலாமா?

கடவுள் வழிபாட்டில் லோகாசாரம் தேசாச்சாரம் என்பன முக்கியமான இடம் பெற்று வருகின்றன. ஒரு தேசாச்சாரப்படி ஒரே தட்டிலிருந்து பலபேர் உணவு எடுத்து உண்டு வருகின்றனர். ஒருவர் எச்சில் பட்டதை மற்றொருவர் உண்ணலாகாது என்னும் கோட்பாட்டில் அவர்கள் ஊறி வளர்ந்தவர்கள் அல்லர். எச்சில்படுதலில் தோஷம் எதையும் அன்னவர்கள் அறிந்திலர். அத்தகைய ஐதிகத்தில் ஊறியவர்கள் தங்கள் எச்சில்பட்ட உணவைத் தாங்கள் வழிபடும் தெய்வத்துக்கும் படைக்கலாம். அப்படிச் செய்வது பக்திக்கு இடைஞ்சலாகாது. ஆனால் நம்நாட்டு ஆசாரம் அத்தகைய செயலுக்கு அனுமதி கொடுக்காது. எச்சில் படாத உணவையே நம்மவர்கள் தெய்வத்துக்கு நைவேத்யமாகப் படைத்துப் பழகி வரவேண்டும். பக்தியில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததினால் சபரிக்குத் தான் செய்த செயல் சதாசாரத்துக்கு ஒத்து வராது என்னும் எண்ணம் அவள் உள்ளத்தில் உதிக்கவில்லை, ஆதலால் அவள் சுவைத்துப் பார்த்துவிட்டு நல்ல கனிகளை மட்டும் ராமனுக்குப் படைத்தது அவளுடைய பக்திச் செயலாகும். அவள் படைத்திருந்த பக்தியை நாம் இன்னும் படைக்கவில்லை. நம்முடைய தேசாச்சாரம் என்ன என்பது நமக்குத் தெரியும். ஆதலால் மேற்போக்காக நாம் சபரியைப் பின்பற்றலாகாது.

கேள்வி (271): திருப்பதி வேங்கடாசலபதிக்குக் கண்கள் மறைபடுமாறு நாமம் சாத்தியிருப்பதன் கருத்தென்ன?

மஹாவிஷ்ணுவுக்குச் சுந்தரராஜன் என்பது ஒரு பெயர். எங்கெல்லாம் அழகு மிளிர்கிறதோ ஆங்கெல்லாம் தெய்வ சாந்நித்யம் இருப்பது வெளிப்படை. அழகை மேலும் அலங்கரிப்பது நல்ல வழிபாடு ஆகிறது. அழகை அழகற்றதாகப் பண்ணுவது வழிபாடு என்று அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. மக்களுக்கிடையில் தங்கள் உடலை அலங்கரிக்கும் பாங்கில் தாரதம்மியம் உண்டு. பண்பட்டுள்ளவர்கள் இரண்டொரு நகைகளைக்கொண்டு தங்களுடைய உடலழகை மேலும் ஓங்குவிக்கச் செய்கின்றனர். ஏராளமாக நகைகளை அணிந்துகொண்டு இயல்பாகத் தங்களிடம் அமைந்துள்ள அழகை விகாரப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள்.

ஏதோ ஓர் ஐதிகத்தை முன்னிட்டுத் திருப்பதி வேங்கடாசலபதிக்குக் கண்கள் மறைந்துபட்டுப் போகும்படி நாமம் சாத்துகிறார்கள். கண்களை மூடிவைப்பது ஒருபொழுதும் அழகாகாது. அப்பொருந்தாத செயல் இன்றைக்கு ஐதிகமாகத் திருப்பதியில் நிகழ்ந்து வருகிறது. ஒரு சிலர் அதற்கு ஒரு வியாக்யானம் சொல்லுகின்றனர். வேங்கடாசலபதியின் நேர் பார்வையை ஏற்றுக்கொள்ளும் தகுதியோ, வல்லமையோ உலகத்தவர்களுக்கு இல்லை. எனவே வேங்கடாசலபதியின் பார்வை, திருமண்ணின் வாயிலாக ஒருவாறு மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இக்கொள்கை யுக்திக்கோ, தத்துவத்துக்கோ ஒவ்வாது. இதைப் பொருளற்ற ஐதிகம் என ஒதுக்கி வைப்பதே முறை. ஆனால் கோயில் நிர்வாகிகள் ஏதோ ஒரு போக்கில் பொருந்தாத ஐதிகத்தையும் பின்பற்றியே வருகின்றனர். அறிஞர் உலகுக்கு இந்த ஐதிகம் ஒவ்வாது.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

இனி ஆத்மா பஞ்சகோசங்களுக்கு அப்பாற்பட்டது என்பதை அறிந்து கொள்வோம். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம் என்று ஐந்து கோசங்கள் (உறைகள்) உள்ளன. அன்னத்தின் மாறுதல்களான சுக்கிலம், சோணிதம் இவைகள் மூலம் உண்டானதும், ஆறுவித மாறுபாடுகளை உடையதும் (குழந்தைப் பருவம்—பாலப் பருவம்—யுவன்-வாலிபன்—மனிதன்—வயோதிகன் என்கிற சரீர வளர்ச்சி) அன்னத்தினுல் வளர்வதுமான இந்த ஸ்தூல சரீரம் அன்னமய கோசம் எனப்படுகிறது. கர்மேந்திரியங்கள் ஐந்தும் (வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தம்) பிராணன் ஐந்தும் சேர்ந்து பிராணமய கோசம் ஆகும். ஞானேந்திரியங்கள் ஐந்தும் (கண், காது, மூக்கு, நாக்கு, தோல்) மனமும் சேர்ந்தது மனோமயகோசம் ஆகும். ஞானேந்திரியம் ஐந்தும் புத்தியும் சேர்ந்தது விக்ஞானமய கோசம் ஆகியது. ஆனந்தமய கோசம் என்பது **பிரியம், மோதம், பிரமோதம்** என்ற விருத்திகளும் அக்ஞானமும் சேர்ந்தது. தான் விரும்பிய வஸ்துவைப் பார்ப்பதினுல் ஏற்படும் சந்தோஷம் பிரியம் எனப்படும். அந்த வஸ்துவை அடைவதால் ஏற்படும் சந்தோஷம் மோதம் ஆகும். அதையே தான் அனுபவிப்பதால் ஏற்படும் சந்தோஷம் பிரமோதம் எனப்படுகிறது. நன்கு சிந்தித்தால் எவ்வளவு பொருத்தமாக ஆராய்ந்து பிரிவினை செய்துள்ளார்கள் என்பது விளங்கும். ஸ்தூல சரீரத்தின் இருப்பு, அதன் செயல்கள், உணர்தல், அறிதல், ஆனந்தப்படுதல் ஆகியவைகளைக் கோசங்கள் என்று சொல்லியுள்ளார்கள். ஆத்மாவை இவைகள் வாளுக்கு உறை போலும், சிவலிங்கத்துக்குச் சம்புடம் (பெட்டி) போலவும் மாம்பழத்துக்குத் தோல் போலவும் மனிதனுக்குச் சட்டை போலவும் (இவைகள் எப்படி மூடிக் கொண்டிருக்கின்றனவோ அப்படி) மூடிக்கொண்டிருக்கின்றன. அதனுல் இதற்குக் கோசம் என்று பெயர் வந்தது.

கேள்வி: வாளும் உறையும் தனித்தனியாக இருக்கின்றன. பஞ்ச கோசங்களோ ஆத்மாவை விட்டுத் தனியாக ஓர் இடத்திலும் இருக்கவில்லை. ஆத்மாவின் இருப்பைத்தவிர பஞ்சேந்திரியங்களுக்குத் தனியாக இருப்பே இல்லை. இரண்டு பொருள்கள் தனித்தனியாக இருந்தால்தான் ஒன்று மற்றொன்றை மறைப்பதாகக் கூறமுடியும். ஆகவே பஞ்ச கோசங்கள் ஆத்மாவை மறைப்பதாக எப்படிக் கூற முடியும்?

பதில்: சூரியனுடைய கிரணங்களால்தான் தண்ணீர் மேகமாக ஆகிறது. சூரியன் இல்லாவிட்டால் மேகம் இல்லை. ஆகையால் சூரியன், மேகம் இரண்டின் இருப்பும் ஒன்றுதான். ஆனுலும் மேகம் சூரியனை மறைக்கிறது. அக்னியிலிருந்தே புகை உண்டாகிறது. அக்னியினுல் அதற்கு வாழ்வு, தோற்றம் உண்டாகிறது. இரண்டினுடைய இருப்பும் ஒன்றே. இருந்தாலும் புகை அக்னியை மறைக்கவில்லையா? இதுபோலவே ஆத்மாவின் இருப்பால் தமக்கு இருப்பு உடைய கோசங்கள் ஆத்மாவை மறைக்கின்றன.

இனி ஆத்மா பஞ்சகோசங்களைக் காட்டிலும் வேறுபட்டது என்பதை அறிந்துகொள்வோம். வாளை உறையில் போட்டிருக்கும்போது அவைகளை இரண்டு என்று சொல்லாமல் வாள் என்று ஒன்றுகவே சொல்கிறோம். ஆனுலும் கத்தி உறையைக் காட்டிலும் வேறுதான். அதேபோல பஞ்சகோசங்களை ஆத்மாவுடன் சேர்த்தே நாம் சொன்னபோதிலும் அவை வெவ்வேறானவையே.

கேள்வி: ஆத்மாவையும் கோசங்களையும் ஒன்றுகவே வியவஹாரம் செய்வதால் அவற்றுக்குள் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஆகவே ஆத்மா எதனுடனும் சம்பந்தப்பட்டதில்லை, அது மாசற்றது என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

பதில்: சம்பந்தம் அனேக வகையானது. தர்க்கசாஸ்திரத்தில் சம்பந்தம் இருவகையானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. **1) சமவாய சம்பந்தம் 2) சம்யோக சம்பந்தம்.** சமவாய சம்பந்தம் என்பது அவயவத்திற்கும் அதை உடைய

வஸ்துவுக்கும், குணத்துக்கும் அதை உடைய வஸ்துவுக்கும், செய்கைக்கும், செய்பவனுக்கும், ஜாதிக்கும் அதில் தோன்றிய பொருளுக்கும், விசேஷத்திற்கும் (பூஜை, ஹோமம் போன்ற கிரியைகள்) அதில் பயன்படுத்தும் திரவியங்களுக்கும் உள்ள சம்பந்தம் போன்றது. இப்படிப்பட்ட சமவாய சம்பந்தம் ஆத்மாவுக்கும் ஐந்து கோசங்களுக்கும் சொல்ல முடியாது. ஏனென்றால் இந்த உதாரணத்தில் சொன்ன வகைகளில் ஆத்மா சேராது. ஆத்மாவிற்கு அவயவம் இல்லை, குணம் இல்லை, ஒரு செய்கையும் இல்லை, ஜாதி இல்லை, பால் இல்லை. இரண்டாவதான சம்யோக சம்பந்தம், அதாவது பேரிகைக்கும் அதைத் தட்டும் தடிக்கும் உள்ள சம்பந்தம் போன்றது என்று சொல்லலாமா எனில் அதுவும் இல்லை. ஏனென்றால் ஆத்மா ஏகவஸ்து, அதனோடு சம்பந்தம் வைப்பதற்கு இரண்டாவது வஸ்து இல்லை. இரண்டு வஸ்துக்கள் இருந்தால்தான் சம்யோக சம்பந்தம் சொல்லமுடியும். அப்படியானால் ஆத்மாவுக்கும் ஐந்து கோசங்களுக்கும் உள்ள சம்பந்தம் எந்த வகையானது என்று கேட்டால் கயிற்றுக்கும் அது பாம்பாகத்தோன்றியதற்கும், கிளிஞ்சலுக்கும் அது வெள்ளி போன்று தோன்றியதற்கும் ஆகாயத்திற்கும் அது நீலநிறமாகத் தோன்றுவதற்கும் உள்ள சம்பந்தம் போன்றது. இதற்கு அத்யாச சம்பந்தம் என்று பெயர். அத்யாசம் என்றால் ஒன்றின்மேல் ஏற்பட்ட பொய்பானது, தோற்றம் மாத்திரமானது என்று பொருள். இந்த அத்யாசம் இருவகைப்படும்: 1) **ஏகதர அத்யாசம்** (ஏதாவது ஒன்றுமட்டும் மற்றொன்றில் ஏற்றிக் காணப்படுவது.) 2) **அன்யோன்ய அத்யாசம்** (ஒன்றுக்கொன்று ஏற்றப்பட்டு எது உண்மை என்றே தெரியாத, விளங்காத நிலை) அஹங்காரமும் ஆத்மாவும் ஒரே ஞானத்தால் அறியப்படுவதால் இங்கு ஆத்மாவுக்கும் பஞ்ச கோசங்களுக்கும் அங்யோன்ய சம்பந்தம்தான் உள்ளது.

ஆத்மாவுக்கும் அன்னமயகோசத்துக்கும் ஒன்றுக்கொன்று எப்படி அத்யாசம் காணப்படுகிறது என்று பார்ப்போம். நான் மனிதன், நான் தேவன் என்றும், நான் ஆண், நான் பெண் என்றும், நான் பிறந்தேன், நான் இருக்கிறேன், நான் வளர்ந்திருக்கிறேன், நான் மாறுதல் அடைந்திருக்கிறேன், நான் முதுமை அடைந்துவிட்டேன், நான் இறப்பேன் என்றும், நான் குழந்தை, நான் மாணக்கன், நான் வாலிபன், நான் கிழவன் என்றும், நான் பிராம்மணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் பிரம்மச்சாரி, நான் இல்லறத்தான், நான் வானப்பிரஸ்தன், நான் சந்யாசி என்றும், நான் தமிழன், நான் தெலுங்கன் என்றும் நான் ஸ்ரீவத்ஸ கோத்திரக்காரன், நான் கௌசிக கோத்திரக்காரன் என்றும் நான் ராமன், நான் சங்கரன் என்றும் நான் தீக்ஷிதன், நான் சாஸ்திரி என்றும் நான் யுத்தவீரன், நான் அனுபவிப்பவன் என்றும் அன்னமயகோசத்தில் உள்ள மாறுதல் அடையும் தர்மங்களை ஆத்மாவின் பேரில் சுமத்துகிறோம். (மேலே குறிப்பிட்டுள்ள விவகாரங்கள் அனைத்தும் சரீர சம்பந்தப்பட்டவைகள். நான் என்பது சரீரம் அன்று. அதுஆத்மாவைக் குறிக்கிறது. ஆகவே சரீர தர்மங்கள் அதாவது அன்னமய கோசத்தின் மாறுதலடையும் தர்மங்கள் ஆத்மாவின் பேரில் ஏற்றப்படுகிறது என்று சொல்லப்பட்டது.) ஆத்மாவின் சொரூப லக்ஷணமாகிய சத்-சித்-ஆனந்தத்தை 'என் சரீரம், இருக்கிறது, அது பிரகாசிக்கிறது, பிரியமாக ஆனந்தமாக இருக்கிறது' என்று சரீரத்தின் பேரில் ஆரோபம் (ஏற்றுகிறோம்) செய்கிறோம். இவ்வாறு அன்னமயகோசத்திற்கும் ஆத்மாவிற்கும் ஒன்றுக்கொன்று ஆரோபம் காட்டப்பட்டது.

இனி, பிராணமய கோசத்துக்கும் ஆத்மாவுக்கும் ஒன்றுக்கொன்று எப்படி அத்யாசம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்ப்போம். 'நான் பசி உள்ளவன், எனக்குத் தாகம் உண்டு, நான் பலவான், நான் வீர்யவான், நான் செய்கை உடையவன், நான் பேச்சாளி, நான் கொடையாளி, நான் ஆனந்தமடைபவன் நான் ஊமை, நான் நொண்டி என்றெல்லாம் கூறுவதன் மூலம் பிராணமய கோசத்தின் தர்மங்களை ஆத்மாவின் பேரில் சுமத்துகிறோம். ஆத்மாவின் சத் சித் ஆனந்த தர்மங்களைப் பிராணமய கோசத்தின் பேரில் சுமத்தி 'என்னுடைய பிராணன் இருக்கிறது, விளங்குகிறது, பிரியமாய் இருக்கிறது (अस्ति भाति प्रियं) என்று சொல்லுகிறோம். ஆகவே பிராணமய கோசத்

துக்கும் ஆத்மாவுக்கும் ஒன்றுக்கொன்று அன்யோன்ய சம்பந்தம் இருக்கிறது.

இப்படியே மனோமய கோசத்துக்கும் ஆத்மாவுக்கும் ஒன்றுக்கொன்று பிரித்தறிய முடியாத சம்பந்தம் இருப்பதைப் பார்ப்போம். நான் சங்கல்பமுள்ளவன், நான் விகல்பமுள்ளவன் (சங்கல்பம் என்றால் நாம் இப்போது நாமே எண்ணுவது. விகல்பம் என்றால் பழைய சம்ஸ்காரங்களின் விளைவாக மனதில் தானாக எழும் எண்ணங்கள்.) நான் துக்கத்தை உடையவன், நான் மோஹமடைந்தவன், நான் காமம் உள்ளவன், நான் லோபி, நான் கேட்பவன், நான் பார்ப்பவன், நான் தொடுபவன், நான் சுவை அறிபவன், நான் முகர்பவன், நான் செவிடன், நான் குருடன் என்று மனோமய கோசத்தின் காரியங்களை அதற்குச் சம்பந்தமில்லாத ஆத்மாவின் பேரில் சுமத்தி இரண்டையும் ஒன்றாகவே பேசுகிறோம். ஆத்மாவின் ஸ்வரூபமான சச்சிதானந்த லக்ஷணத்தை மனோமய கோசத்தின் பேரில் ஏற்றி "என் மனம் நன்றாக இருக்கிறது, பிரகாசிக்கிறது" என்று சொல்லுகிறோம். இப்படி ஆத்மாவும் மனோமயகோசமும் ஒன்றுக்கொன்று அத்யாசம் உடையதாக இருக்கின்றன.

விக்ஞானமயகோசத்தில் எப்படி இந்த அத்யாசம் ஏற்படுகிறது என்று பார்ப்போம். நான் செய்பவன், நான் அறிவாளி, நான் யுக்தி உடையவன், நான் எளிதில் அறிந்துகொள்பவன், நான் எல்லா லோகங்களிலும் சஞ்சரிப்பன், நான் ஆசையுள்ளவன், நான் துவேஷமுள்ளவன், நான் வேத அத்யயனம் செய்பவன், நான் பண்டிதன், நான் விரக்தன், நான் பக்திமான், நான் உபாசகன், நான் ஞானி என்று இவ்விதங்களாகச் சொல்லி விக்ஞான மயகோசத்தின் குணங்களை ஆத்மாவின் பேரில் சுமத்துகிறார்கள். ஆத்மாவின் சச்சிதானந்த லக்ஷணங்களை விக்ஞானமய கோசத்தின் மேல் சுமத்தி எனக்குப் புத்தி இருக்கிறது, அது பிரகாசிக்கிறது, அது பிரியமானது என்று சொல்கிறார்கள். இப்படி விக்ஞான மயகோசத்துக்கும் ஆத்மாவுக்கும் அந்யோன்யம், அத்யாசம் காணப்படுகிறது.

ஆனந்தமயகோசத்திற்கும்ஆத்மாவுடன் இப்படியே அத்யாசம் காணப்படுகிறது. நான் அனுபவிக்கிறேன், நான் சுகி (சுகம் உள்ளவன்) நான் சந்தோஷம் அடைந்தவன், நான் ஸாத்விகன், நான் ஜடபுத்தி உடையவன், நான் மூடன், நான் பிராந்தி உள்ளவன் என்று சொல்லி ஆனந்தமய கோசத்தின் மாறுபடும் குணங்கள் ஆத்மாவின் பேரில் சுமத்தப்படுகின்றன. ஆத்மாவின் சச்சிதானந்த லக்ஷணத்தை ஆனந்தமயகோசத்தின் பேரில் ஏற்றி என்னுடைய அக்ஞானம் இருக்கிறது, தெரிகிறது, பிரியமாய் இருக்கிறது என்று சொல்லுகிறோம். இப்படி ஆனந்தமய கோசத்துக்கும் ஆத்மாவிற்கும் ஒன்றுக்கொன்று அத்யாசம் செய்யப்பட்டதாய் இருக்கிறது.

குழந்தை ஒன்று இறந்துவிட்டது. அதன் தாய் இங்ஙனம் பிரலாபித்தாள்: "மகனே, நீ எங்கே போய்விட்டாய்? இதோ உடல் இங்கே கிடக்கிறது. அவயவங்களும் இந்திரியங்களும் அப்படியே உள்ளன. ஆனால் மகனே நீ ஏன் என்னுடன் பேசமாட்டேன் என்கிறாய்? என் கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சியது யார்? என்னிடம் அளவற்ற அன்பைக் கொட்டியது யார்? என்னைக் காணேமே என்று கதறி அழுதது யார்? மகனே என்னைவிட்டு எங்கே போய்விட்டாய்" என்று கதறி அழுதாள். சரீரம், அந்தக்கரணம், பிராணன் இவைகளைச் செயல்படுத்தி இவ் உலகில் ஆத்மா ஜீவனாக வாழ்ந்து வருகிறது. நாடகத்தில் பல வேஷங்களைப் போட்டுக்கொண்டு நண்பர்களே விரோதிகள் போல் நடக்கிறார்கள். பேசிக் கட்சி பிரித்து விளையாடுகிறோம், ஒருவரை ஒருவர்வெல்ல முயல்கிறோம். அதே போன்று ஆத்மா பலவாகப் பிரிந்ததுபோலவும் வேறுபட்டவை போலவும் தோன்றுகிறது.

ஆத்மா பஞ்சகோசங்களுக்கும் அப்பாற்பட்டது. இந்தச் சரீர தர்மங்கள், மனம், புத்தியின் பல்வேறுபட்ட தன்மைகள் எல்லாம் ஆத்மாவைத் தொடமாட்டா; அதில் தோயா. ஆத்மாவின் சன்னிதியில் அவைகள் செயல்படுகின்ற தன்மையை அடைகின்றன. ஆத்மாவே இத்தனையும் ஆகியிருக்கிறது. விதையின் உள்ளே உள்ள ஜீவ சக்தியே பிரமாண்டமான மரமாகியிருக்கிறது. அது போன்று ஆத்மாவே இப்பிரபஞ்சமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

பகவத்கீதையும் காந்தியடிகளும்

(69ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி துருவானந்தர்]

பண்டிதர் ஒருவர் படகில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். கல்வீச் செருக்குற்ற பண்டிதர் படகோட்டியிடம் 'ஏ ஓடக்காரா! ஏதாவது சாஸ்திரம் படித்துள்ளாயா ?' என்ருர். 'ஐயா பெரியவரே! நான் பள்ளிக்கூடத்திற்கே போனதில்லை. எந்தப் புத்தகத்தையும் தொட்டது இல்லை' என்ருன். 'அடபாவமே, உன் வாழ்க்கையை வீணுக்கிவிட்டாயே! இந்தச் சம்சார சாகரத்தை நீந்துவதற்கு ஏதாவது படித்திருந்தால் தானே முடியும்! ஒன்றும் தெரியாது என்று சொல்கிருயே! பரிதாபத்துக்குரியவன் நீ' என்ருர். சிறிது நேரம்ஆனது. நடு ஆற்றில் ஓடம் விரைந்து சென்றுகொண்டிருந்தது. திடீரென்று காற்றுப் பலமாக அடித்து ஓடத்தை ஆடச்செய்தது. அப்பொழுது பண்டிதரைப் பார்த்து ஓடக்காரன் "பண்டிதரே! எனக்கு நூலாராய்ச்சி பண்ணத் தெரியாது. ஆனல் நீந்தத் தெரியும். உங்களுக்கு நீந்தத் தெரியுமா?" என்ருன். பண்டிதருக்கு நீந்தத் தெரியாது. பண்டிதரின் நிலைமை எப்படி இருந்திருக்கும்? நம்மில் பலபேர் இந்தக் குற்றத்திற்கு ஆளாகிருேம். ஏராளமாகப் படித்திருப்பார்கள். படித்ததின் பயன் நற்பண்பைப் பெற்றிருத்தலே என்பதை மறந்திருப்பார்கள். 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்னும் கோட்பாட்டுக்கும் அவர்களுக்கும் வெகு தூரமாக இருக்கும். ஒருவன் தன் வாழ்நாளில் என்ன பேசினுன், என்ன எழுதினுன், என்ன வேலை செய்தான் என்பன முக்கியமல்ல. அவன் எப்படி வாழ்ந்தான் என்பதே ஆராயப்படவேண்டியது. எதிரிகளை வெல்ல வேண்டும் என்று இருந்த அர்ஜுனனுடைய வேகம் நேரம் ஆக ஆகத் தணிந்தது. உள்ளத்தில் உறுதியில்லாததால் வார்த்தையிலும் உறுதி இல்லை. ஆகவே போர் செய்யமாட்டேன். காட்டிற்குச் சென்று தவம் செய்வேன் என்றெல்லாம் புலம்பினுன். குழம்பிய உள்ளத்திலிருந்துதான் குழம்பிய வார்த்தைகள் வருகின்றன. இந்த உண்மையை உணர்ந்த பகவான் அர்ஜுனன் பேச்சை ஒதுக்கித் தள்ளுகிருர். அதுமட்டுமன்று. அவனுக்கு நல்லுரையும் நவிலுகிருர். "அர்ஜுனு, ஞானிபோன்று பேசுகிருய். பாமர மனிதன் போன்று நடந்துகொள்கின்ருய். அது உதவாது. யாருக்காக நீ துயரப்படவேண்டியதில்லையோ அவர்களுக்காக நீ துயருறுகிருய். உயிர் வாழ்ந்திருப்பவர்களைக் குறித்து மகிழவோ, இறந்து போனவர்களைப்பற்றி விசனப்படவோ மாட்டார்கள் ஞானிகள்." இங்ஙனம் சொல்லியதன் மூலம் நமக்குப் பெரிய பாடம் இங்குப் புகட்டப்படுகிறது. நிலையான பரவஸ்துவைப் பற்றிக் கூறும் நூல்கள் வேதாந்த சாஸ்திரங்கள் எனப்படுகின்றன. வேதாந்தம் அனைத்தும் நடைமுறை வாழ்க்கைக்குரியவாம். ஆனல் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவராது வெறும் வாயளவில் பேசித் திருப்தியுற்ருல் அது வாய் வேதாந்தம், திண்ணை வேதாந்தம் என்றெல்லாம் எள்ளி நகையாடப்படுகிறது. வேதாந்த வாழ்க்கை வாழுகின்றவனே வேதாந்தத்திற்கு விளக்கமாகிருன். எதை நினைக்கிருனே அதையே ஒருவன் பேசவேண்டும். சொல்லியபடி நடக்கவேண்டும். அவ்வாறு திரிகரணங்களும் ஒத்திருக்குமளவு அவன் பண்பாடடைந்தவன் ஆகிருன். அவனுக்குத்தான் ஈசனது அருளும் சுரக்கிறது. அவன் பேசுவது நிறைமொழி. அவன் ஆற்றுவது செயற்கரிய செய்கையாம். இது வாழ்க்கை சம்பந்தமான ஒரு பேருண்மை. ஒருவன் நாஸ்திகனுகவிருக்கலாம் அல்லது ஆஸ்திகனுகவிருக்கலாம். ஒருவனுடைய கொள்கை எதுவாகவிருந்தாலும் சரி, அவன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவனுகவிருக்க வேண்டும்.

ஒருவன் நாடகத்தில் துறவியாக நடித்தான். அவனுடைய சிறப்பான நடிப்புக்குப் பரிசு கொடுத்தார்கள். அப்போது அவன் அதை ஏற்கவில்லை. துறவி வேடத்தைக் கலைத்த பிறகு அவனுக்குரிய பரிசைக் கேட்டான். ஏன் கொடுக்கும்போது வாங்கவில்லை என்று அருகே இருந்தவர்கள் கேட்டார்கள். அப்போது நான்

காவியுடை தரித்துத் துறவியாயிருந்தேன். ஆகவே பிறரிடமிருந்து பரிசு எதையும் ஏற்கக் கூடாது என்று சொன்னேன். போடுகிற வேஷத்துக்கு ஏற்ப மனப்பான்மை இருக்க வேண்டும்.

அர்ஜுனனின் அறியாமை நீங்கப் பகவான் அருளுரையை வழங்கிக்கொண்டேயிருந்தார். அப்போது அர்ஜுனன் கேள்வி ஒன்று கேட்டான். நிறைஞானியின் அடையாளம் என்னென்ன? அவர் எப்படியிருப்பார்? எப்படிப் பேசுவார் என்ற சந்தேகங்களைக் கேட்டான். தான் நிறை ஞானிகளைப் பார்க்காவிட்டாலும் அவர்களின் குணச் சிறப்புக்களைத் தெரிந்து கொண்டாலாவது மனதுக்குச் சாந்திதரும் என்று எண்ணி அர்ஜுனன் கேட்டான். ஆனால் சாந்தியின் சின்னமாகப் பரம்பொருளே தன் அருகில் இருந்து ஐயத்தைப் போக்குகிறார் என்பது விசுவரூப தரிசனத்திற்குப் பிறகே அவனுக்குத் தெற்றெனப் புலப்பட்டது. மூன்று கோட்பாட்டில் நிறைஞானியின் இலட்சணம் நன்கு புலப்படுகிறது.

1. மனதில் எழுகிற ஆசைகளையெல்லாம் அகற்றி ஆத்ம சொருபத்தில் நிலைபெற்றிருப்பவன்;

2. பற்று, அச்சம், சினத்தை ஒதுக்கி ஐம்பொறிகளை அடக்கி ஆண்டவனையே சரணு கதியடைபவன்;

3. ஆசையற்று, அகங்காரமற்று, மமகாரமற்று எவன் உள்ளானே அவனே நிறைஞானி. நிறைஞானி ஆக விரும்புகின்றவர்கள் மேற்கண்ட பண்புகளை அடையப் பெறுமளவு உலகுக்குப் பெரிய நலனை வழங்குகிறார்கள். விடுபேற்றை அடைவதால் பிறவிப் பிணியிலிருந்தும் விடுபடுகிறார்கள்.

சான்றோர் ஒருவர் மலேயாவுக்கு வேதாந்தப் பிரசாரத்தின் பொருட்டுச் சென்றிருந்தார். மலேயா அன்பர்கள் அந்த அன்பரிடம் கேள்வி ஒன்று கேட்டார்கள். "ஐயா, முன்பெல்லாம் நாங்கள் இந்தியாவுக்கு வந்து கடவுளைக் கண்ட மகான்கள் எங்குள்ளார்கள் என்று கேட்டால் ரிஷிகேசம் சென்று சிவானந்த சுவாமிகளைப் பாருங்கள்; திருவண்ணாமலை சென்று ரமண மகரிஷியைத் தரிசனம் செய்யுங்கள்; காஞ்சங்காடு சென்று ராம்தாஸ் சுவாமிகளைச் சேவியுங்கள்" என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால் இப்போதைய சூழ்நிலையில் இந்தியாவுக்கு வந்தால் Outstanding personality என்று சொல்லக்கூடிய சான்றோர்கள் இருக்கிறார்களா? என்று கேட்பார்கள். பூரணத்வம் பெற்ற சான்றோர்களை எல்லாக்காலத்தும் காணமுடியாது. சான்றோர்கள் தோன்றுவதற்கு இடம், காலம், அவர்கள் பிறப்பெடுக்க வேண்டிய அவசியம் முதலியவைகளெல்லாம் சரியாக அமையவேண்டும். காரணமில்லாது இந்த உலகில் யாரும் பிறப்பெடுக்கமாட்டார்கள். மகாத்மா காந்தியடிகள் 1869ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி பிறந்தார். அடிமை நாட்டில் பிறந்த காந்தியடிகள் தம்மால் நாட்டிற்குச் சுதந்திரம் வரும் என்று என்றைக்காவது எண்ணிப் பார்த்திருப்பாரா?

அடிமைப்பட்டுக் கிடந்த மக்களுக்கு நல்வழி காட்டி, அஹிம்சை, சத்தியம் முதலிய நற்பண்புகளின் மூலம் தம்மை மேன்மைப்படுத்தி நாட்டுக்கும் சுதந்திரம் வாங்கித் தந்த நடமாடும் தெய்வமாக இலங்கி வந்தவர் அண்ணல் காந்தி அடிகள். அவருடைய எண்ணம் நம் நாட்டிலுள்ள எல்லாக் குடிமக்களுடைய இதயத்தின் அடித்தளத்தையும் தொடக் காரணம் அவர் தம் மனதில் எதை நினைத்தாரோ அதையே சிறிதும் தயக்கமின்றி அஞ்சாது பேசினர். எப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்று அவர் பிறர்க்கு உபதேசம் செய்தாரோ அதையே அவர் தம் வாழ்க்கையில் உறுதியாக, விடாது கடைப்பிடித்து வந்தார். அவரோடு நெருங்கிப் பழகியவர்களும், அவரைப் பற்றிக் கேட்டுத் தெரிந்தவர்களும், அவருடைய நூலைப் படித்தவர்களும் அவர்களையும் அறியாது காந்திஜியின் சத்தியாக்ரஹ வேள்விக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

தங்கள் வீட்டில் எப்படியிருந்தாலும் வெளியூருக்குப் போகிறபொழுது பகட்டான, விலையுயர்ந்த, பலர் பார்த்து வியப்படையும் ஆடையணிகளை அணிந்து வெளியூருக்குச் செல்லுவது இன்றைக்கு நாகரிகமாகக் கருதப்படுகிறது. தங்களிடம் இல்லையென்றாலும் வசதியான தங்கள் உறவினர்கள் வீட்டில் இரவல் நகை, ஆடைகளை வாங்கி அணிந்து தங்களைப்

பெரிதாகக் காட்டிக்கொள்ளும் போலிக் கௌரவம் படைத்தவர்களை இந்நாளில் எங்கும் காணலாம். ஆனால் மகாத்மா காந்தியடிகளுக்கு வட்ட மேஜை மகாநாட்டில் கலந்துகொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தம் ஒல்லியான உடலில் ஒற்றைத் துணியைச் சுற்றிக்கொண்டு கையில் கம்போடு கப்பல் ஏறினார் காந்தி மகான். 'அரை நிர்வாண பக்கிரி' என்று அவருக்குப் பெயர் சூட்டிய ஆங்கிலேயர் அவர் மேல்நாட்டு முறையில் ஆடை அணிந்து வந்தால்தான் வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள முடியும் என்று அவருக்குத் தெரிவித்தனர். "நான் இந்தியாவின் ஏழைகளின் பிரதிநிதியாக இங்கு வந்து நாட்டுக்குச் சுதந்திரத்திற்காக எங்கள் உரிமையைக் கூற வந்திருக்கிறேன். ஏழைகளின் உடை இதுதான். இந்த உடையோடு என்னை இந்தச் சபையினுள் அனுமதிக்கவில்லையென்றால் நான் என் தாய்நாடு செல்லத் தயாராய் இருக்கிறேன்" என்றார். காந்திஜியின் உறுதியும், சுயநலமற்ற எளிமையும் பெரிய அதிகாரிகள் மனதில் மாற்றத்தை விளைவித்தன. அந்த மகாநாடு முடியும்வரை காந்திஜி விரும்புகிற உடையோடு எங்களுடன் இருந்து கலந்து உரையாடலாம் என்று சம்மதம் தெரிவித்துச் சட்டத்தையும் அதுவரை தளர்த்தினார்கள்.

1900ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தருக்கு உடல் நலம் குன்றியது. ஓய்வு தேவைப்பட்டது. ஆகவே அவரை யாரும்பார்க்கக்கூடாது என்று மருத்துவர் கூறியிருந்தார். காந்தியடிகள் அவ்வமயம் சுவாமி விவேகானந்தரைப் பார்க்க விரும்பியும் மேற்கூறிய தடையால் விவேகானந்தரைக் காந்தியடிகள் சந்திக்க முடியவில்லை. ஆனால் ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ்யர்களுள் ஒருவரான சுவாமி துரியானந்தர் கங்கல் ஆஸ்ரமத்தில் தங்கியிருந்தபொழுது மகாத்மா காந்தியின் சொற்பொழிவு, பிரார்த்தனைக் கூட்டங்களில் பொது மக்களோடு அவரும் கலந்துகொண்டார். அப்போது அவர் விடுத்த கருத்தாவது: "காந்திஜியை ஒரு சக்தி வழிநடாத்திச் செல்லுவதைக் காணுகிறேன். இவரால்தான் நம் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைக்கப்போகிறது. ஆனால் அதை நான் காணமுடியாது" என்றார். ஏனென்றால் 1922ல் சுவாமி துரியானந்தர் உடலை உகுத்துவிட்டார்.

கவிஞர்கள் மனதில் அவர்தம் வாழ்க்கை எத்தகைய கவிதையை உண்டு பண்ணியுள்ளது என்பதற்குக் கீழ்க்காணும் கவிதையே சான்று.

உடைமை தனக்கென ஒருபொருள் வேண்டான்
உயிரையும் பிறர்க்கென உதவுதல் பூண்டான்
கடமை என்பது கருணையைப் புரிகிற
காரியம் அல்லது வேறிலை எனும் ஒரு
விருப்பும் வெறுப்பும் தொடரா விரதன்
வேற்றுமையாவிலும் ஒற்றுமை கருதும்
சிரிப்பும் மகிழ்ச்சியும் பரப்பிடும் செல்வன்
சினமெனும் தீமையைச் சிறைசெய்ய வல்லன்.

பகவத்கீதை கர்மத்தைச் செய்; கர்ம பலனில் பற்று வைக்காதே என்று புகட்டுகின்றது. காந்தியடிகளின் வாழ்க்கை அதற்கேற்ப அமைந்திருந்தது. அவர் தமக்காக எக்கர்மத்தையும் செய்யவில்லை. நாட்டு மக்களின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டார். அதை முன்னிட்டுத் தமக்கு வந்த இன்னல்களை மகிழ்ச்சியோடு ஏற்றார். சுதந்திரப் போராட்டத்தில் சிறை புகுந்தார்; அடிபட்டார். சிறைச்சாலையைத் தவச்சாலையாக மாற்றினார். சுதந்திரத்துக்காகப் போராடுவது தம் கடமை என்று உணர்ந்து அக்கடமையை ஈசுவர ஆராதனையாகச் செய்து வந்தார். காந்தியடிகள் போன்று கர்மயோகம் செய்கின்ற கர்மயோகிகளுக்கு ஆசையில்லை. அவர்கள்தாம் நாட்டுக்கு உண்மையான சேவை செய்கிறார்கள். கர்மயோகிகள் மூலம் அரிய பெரிய செயல் நிகழ்கிறது. யாருடைய மனதில் ஆசை அகலுகிறதோ அவர் மூலம் அரியசெயல் நிகழ்கிறது. இது வரையிலும் எந்த நாடும் இந்தியா போன்று யுத்தம் இன்றி, இரத்தம் சிந்தாது சுதந்திரம் பெற்றதில்லை. இந்தியா சாத்வீக முறையில் சுதந்திரம் பெற்றதென்றால் அதற்குக் காந்தியடிகளின் நிஷ்காமிய கர்மமே காரணம் ஆகும். காந்தியடிகள் சுதந்திரத்துக்காகச்செய்த செயல்கள் மூலம் தமக்குச் சுதந்திரத்தைத் தேடிக்கொண்டார். பயன்கருதாது செய்யும் செயல்மூலம் ஒருவருக்குச் சுதந்திரம் கிடைக்கிறது என்பதற்குக் காந்தியடிகளின் வாழ்க்கையே சிறந்த சான்றாகின்றது. (தொடரும்)

அமரநாத யாத்திரை

(75ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

இரவு 8 மணிக்குக்கூடச் சூரிய வெளிச்சம் இருக்கிறது. 8-30 மணிக்கு ஸ்ரீநகரை அடைந் தோம். ஸ்ரீநகர் கடல் மட்டத்திலிருந்து 1768 மீட்டர் உயரத்தில் உள்ளது. இங்குக் கம்பள உடை அவசியமாக இல்லை. ஏற்கனவே ஏற் பாடு செய்திருந்த 'ரிவர்வியூ ஓட்டலில்' தங்கினோம்.

உலகப் பூந்தோட்டம் என அழைக்கப்படும் ஸ்ரீநகர் ஜீலம் நதியின் இருமருங்கிலும் அமைந் திருக்கிறது. சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் மலைச் சிகரங்கள் பசுமையுடன் வானளாவி நிற் கின்றன. பெரிய நீர்நிலைகள் பலநிறப் புஷ் பங்களுடன் இயற்கை எழிலின் உச்சநிலையை விளக்கிக் காட்டுகின்றன. இந்தியாவின் எல் லாப்பகுதி மக்களையும் அங்கு எப்போதும் காணலாம். வயலில் நெற்பயிர்களும், வரப்புக் களில் குலை குலையாக உள்ள காய்கள் கிளை களை வளைத்துக்கொண்டு இருக்கும் ஆப்பிள் மரங்களும் காணற்கரியகாட்சியாகும். காஷ்மீர் அற்புதங்களில் ஒன்று ஒரே வயலில் காலிப்ள வரும், கத்தரியும், வெண்டையும் முட்டைக் கோசும் பக்கம் பக்கம் செழுமையாக விளைவது ஆகும். அங்குள்ள விவசாயிகள் நதியோரங் களில் மிகச் சிறிய இடங்களிலும் வயல் அமைத்து நெற்பயிர் செய்திருப்பது பாராட்டு தற்குரியது. நெற்பயிர்கள் பசுமை, செம்மை, கருமை நிறங்களில் இருப்பதை அங்கேதான் காணமுடியும். பல வர்ணங்களில் ஆப்பிள் பழங்கள் மலிவான விலைக்கு வழிநெடுகிலும் கிடைக்கின்றன. இங்கு அக்ருட், பாதாம், மாதுளை, ஆல்பொக்காரா, ஆப்பிள் முதலிய பழ வகைகள் நிறையக் கிடைக்கின்றன. குங்குமப் பூ இங்கேதான் உண்டாகிறது. அதனுடைய நிறமும், மணமும் அலாதியானவை. இங்குள்ள பெரிய ஏரிகளில் மிதக்கும் தோட்டத்தைக் காணலாம். இங்குள்ள மரங்கள் சித்திர வேலைக்கு ஏற்றதாய் இருக்கின்றன. அவற்றில் பலவகையான சித்திரவேலைகள் செய்து விற் பனை செய்து வருகிறார்கள். கடைகளில் பட்டு, கம்பளித் துணிவகைகள், காஷ்மீரின் கைவினைப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக் கின்றன. ஸ்ரீநகரில் மட்டும் அமைந்திருக்கும் வசதி என்னவெனில் முடிதிருத்தும் நிலையங் களில் குளிப்பதற்கு வெந்நீர் அறைகள் அமைத்து வைத்துக் கட்டணம் வாங்கிக் கொண்டு குளிக்க வசதி செய்திருக்கிறார்கள்.

22ஆம் தேதி காலையில் ஜீலம் நதியில் ஸ்நா னம் செய்தோம். கரையில் அமைந்துள்ள ஸ்ரீஹனுமான் ஆலயத்தில் அழகிய சலவைக் கல்லால் ஆன ஸ்ரீ பஞ்சமுகீஸ்வரர் லிங்கம் உள்ளது. அங்குத் தரிசனம் செய்துவிட்டு ஐக்கிய வணக்கம் செய்தோம்.

காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு ஒரு பஸ்ஸும் வேனும் அமர்த்திக்கொண்டு 24 கி.மீ. தூரத் தில் உள்ள க்ஷீர் பவானி ஆலயத்திற்குச் சென் றோம். சுற்றிலும் வர்ண நீரூற்றுக்கள் சூழ்ந் திருக்க மத்தியில் உள்ள மேடையில் அழகிய கோபுரத்தின் கீழ் அன்னை பவானி அமர்ந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கிறாள். மிக அழ கான—அமைதியான சூழ்நிலை. தினந்தோறும் அநேகம்பேர் வந்து வழிபடுகிறார்கள். சுவாமி விவேகானந்தர், சுவாமி ராமதீர்த்தர் போன்ற பெரியோர்கள் அங்குச் சென்று வழிபட்டிருக் கிறார்கள். சுவாமி விவேகானந்தர் சென்றிருந்த போது ஆலயம் பழுதுபட்டிருந்தது. அதைச் செப்பனிட வேண்டுமென எண்ணினார். அப் போது அன்னை பவானி அவருக்கு ஞானக் காட்சியில் "நீ என்னைப் பாதுகாக்கின்றாயா? நான் உன்னைப் பாதுகாக்கின்றேனா?" எனக் கேட்டாள். ஆலயத்தைச் செப்பனிடும் எண் ணத்தை மாற்றிக்கொண்டு திரும்பிவிட்டார் சுவாமிஜி. இப்போது அங்குச் சலவைக்கல் மண்டபமும், தங்க விமானமும் அமைத்து இருக்கிறார்கள்.

பிற்பகலில் பிரசித்திபெற்ற ஷாலிமார் பார்க், நிஷாத் பார்க், சஷ்மாஷாஹி ஆகிய மொகலாயப் பூந்தோட்டங்களைக்கண்டு மகிழ்ந் தோம். டல்ஜீல் என்பது ஸ்ரீநகரில் உள்ள

பெரிய ஏரியாகும். இது 6 கி. மீ. நீளமும் 3. கி. மீ. அகலமும் உள்ளதால் படகு மூலம் ஏரியின் மத்தியில் உள்ள நேரு பார்க் சென்று திரும்பினேம். ஏராளமான அழகிய படகு வீடுகள் உல்லாசப் பயணிகளுக்கு வாடகைக்குத் தரப்படுகின்றன. வெளிநாட்டவர்கள் அதிகமாக இவற்றைப் பயன்படுத்துகிருர்கள்.

23ஆந் தேதி காலை இரு பஸ்கள்மூலம் பஹல்காம் புறப்பட்டோம். ஸ்ரீ நகரில் எங்களுடன் ஆங்கிலேயர் ஒருவரும், கோவை, சென்னை, மதுரையிலிருந்து அறுவரும் வந்து சேர்ந்துகொண்டதால் எங்கள் குழுவினரின் எண்ணிக்கை 69 ஆகியது. ஸ்ரீநகரிலிருந்து பஹல்காம் செல்லும் வழியில் 13 கிலோ மீட்டர் தூரத்தில் பாம்பூர் என்னும் ஊர் உள்ளது. இங்கு விளையும் குங்குமப்பூ உயர்ந்த ரகமானது. 64 கிலோமீட்டர் தூரத்தில் மட்டன் என்னும் ஊர் உள்ளது. அங்கு அனந்த நாக் என்னும் நதியின் உற்பத்தி ஸ்தானம் இருக்கிறது. அந்த ஊற்றைச் சுற்றிலும் குளம் போன்று சுவர் அமைத்து அதன்கரையில் சிவலிங்கமும், துவாரகாநாத் என்னும் கிருஷ்ணன் விக்ரஹமும் வைத்துச் சிறிய கோவில் கட்டியுள்ளார்கள். பஹல்காம் செல்பவர்கள் இந்த ஊற்றில் குளித்துக் கோவில்களில் வழி பாடு செய்து போகிருர்கள். ஊற்றுத் தண்ணீர் பளிங்குபோல் தெளிந்ததாகவும் தூய தாகவும் இருக்கின்றது. குளத்தில் பெரிய பெரிய மீன்கள் நிரம்பத் துள்ளி விளையாடுகின்றன. யாத்ரீகர்கள் அவைகளுக்குப் பொரி, ரொட்டி முதலியன வாங்கிப்போட்டு அவைகளைக் கண்டுகளிக்கிருர்கள். இந்திரன் அகலையை விரும்பியதன் மூலம் கௌதமரால் ஏற்பட்ட சாபத்தைத் தீர்க்க இக்குளத்தில் நீராடிச் சிவலிங்கத்தை வணங்கிப் பாப விமோசனம் அடைந்தான் என்று புராணக் கதை சொல்லப்படுகிறது. மட்டனிலிருந்து பஹல்காம் செல்லும் பாதை லீதர் நதியை ஒட்டியே செல்கிறது. இந்த நதியிலும் மீன்கள் ஏராளமாகத் தென்படுகின்றன. பாதையின் இருபுறங்களிலும் ஆப்பிள், மாதுளை போன்ற பலவகைப் பழத்தோட்டங்களைக் கண்டு களித்துக்கொண்டே போகலாம்.

பஹல்காம்

அமரநாத குகையை அடையும் யாத்திரையில் முதல் முகாம் பஹல்காம். இங்கு யாத்ரிகர்கள் வசதிக்கேற்பத் தங்குவதற்குக் கூடாரங்கள், சாதாரண அறைகள், எல்லா வசதிகளோடும் கூடிய அறைகள் வாடகைக்குக் கிடைக்கின்றன. இந்த ஊர் கடல் மட்டத்திலிருந்து 6700 அடி உயரத்தில் உள்ளதால் வெப்பமே இல்லாது உள்ளது. நதிக் கரையில் உயர்ந்த மலைச் சிகரங்களுக்கிடையில் இந்த ஊர் அமைந்திருப்பதால் இதன் இயற்கையழகு கவினுறும் காட்சியாக அமைந்துள்ளது. நண்பகல் 12 மணிக்குப் பஹல்காமை அடைந்தோம். அங்கு 'லால்கோடி' என்ற ஓட்டலில் தங்கினேம்.

அமரநாத யாத்திரைக்கு வேண்டிய சாமான்கள் அனைத்தையும் இங்கேயே ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். மழைக்கோட்டு, கம்பளம், காலுறைகள், கையுறைகள், பனிக் குல்லாய், ஸ்வெட்டர், தலையில் அணியும் மப்ளர், கான்வாஸ் பூட்ஸ், ஊன்றுகோல், மற்றும் குளிர், மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு வேண்டிய உடைகள் அனைத்தையும் பஹல்காமிலேயே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். இவைகளை இங்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். சில யாத்ரிகர்கள் தங்களுடைய யாத்திரைக்கு வேண்டிய இப்பொருட்களை இங்கு வருவதற்கு முன்னதாகவே ஏற்பாடு செய்துகொண்டு வருவதுமுண்டு. முக்கியமாகக் கான்வாஸ் பூட்ஸ் தங்கள் கால் அளவிற்கேற்ப வாங்கி அணிந்து நடந்து பயிற்சி செய்துகொண்டு வருவது நல்லது. இல்லாவிடில் யாத்திரை துன்பம் நிறைந்ததாக இருக்கும். வெந்நீர் வைத்துக் கொள்ளத் தர்மாஸ் பிளாஸ்க், பிஸ்கட், குளுகோஸ் பவுடர், பப்பர்மிட் ஆகியவை இன்றியமையாதன. முதல் உதவிக்கான சில மருந்துகள் கைவசத்தில் இருப்பது நல்லது. யாத்ரிகர்கள் நினைவில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் பளுவைக் குறைப்பதாகும். பஹல்காமிலிருந்து யாத்ரிகர்கள் நடந்தோ, குதிரைகள் மீதோ, மனிதர்கள் தூக்கிச் செல்லும் 'தண்டி' எனப்படும் டோலிகள் மீதமர்ந்தோதான் செல்ல வேண்டும். ஆகையால் பளு

வான சாமான்கள் மிகுதியாக இருந்தால் கொண்டுசெல்வதும் கடினம்; கூலியும் அதிக மாகிவிடும். யாத்திரைக்கு வேண்டிய குதிரை, தண்டி கூலியாட்கள், தங்குவதற்குக் கூடாரங் கள், உணவுப் பொருள்கள் அனைத்தையும் பஹல்காமிலேயே ஏற்பாடு செய்துவிடலாம். இதற்கென அரசாங்கத்தின் சார்பாகச் சுற்று லாப் பயணிகள் அலுவலகமும், தனியார் ஸ்தாபனங்களும் உள்ளன. வசதி உள்ளவர் கள் போட்டோ காமிரா, தொலைநோக்கி ஆதி முதலியன கொண்டுசெல்லலாம். அன்று பிற் பகல் முழுவதும் அமரநாத யாத்திரைக்கு வேண்டிய உடை, வாகனங்கள், தங்குவதற்குக் கூடாரம், படுக்கை வசதி முதலியன ஏற்பாடு செய்தோம்.

எங்கள் திட்டப்படி சந்தன்வாரி, சேஷநாக், பஞ்சதரணி ஆகிய இடங்களில் தங்கி 27ஆம் தேதி குரு பூர்ணிமாவன்று ஸ்ரீ அமரநாதனைத் தரிசிக்க எண்ணியிருந்தோம். மேற்கண்ட இடங்களில் தங்குவதற்குக் கூடாரம், படுக்கை வசதி கிடைக்காததனால், தங்கும் வசதியை முன்னிட்டு 24ஆம் தேதி காலை பஹல்காமி லிருந்து புறப்பட்டுச் சேஷநாக் போய்ச் சேர்வ தாகவும் 25ஆம் தேதி பஞ்சதரணியில் தங்கி, 26ஆம் தேதி தரிசனம் செய்துவிட்டு அன்றும் திரும்பிவந்து சேஷநாக்கில் தங்கி 27ஆம் தேதி பஹல்காம் திரும்புவதாகவும் மாற்றி அமைக்க வேண்டியதாயிற்று. ஒரு கூடாரத்தில் சுமார் 10 பேர் தங்கவும், நபருக்கு ஒரு கட்டில், இரு ரசாய்கள் ஆக 3 இரவுகளுக்கு ஒருவருக்கு ரூ. 150/- விதம் ஸ்ரீ அமரநாத் டிராவல்ஸ் கம்பெனியிடம் பேசி முடித்தோம்.

12 பேர் நடந்தும், 53 பேர் குதிரையிலும், 4 பேர் தண்டியிலும் செல்வதாக முடிவு செய் தோம். அமரநாதம் சென்று தரிசனம் செய்து வரக் குதிரை ஒன்றுக்கு ரூ. 205/-ம் தண்டிக்கு ரூ. 1,200/-ம் சாமான்களை எடுத்துச் செல்லும் குதிரைக்கு ரூ. 185/-ம் ஆகக் குதிரைக்காரர் கள் சங்கத்திடம் பேசி ஏற்பாடு செய்தோம்.

யாத்திரைக்கு அவசியமான கான்வாஸ், காலுறை, கையுறை, மழைக்கோட்டு முதலிய வற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டோம். பூஜைக்கு முந்திரி, திராட்சை, உலர்கனிகளும், ஊன்றுவதற்கு முனையில் நகரப்பூண் கூர்மை யாக அமைக்கப்பட்ட தடியையும் வாங்கிக் கொண்டோம். கம்பள உடைகளுக்கு இதற்கு மேல்தான் தேவை ஏற்பட்டது. பெரும் பாலோர் சொந்தமாகக் கொண்டு வந்திருந் தார்கள். சிலர் இங்கு விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். இங்குள்ள மக்களுக்கு அமர நாத யாத்திரைவாசிகளுக்குத் தேவையான பொருள்கள் தந்து, வசதிகளைச் செய்து தருவ தும், யாத்திரைக்கான சாமான்களை விற்பனை செய்வதும் தான் ஜீவனோபாயமாக உள்ளது. இங்கு அரசாங்கத்தின் சுற்றுலா அலுவலகம் உள்ளது. அவர்களும் யாத்ரிகர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருகிறார் கள். தொகை சிறிது அதிகமாகும். சுற்றிலும் உள்ள கிராமங்களில் வசிக்கும் முஸ்லீம் மக்கள்தாம் குதிரைகளைக் கொண்டு வருகிறார் கள்; தண்டி தூக்குகிறார்கள். இவர்கள் கள்ளங் கபடமற்றவர்கள். அங்குக் கடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் இந்தியாவிலுள்ள மற்றப் பல யாத்திரை ஸ்தலங்களைப்போலவே இங்கும் முடிந்தவரை யாத்ரிகர்களை ஏமாற்று கிறார்கள்.

புனித குகை நோக்கிப் புறப்பாடு

24ஆம் தேதி காலை பிரார்த்தனை, சிற்றுண் டிக்குப் பிறகு 'ஜெய் ஸ்ரீ அமர்நாத் கி ஜே' என்ற கோஷத்துடன் புறப்பட்டோம். ஏற் கனவே செய்த ஏற்பாட்டின்படி 4 பேர் தண்டி யிலும், 53 பேர் குதிரையிலும், 12 பேர் கால் நடையாகவும் வெகு நாட்கள் ஆர்வத்துடன் எண்ணி வந்த அமரநாத யாத்திரை துவங் கியது. குதிரைக்காரர்கள் பருமன் இல்லாத உடல் உள்ளவர்களை ஏற்றிக்கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். பருமனும் கனமும் உள்ளவர்களை ஏற்றிக்கொள்வதற்குத் தயங்கு கிறார்கள். இதில் சிறிது சிரமம் ஏற்படுகிறது. இரண்டு குதிரைக்கு ஒரு ஆள்தான் கூட வரு கிறான். கூடவே உதவி செய்ய ஆள் தேவைப் படுபவர்கள் தனியாக ரூ. 60 கொடுத்து ஆள் வைத்துக்கொள்ள வேண்டும். எங்கள் குழுவி லும் வயதானவர்கள் சிலபேர் ஆள் அமர்த்திக் கொண்டார்கள்.

பஹல்காமிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள சந்தன்வாரியில் தங்காது ஒரே நாளில் 18 மைல் தூரத்தில் உள்ள இரண்டாவது

தங்குமிடமான சேஷநாக்கிற்கே இரவு தங்குவதற்காகப் போய்ச் சேர வேண்டியிருந்ததால் நடந்துவரத் தீர்மானித்த 12பேர்களும் இரண்டு 'ஜீப்' கார்கள் மூலம் சந்தன்வாரி வரை சென்றோம். நபர் ஒருவருக்கு ரூ. 40 கட்டணமாக வசூலிக்கிறார்கள்.

முன்பு அமரநாத யாத்திரைக்குப் பஹல்காம் வரைதான் வாகன வசதிகள் அமைந்திருந்தன. சமீப காலத்தில்தான் 10 மைல் தூரத்தில் உள்ள 'சந்தன்வாரி' என்னும் முதல் தங்குமிடம் வரை ஜீப்பும், லாரியும் போய்வரப் பாதை அமைத்துள்ளார்கள். அப்பாதையும் நன்றாக அமையவில்லை. பல இடங்கள் ஆபத்தான நிலையில் உள்ளன. 10 மைல் தூரத்திற்கு ஜீப் செல்ல ஒரு மணி நேரம் பிடித்தது.

பஹல்காமிலிருந்து 3 மைல் தூரத்திற்குத் தார் ரோடு அமைந்துள்ளது எஞ்சியுள்ள சாலை மலைச்சரிவில் நதிக்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. வழியில் சிறு கிராமங்கள் உள்ளன. அங்கு மக்காச்சோளம் போன்ற பயிர்களைச் சிறிய அளவில் பயிர் செய்கிறார்கள். இடையிடையே சிறிய சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன.

சந்தன்வாரி 9000 அடி உயரத்தில் உள்ளது. பஹல்காமிலிருந்து 2300 அடி செங்குத்தாக இருப்பதால் குதிரை, தண்டியில் செல்பவர்களுக்கு மலைப் பிரயாணச் சிரமங்கள் இங்கேயே ஆரம்பிக்கின்றன.

எங்கள் குழுவில் வயதான தாய்மார்களும், அன்பர்களும் பலர் குதிரை ஏறிச் செல்லும் அனுபவம் இல்லாதவர்களாக இருந்தார்கள். எப்படி ஏறுவது, அமர்வது, குதிரையை நடத்துவது என்பனவெல்லாம் தெரியாதவர்கள். அதை விடக் குதிரைக்காரனிடம் தங்கள் சிரமங்களைக் கூறிப் பரிகாரம் பெறப் பாஷை இடைஞ்சலாக இருந்தது. அவர்கள் காஷ்மீர், உருது கலந்த ஒருவிதமான பாஷை பேசுபவர்கள். குதிரை ஏற்றத்தில் ஏறும்போது முன் பக்கமாகச் சாய்ந்து கொள்ளவேண்டும். இறக்கத்தில் போகும்போது பின் பக்கமாகச் சாய்ந்து கொள்ளவேண்டும். இதைக் குதிரைக்காரர்கள் சொல்லும் போது புரியாமல் திண்டாடினார்கள். சில சமயம் நேர்மாறாகச் செய்து குதிரைக்காரனுக்குக் கோபத்தை மூட்டி விடுவார்கள். குதிரையை நிறுத்த வேண்டுமானால் கடிவாளத்தைத் தளர்த்தவேண்டும். இழுத்தால் அது வேகமாகச் செல்லும். சாமான் தூக்கி வரும் குதிரைகள் மேலே உராய்ந்து சில சமயம் கீழே தள்ளி விடுகின்ற நிலைமை ஏற்படும். இதற்கிடையில் பசி, தாகங்கள் ஏற்படும். குதிரைமீது போடப்பட்டுள்ள சேணம் கடினமாக இருப்பதால் அது உராய்ந்து உட்காரும் பகுதியில் வலி ஏற்படும். இதற்கெல்லாம் ஒரே பரிகாரம் இறைவனது நாமஜபம் தான். அமரநாதனைக் காணும் ஆவலால் இத்தனை கஷ்டங்களையும் சமாளித்துக் கொள்கின்றனர். பஹல்காமிலிருந்து புறப்படும்போது கையிலேயே ஒரு பையில் பிளாஸ்க் நிறைய வெந்நீர், பிஸ்கட், சாக்லெட், குளுக்கோஸ் போன்றவைகளை வைத்துக் கொண்டால் ஓரளவு உதவியாக இருக்கும்.

தண்டி என்பது ஒரு நாற்காலி போன்ற அமைப்புள்ளது. இரண்டு கழிகளைப் பக்கத்தில் கட்டி முன்னால் இருவரும், பின்னால் இருவருமாகத் தூக்கிச் செல்கிறார்கள். உட்காரும் பகுதி மிருதுவாக இல்லை.

குதிரையில் ஏறிவர முடியாதவர்கள் தண்டியில் வந்தார்கள். பார்வைக்குச் சுகம்போல் தோன்றுகிறது. தூக்கும் பொழுதும், இறக்கும் பொழுதும் எங்கே போட்டு விடுவார்களோ என்று பயந்து நடுங்குகிறார்கள். ஏற்றத்தில் போகும்போது குறுக்கு வழியாகச் செல்கிறார்கள். இருவர் மேட்டிலும் இருவர் பள்ளத்திலும் நடந்து செல்வதால் இவர்கள் பாடு திண்டாட்டமாக உள்ளது. சாதாரணமாகத் தண்டியை நான்கு பேர்கள் தூக்குகிறார்கள். மாற்றிக்கொள்வதற்கு மேலும் இருவர் உடன் வருகிறார்கள். நிறுத்துவதற்கும், இறக்குவதற்கும் என்ன சொல்வதென்று புரியாமல் தண்டியில் செல்பவர்கள் சிரமப்படுகிறார்கள்.

சந்தன்வாரி

நாங்கள் சுமார் 12 மணிக்குச் சந்தன்வாரி போய்ச் சேர்ந்தோம். அமரநாத யாத்திரையில் முகாம் செய்யும் 2வது இடம் இது. இந்த இடம் 9300 அடி உயரத்தில் உள்ளது. இந்த இடம் வரையில் பர் மரங்கள் நன்றாக வளர்ந்துள்ளன. அங்கு ஒரு ஓடை செல்கிறது. பனிக்கட்டி உருகிய நீர் என்பதால் தூய்மையாக

உள்ளது. அங்கு இரண்டு மாதங்களுக்காகச் சில சிற்றுண்டிச் சாலைகள் அமைக்கப்பட்டுள் ளன. யாத்ரிகர்களுக்கு வாடகைக்குவிடத் தனி யார்கள் கூடாரங்கள் அமைத்து வைத்திருக் கிறார்கள். கையில் எடுத்துச் சென்ற சிற்றுண்டி யைச் சாப்பிட்டுவிட்டு மேலும் யாத்திரையைத் தொடர்ந்தோம்.

பொதுவாகச் சந்தன்வாரியை அடைந்ததும் யாத்ரிகர்கள் அங்குத் தங்கி மறுநாள் காலை பிரயாணத்தை ஆரம்பிப்பது வழக்கம். தங்க முடியாதநிலை இருந்ததால் எங்கள் திட்டப்படி நாங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். அமர நாத யாத்திரையின் கடுமையான பகுதி இங் கிருந்தே ஆரம்பித்துவிடுகிறது. சந்தன்வாரி யைத் தாண்டிய உடனே பனிப்பாறைமீது சுமார் ஒரு பர்லாங் செல்ல வேண்டியுள்ளது. பாறைமீது ஜனங்களும் குதிரைகளும் நடந்து செல்வதால் பனிக்கட்டி உடைந்து வெள்ளை மணல்போன்று ஒரு நடைபாதை உண்டா கிறது. அதில் நடந்து செல்வது அவ்வளவு சிரமமாக இல்லை. அதைக் கடந்ததும் பிசுடாப் என்கின்ற 11,200 அடி உயரமுள்ள மலைச்சிக ரம் தென்படுகின்றது. அதன் உச்சியைப் பார்க்கும்போது இவ்வளவு உயரத்திற்கு எப் பொழுது போய்ச்சேரப் போகிறோம் என்ற ஏக்கம் உண்டாகிறது. இருந்தாலும் 'அமர் நாத் கீ ஜே' என்ற கோஷத்தோடு அமரநா தனைத் தரிசிக்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு பிரயாணத்தைத் தொடர்ந்தோம். பாதை வளைந்து வளைந்து ஏற்றமாகவே செல்கிறது. நடந்து செல்லக்கூடியவர்களுக்குக் கால் வலி யைத் தவிர வேறு பயமோ சிரமமோ அதிகம் இல்லை. குதிரையில் செல்பவர்கள் பாடு மிக வும் சிரமம். குதிரை ஏற்றத்தில் ஏறும் போது இயல்பாகப் பின்னால் சாய்கிறார்கள். குதிரைக்கு மலையேறக் கஷ்டமாக இருக்கும் என்பதால் முன்னுக்குச் சாய்ந்து உட்காரும் படி குதிரைக்காரன் சத்தமிடுகிறான். எதிரில் வரும் குதிரைக்குப் பாதை விடுவதற்காகக் குதிரை ஓரமாகச் செல்லும்போது அதிக பயம் உண்டாகிறது. இந்தப் பாதை சில இடங் களில் ஒரு அடி அளவிற்குக் குறுகலாக உள் ளது. அதிலும் மேடு பள்ளங்களாக அமைந் துள்ளது. இங்கெல்லாம் இறைவனின் நாமத் தைத் தவிர வேறு துணை இல்லை. ஒருவருக்கு ஒருவர் அனுதாபம் காட்டுவதைத் தவிர வேறு உதவி செய்யும் நிலைமையில் யாரும் இல்லை. இந்த மலை உச்சியை அடைய மூன்று மணி நேரம் பிடித்தது. உச்சியை அடைந்ததும் எல் லாரும் ஓய்வெடுத்துக்கொண்டோம். அங்குச் சில பிஸ்கட்டுகள் சாப்பிட்டுவிட்டுத் தேநீர் பருகினோம். (தொடரும்)

செய்திகள்

நிகழ்பவை

15-3-81 ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சதேவரின் ஜயந்தி விழா தபோவனத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும். அன்று காலை 6 மணிக்கு ஸ்ரீ ராம கிருஷ்ணரின் திருஉருவப்படத்தைத் திருப்ப ராய்த்துறை சிவாலயத்திற்கு நாமபஜனையுடன் குருகுல மாணவர்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். 9 மணிக்குக் குருகுல மாணவர் களின் பெற்றோர் கூட்டம் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

*22-3-81 ஞாயிற்றுக்கிழமை அன்றுமாலை 6-30 மணிக்கு வடஆற்காடு ஜில்லா வேலூர் ஜனதா கட்சித் திடலில் அருள்நெறிச் சங்கத்தினர் நடத்தும் ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழாவில் **ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகள்** கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.*

*22-3-81 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6-30 மணிக்கு ராமநாதபுரம் ஜில்லா எமனேஸ் வரம் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தில் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி விழாவுக்கு **ஸ்ரீமத் பரானந்த சுவாமிகள்** தலைமை வகிப் பார்கள்.*

*23-3-81 திங்கட்கிழமை காலை 10-30 மணி முதல் 11-30 மணிவரை வடஆற்காடு ஜில்லா கீழ்அரசம்பட்டு அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு **ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகள்** அறவுரை நிகழ்த்துவார்கள்.*

*29-3-81 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் 8 மணிவரை மதுரை ஜில்லா கூடலூர் அருள்மிகு அழகர் சுவாமி கோவிலில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** அந்தர்யோக முறையில் வழிபாடு ஒன்று நடாத்துவார் கள்.*

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை ரூ.	16-00
திருவாசகம்	பிரசார விலை ...	14-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
இராமாயணம்	,, ...	5-00
தினசரி தியானம்	,, ...	3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,, ...	3-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பக்தியோக விளக்கம்	...	6-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	4-00
விவேகானந்த உபநிஷதம்	...	4-00
கடவுளின் வடிவங்கள்	...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	...	3-50
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	...	2-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை ...	2-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
பஜனைப் பாடல்கள்	...	2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்) ...	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
சந்நியாசி	...	1-25
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
சகோதரி நிவேதிதை	...	1-00
காயத்ரீ	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்) ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்) ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
ப்ரஹ்லாதன்	(நாடகம்) ...	1-00

மார்க்கண்டேயன்	(நாடகம்) ரூ.	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	...	0-80
நன்மக்களைப் பெறுதல்	...	0-80
நோய்க்கு இடம் கொடேல்	...	0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்) ...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	0-75
*ஆத்ம சக்தி	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	...	0-60
*ஆலய வழிபாடு	...	0-75
*சூரிய நாராயணன்	...	0-50
*முருகக் கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
சைவன் யார்?	...	0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது?		0-50
*கணபதி	...	0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-40
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
The Bhagavad Gita (10th Imp.)	...	20-00
Sri Lalitambika Sahasranama Stotram	...	10-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	4-00
Ramayana	(do) ...	4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bahagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00
*Key to Higher Life	...	0-75

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறிப்பிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன,

இராமேசுவரம்

இராமேசுவரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்

இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானசுவாமிகள் தபோவனம் நிறுவப்பெற்றிருப்பதால் அதற்கு அருகில் இருக்கும் இராமேசுவரத்துக்கும் நம் அன்பர்கள் போய்வருகிறார்கள். ஆதலால் அங்கு ஒரு கிளை ஸ்தாபனம் பண்ண வேண்டிய அவசியம் உண்டாயிற்று.

ஸ்ரீ ராமநாத சுவாமிகள் திருவருளால் அங்கு நெடுங்காலம் நடைபெற்று வந்திருக்கும் முகுந்தராவ் வெங்கட்ராவ் தர்ம ஸ்தாபனம் சட்டபூர்வமாகத் தபோவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனம் மேல ரத வீதியில் வடமேற்கு மூலையில் இருக்கிறது.

ஏப்ரல் மாதம் 12ம் தேதி ஸ்ரீ ராமநவமி அன்று அங்கு வழக்கமாக நடைபெற்று வந்துள்ள அன்னதான கைங்கரியத்தைப் புதுப்பிக்கிறோம். அதன் முழு விவரம் அப்போதைக்கப்போது தர்ம சக்கரத்தில் வெளியிடப்படும்.

சித்பவானந்த

DHARMA CHAKRAM

Statement about ownership and other particulars about Newspaper 'Dharma Chakram' to be published in the first issue every year after the last day of February.

FORM IV
(See Rule 8)

1.	Place of Publication :	Tirupparaitturai
2.	Periodicity of its Publication :	Monthly
3.	Printer's name :	Swami Sankarananda
	Nationality :	Indian
	Address :	Tapovanam Printing School, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
4.	Publisher's name :	Swami Sankarananda
	Nationality :	Indian
	Address :	Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
5.	Editor's name :	Swami Nithyananda
	Nationality :	Indian
	Address :	Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
6.	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital :	Sri Ramakrishna Tapovanam Tirupparaitturai-639 115, Tiruchi Dt.

I, Sankarananda, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

Sankarananda
Signature of the publisher.

Date : 14—3—81

Edited by SWAMI NITHYANANDA
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.